உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை (28.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 306

சர்வதேச நீதித்துறை வல்லுநர் அமைப்பு வலியுறுத்து

முன்னாள் புலி உறுப்பினர்களை தடுத்து வைத்திருப்பது சட்ட விரோதம்!

பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும்

ஜெனீவா, செப்ரெம்பர் 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களைகத் தடுத்து வைத்திருப்பது சர்வதேசச் சட்டங்களுக்கு விரோதமானது. போரில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்; இல்லையேல் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி உள்ளது சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் அமைப்பு (I.C.J)

அவசர காலச் சட்டத்ததைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதனை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்றும் அந்த அமைப்புக் கண்டித்துள்ளது.

சர்வதேச அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

கடந்த வருடம் போர் முடிவடைந்த காலத்தில் சரணடைந்த - கைதுசெய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் எண்ணாயிரம் பேர் வரை இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடுப்பு முகாம்கள் உலகிலேயே பெரியளவில் நிர்வாகம்

(24ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தொடர்பான வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த போது அங்கு வருகை தந்து பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இடம்பெயர்ந்தோர் சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு இராணுவம் தடை

தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 28

இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்வு இராணுவத் தரப்பினரால் தொடர்ந்து தடுக்கப்பட்டு வந்தால், அதை ஆட்சேபித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாத்வீக போராட்டத்தில் குதிக்கும் என்று வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் சின்னமுறிகண்டி கிராமத்தை சொந்த இடமாகக் கொண்ட 300 குடும்பங்கள் வவுனியா முட்கம்பி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் இக்குடும்பங்களின் மீள்குடியமர்வுக்கு இராணுவத் தரப்பே தடையாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம்மக்கள் சொந்தக் கிராமத்திலேயே மீள்குடியமர விரும்புகின்

(24ஆம் பக்கம் பார்க்க)

பொன்சேகாவின் மனு மீதான விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப்.28

தாம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுவின் விசாரணை நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சரத் பொன்சேகாவுக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ள இரண்டு இராணுவ நீதிமன்ற விசாரணைகள் தொடர்பான அறிக்கையைப் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சே ராஜரட்ணம் மன்றில் சமர்ப்பித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

வலி.வடக்கு மக்களுக்கு சோதனை மேல் சோதனை

கண்ணிகள் அகற்றியமைக்கான உறுதிச் சான்றிதழ் கிடைக்காததால் மீள்குடியமர்வு தாமதம்

பலாலி வரும் பஸில் தலைமையில் இன்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்பாணம்.செப். 28

வலி.வடக்கில் மக்களை மீள்குடியமர்த்தும் செயற்பாடுகளிலுள்ள தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இன்று முக்கிய கலந்துரையாடல் பலாலியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க ஆகியோர் கலந்துகொள்வர்.

வலி.வடக்கில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மக்களைக் குடியமர்த்தும் பணிகளை இன்று ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் மீளக்குடியமர்த்தப்படவுள்ள பிரதேங்களில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன என்பதை உறுதிசெய்யும் சான்றிதழ் இதுவரை கிடைக்காத காரணத்தால் மீள்குடியமர்வுப் பணியை படிப்படியாக மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது

(24ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான் ம.வி.க்கு விடிவு காலம்

20 வருடங்களின் பின் சொந்த இடத்தில்

இன்று முதல் இயங்கத் தொடங்கும்

யாழ்ப்பாணம்,செப்-28

வலி-வடக்கு இதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் மகா வித்தியாலயம் 20 வருடங்களின் பின்னர் இன்று தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க உள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொள்ளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ இந்த வித்தியாலயத்தை உத்தியோகபூர்வமாக வித்தியாலய அதிபர்,வடக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

10 லட்சம் பேரைத் திரட்டி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்த ஐ.தே.க. முஸ்தீபு

கொழும்பு, செப். 28

அரசுக்கு எதிராக 18ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்கள் பூர்த்தியாகும் தினமான டிசம்பர் 8ஆம் திகதி கொழும்பில் பத்து லட்சம் பேரைத் திரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்த ஐ.தே.கட்சி திட்டமிட்டு வருகிறது.

ஐ.தே.கட்சியில் புதிதாக நியமிக்கப்பட்ட பேச்சாளர் மங்கள சமரவீர எம்.பி. இத்தகவலைத் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியிலிருந்து சுயநலன் கருதி சில எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவளித்தாலும் வாக்களித்த மக்கள் இன்னும் ஐ.தே.கட்சியுடன் இருக்கின்றனர். கட்சிக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

வன்னி மக்களின் ரூ 22 இலட்சம் பெறுமதியான நகைகளை விற்ற பணத்தை பங்கிட சிப்பாய்கள் மோதல்; ஒருவர் கொலை!

கொழும்பு, செப். 28

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வன்னி மக்களிடம் அபகரிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை விற்ற சுமார் 22 லட்சம் ரூபா பணத்தை பங்கீட்டுக் கொள்வதில் ஏற்பட்ட மோதலில் ஓர் இராணுவச் சிப்பாய் படுகொலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் குறித்து ஐந்து சந்தேக நபர் கள் எதிர்வரும் 5ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

இக்கொலைச் சம்பவம் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்றது. கொலை செய்யப்பட்ட சிப்பாயின் சடலம் இறம்பைக்குளம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக மதவாச்சி பொலிஸார் கடந்த மாதம் ஐந்து சந்தேக நபர்களைக் கைதுசெய்தனர்.

தற்போது இந்தச் சந்தேகநபர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையிலிருந்து தெரியவருவதாவது:-

வடக்கில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் மன்னார் 15ஆம் இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாயொருவர் குறித்த பிரதேசத்தில் 63 பவுண் (500) கிராம் எடையுள்ள தங்க ஆபரணங்களை அகரித்திருந்தனர்.

இக்கொள்ளைச் சம்பவத்துக்கு அதே முகாமில் பணியாற்றிய இரண்டு இராணுவச் சிப்பாய்கள், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள், இரு சிவிலியன்கள் உட்பட ஐவர் உடந்தையாக இருந்தனர்.

இரண்டு சிவிலியன்களில் ஒருவர் ஓட்டோ சாரதி. மற்றவர் இறைச்சிக் கடையில் பணியாற்றும் ஊழியர்.

தங்க ஆபரணங்களை விற்ற பின்னர் இவர்கள் ஐவரும் அன்று மாகுச் சென்று நன்றாக மது அருந்தினர். பின்னர் பணத்தைப் பங்கிடுவதில் இவர்களிடையே சர்ச்சை ஏற்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்ற சபைக்குப் பிரதிநிதிகளை நியமிக்க மேலும் ஒருவார கால அவகாசம்

கொழும்பு, செப்.28

நாடாளுமன்ற சபைக்குப் பிரதி நிதிகளை நியமிக்கப் பிரதமருக் கும் எதிர்க்கட்சித் தலைவருக் கும் மேலும் ஒருவார காலத்தை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வழங் கியிருக்கிறார் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக கித் துல்கொட் நேற்றுத் தெரிவித்தார்.

18ஆவது அரசமைப்புத் திருத் தத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்ற சபைக்குப் பிரத மரும் எதிர்க்கட்சித் தலைவரும் தமது பிரதிநிதிகளை நியமிக்க வழங்கப்பட்டிருந்த கால அவ காசம் நேற்றுக் காலையுடன் முடி வடைந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் தமது சார் பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எம்.பியான எம்.ஏ. சுமந் திரனை நியமித்திருந்தார். இதை ஏற்க கூட்டமைப்பு மறுத்துவிட் டது. எதிர்க்கட்சித் தலைவர் தமது சார்பாக நியமிக்கும் பிரதிநிதி தொடர்பாக எதிர்க்கட்சித் தலை வருக்கும் சபாநாயகருக்குமிடை யில் முரண்பட்ட கருத்துகள் நில வுகின்றன எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்த நிலையிலேயே சபாநாய கர் மேலும் ஒரு வாரகால அவ காசம் வழங்கியுள்ளார். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நாடாளுமன்ற சபைக்கு நியமிக் கும் பிரதிநிதிகள் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். (சி)

பொன்சேகாவை விடுவிக்கக்கோரி இத்தாலியில் ஞாயிறன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப்.28

சரத் பொன்சேகாவை விடு தலை செய்யும்படி கோரியும் இலங் கையில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தும்படி வலியுறுத்தியும் நேற்றுமுன்தினம் இத்தாலி, மிலானோ நகரில் மாபெரும் ஆர்ப் பாட்டமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

ஆர்ப்பாட்டத்திலும் கூட்டத் திலும் நூற்றுக்கணக்கான இலங்கை யர்கள் பங்குபற்றினர். பொதுக் கூட்டம் மிலானோ நகரின் பிர தான ரயில் நிலையத்துக்கு முன் னால் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திலும் பொதுக் கூட்டத்திலும் ஜனநாயகத் தேசிய முன்னணி நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அர்ஜுண ரணதுங்க எம்.பி. மற் றும் ஐக்கிய தேசியக் கட்சி எம். பி.க்களான டாக்டர் ஜயலத் ஜய வர்த்தன, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டு உரை யாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் முதன்முறை யாக சரத் பொன்சேகா எம்.பியின் புதல்விகளான அபர்ணா பொன் சேகா, அப்சரா பொன்சேகா ஆகிய இருவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

கூரை மீது ஏறி அகதிகள் போராடி எம்மைப் பணிய வைக்க முடியாது

ஆஸ்திரேலிய அமைச்சர் சீற்றம்

போராட்டம் மூலம் ஆஸ்திரே லிய அரசைப் பணிய வைக்க முடியாது என ஆஸ்திரேலிய குடி வரவு அமைச்சர் கிறிஸ் பிரவுண் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய வில்லாவூட் தடுப்பு நிலையக் கூரையின் மீதேறி 9 இலங்கைத் தமிழ் அகதி கள் நடத்திய போராட்டம் தொடர் பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு குடிவரவுத் திணைக் களமும் புகலிடக் கோரிக்கை யாளர்களின் தனிப்பட்ட குணா திசயங்களை ஆராயும். ஆனால் இவ்வாறான போராட்டம் மூலம் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கூறினார் என வெளி விவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சில வேளைகளில் இந்த வாரம் தனிநபர்களின் குடிவரவு அந்தஸ்து மதிப்பீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா வில்லாவூட் தடுப்பு நிலையக் கூரையின் மீதேறி 9இலங்கைத் தமிழர்கள் உட்பட 11 பேர் நீராகாரம் இன்றி 24 மணித்தியாலங்களாகப் போராட் டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந் தப் போராட்டம் கடந்த 21ஆம் திகதி முடிவுக்கு வந்தமை குறிப் பிடத்தக்கது. (சி)

சரத்பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரியும் இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தும்படி வலியுறுத்தியும் இத்தாலி மிலானோ நகரில் நேற்றுமுன்தினம் மாபெரும் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. ஐ.தே.க. எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்தன, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

நிறுத்தப்பட்ட மினி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

யுத்த நெருக்கடியின் போது போக்குவரத்துச் சேவையை நிறுத் தியிருந்த பாதைகள் ஊடாக மீண்டும் தனியார் பஸ் சேவைகளை ஆரம் பிக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சிற்றூர்தி சங்கத்தை அறிவுறுத்தி யுள்ளார்.மேலும் தற்போது ஏற் பட்டுள்ள சுமுகமான சூழ்நிலை யைக் கருத்தில் கொண்டு நிறத் தப்பட்டுள்ள குறிப்பிட்ட பாதை கள் ஊடான போக்குவரத்துச் சேவை களை ஆரம்பித்து மக்கள் எதிர் நோக்கும் அசௌகரியங்களுக் குத் தீர்வு காணுமாறும் அரச அதி பர் கேட்டுள்ளார்.

பஸ் சேவையை மீளவும் ஆரம் பிக்குமாறு அரச அதிபர் அறிவு றுத்தியுள்ள வழிப்பாதைகளின் விவரங்கள் வருமாறு:-

* பருத்தித்துறையிலிருந்து மானிப் பாய் ஊடாக வட்டுக்கோட்டை 767 ஆம் இலக்க பஸ் சேவை
* சாவகச்சேரியில் இருந்து மானிப் பாய் வரையிலான 811 ஆம் இலக்க பஸ் சேவை
* சாவகச்சேசி கனகம்புளியடி யூடாக யாழ்ப்பாணம் வரைக்கும் 794 ஆம் இலக்க பஸ் சேவை
* கச்சாய் ஊடாக யாழ்ப்பாணம் வரை 805ஆம் இலக்க பஸ் சேவை
* யாழ்ப்பாணம்-கேரதீவு 809 ஆம் இலக்க பஸ் சேவையும் இரு பாலை - ஆனைக்கோட்டை ஊடாக நவாலி வரையான 814 ஆம் இலக்க பஸ் சேவையும் -
* யாழ்ப்பாணம் -குளப்பிட்டி ஊடாக தாவடி, மாணிப்பாய், மருதனார்மடம் 771ஆம் இலக்க பஸ் சேவை. (ஒ-9)

மறுசீரமைப்பு யோசனைகளை ரணிலிடம் ஒப்படைக்க சந்தர்ப்பம் கோரி தென் மாகாண ஐ.தே.க. போர்க்கொடி

கொழும்பு, செப். 28

கட்சி மறுசீரமைப்பு யோசனை களைக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் ஒப்படைக்க எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். சந்தர்ப்பம் வழங்கா விட்டால், கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவை நோக்கி எதிர்ப்புப் பேரணி நடத்துவோம். - இப்படி ஐ.தே.கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர்கள் எச் சரித்துள்ளனர்.

இது தொடர்பாக கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன கூறியவை வருமாறு:-

ஐ.தே.கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள், கட்சியின் தீவிர செயற்பாட்டாளர்கள் ஆகியோரில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் கட்சியின் மறுசீரமைப்பு யோசனை ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இந்த யோசனைகளை ஒப்ப டைப்பதற்கு நேரத்தை ஒதுக்கித் தருமாறு நாம் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்குக் கடி தம் ஒன்றை அனுப்பியுள் ளோம். அந்தக் கடிதத்துக்குப் பதில் வழங் காவிட்டால், எமது யோசனைக ளைத் தலைவரிடம் பலவந்தமாக ஒப்படைப்பதற்காக நாம் அமைதி யான முறையில் கட்சியின் தலை மையகமான சிறிகொத்தாவை நோக்கிப் பேரணி ஒன்றை நடத்து வோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் நம்பிக்கையுடன் எதிர்நோக்குவதற்கு கட்சி மறு சீரமைப்பு மிகவும் அவசியமான தாகும்.

எமது மாகாணசபை உறுப்பினர் களிடையே இடம்பெற்ற கலந் துரையாடலின்போது, ரணில் விக் ரமசிங்க கட்சித் தலைவர் பதவி யில் இருந்து விலகவேண்டும் என்றும் திறமையுள்ள ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

ரணில் விக்ரமசிங்க சிரேஷ்ட தலைவராகவும், நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கவேண்டும். அது நடந் தால் அடுத்த தேர்தலில் கட்சியை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல மக்கள் ஆதரவு வழங்கு வர் - என்றார். (சி)

மின்னல் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மண்டூர், செப்.28

கல்முனை, நாவிதன்வெளிப் பிரதேசத்தில் நேற்று மின்னல் தாக்கி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சவளக்கடை கிராமத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த 52 வயதுடைய சம்சுல் லெவ்வை அப்துல் சலாம் என்பவரே இறந்தவர் ஆவார். கிட் டங்கி ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இந்தச் சம் பவம் இடம்பெற்றது.

குடும்பத் தலைவரான இவர் 5 பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை நாவிதன் வெளிப் பிரதேசத்தில் இடியுடன் கூடிய மழை பெய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

பொலிஸ் நிலையங்களின் முறைகேடுகளை கண்காணிப்பதற்கு விசேட குழு அமைப்பு

கொழும்பு , செப். 28

பொலிஸ் நிலையங்கள் மற் றும் பொலிஸ் செயற்திட்டங்கள் போன்றவற்றில் காணப்படும் முறைகேடுகள், வினைத்திற னற்ற தன்மை ஆகியவற்றை கண்காணிப்பதற்காகப் பொலிஸ் மீளமைப்புக் கண்காணிப்புக் குழு வொன்றை பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய அமைத்துள் ளார்.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தலைமையில் இக்குழு உருவாக் கப்பட்டுள்ளது. பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த கமகே அதன் பிரதித் தலைவராகவும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி வித் யாலங்கார அதன் செயலாளராக வும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல பொலிஸ் நிலையங்களில் தமது பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படுவதில்லை எனப் பொது மக்களிடமிருந்து பல முறைப்பாடு கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வினைத் திறனற்ற பல திட்டங்கள் பற்றி எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிப் பொலிஸ் மா அதி பர் காமினி நவரட்ண கூறினார்.

இத்தகைய பொலிஸ் நிலையங் களுக்கு நாம் திடீர் விஜயங்களை மேற்கொள்வோம். வினைத்திற னற்ற தன்மையை முறியடிப் பதே இதன் நோக்கம். மக்களுக் குச் சிநேகமான தொழிற்சார் பொலிஸ் சேவையை வழங்குவதே எமது தொனிப்பொருளாகும் எனவும் அவர் கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் அமைக்கப்பட்ட பொதுமக்கள் உதவி அலுவலகத்திற்குப் பொலிஸ் நிலையங்களின் குறைபாடுகள், அசட்டைகள் தொடர்பாக அதிக மான முறைப்பாடுகள் கிடைத் துள்ளன எனவும் அவர் சொன் னார்.

பொலிஸ் தலைமையகத்தில் இக்குழுவின் செயலகம் அமைக் கப்படவுள்ளது.

இக் குழுவில் 9 பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், 15 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற் றும் உதவிப் பொலிஸ் அத்தியட் சகர்கள் ஆகியோர் அங்கம் வகிக் கின்றனர். (சி)

தமது நாய் கூட அரசுத் தரப்புக்குப் போகாது என்று கூறியவர்கள் இன்று ஹெலியில் சவாரி

பதுளை மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, செப். 28

தனது நாய் கூட அரசு தரப்புக்குப் போகா தென மேடையில் முழங்கியவர்கள் இன்று அரசுப் பக்கம் போய் ஹெலிக்கொப்டரில் வலம் வருகின்றனர் என ஐ.தே.கட்சி பதுளை மாவட்ட உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற் றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

ஹரின் பெர்னாண்டோ எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளது. மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் ஜனாதிபதி இறக்கும்வரை பதவியில் இருக்கக்கூடிய தாக 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

அமெரிக்காவுக்குத் தமது பரிவாரங்களுடன் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்தித்துள் ளார். இச்சந்திப்புகளில் அவரது புதல்வரும் கலந்துகொண்டுள்ளார். எனவே, தமக்குப் பின் தனது புதல்வரைப் பதவியில் அமர்த்த இப் போதே காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளார்.

ஐ.நா. சபையின் 65ஆவது மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதியுடன் 130 பேர் சென்றுள்ளனர். இதற்கென 13 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செல விடப்பட்டுள்ளன. இது இலங்கை மதிப்பில் 1,500 மில்லியன் ரூபா வாகும். மக்களின் வரிப்பணம் இவ்வாறு வீணடிக்கப்படுகின் றது.

விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நெல்லை விற்க முடியா மல் தவிக்கின்றனர். அரசு 29 ரூபாவுக்கு ஒரு கிலோ நெல்லைக் கொள்வனவு செய்வதாக அறிவித் தது. ஆனால், நெல்லைக் கொள் வனவு செய்ய முறையான நட வடிக்கைகளை அரசு மேற் கொள்ளவில்லை. இதனால் விவ சாயிகளுக்குக் குறைந்த விலை யில் தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித் தார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைச்சுக்களில் போதிய அதிகாரங்கள் இல்லை சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையீடு

கொழும்பு, செப்.28

அமைச்சுக்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் தமக்குக் கிடைப்பதில்லையெனவும், தமது அமைச்சுக்களின் செயற்பாடுகளில் வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நபர்களின் தலையீடுகளே தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும், இது தொடர்பாக அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த முறைப்பாடுகளில், தமது அமைச்சுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதிச் செயலகத்திலிருந்தும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கீழ் செயற்படும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்தும் கடும் அழுத்தங்கள் விடுக்கப்படுவதாகவும் அதன் காரணமாக தமது அமைச்சுக்கள் மூலம் எந்தவொரு செயற்பாட்டையும் சுதந்திரமாக நிறைவெற்றிக்கொள்ள இயலாதுள்ளதாகவும் சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு சில சந்தர்ப்பங்களில் அரச கடமைகளை மேற்கொள்வதற்காக அவசியப்படும் அதிகாரங்கள் கூடதமக்கு கிடைப்பதில்லை என்பதையும் அந்த அமைச்சர்கள் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(த-22)

தாளையடி வீதியின் நடுவே குண்டு மீட்பு; பாதையை பாவிக்காதீர் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.28

நாகர்கோவில் இராணுவ முகாமிலிருந்து தாளையடி வீதியின் தென் பகுதியில் 2.8 கிலோமீற்றர் தூரத்தில் எம்-15 ரகத்திலான கண்ணிவெடி ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஏற்கனவே இரணுவத்தால் பாதுகாப்பற்றது என்று அறிவிக்கப்பட்டும் மக்கள் இந்த வீதியை தொடர்ந்தும் பயன்படுத்தி வந்துள்ளனர்.இந்த நிலையிலேயே கண்ணிவெடி வீதியின் மத்தியிலிருந்து மீட்கப் பட்டுள்ளது. அதை அடுத்து இப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

எனவே மறு அறிவித்தல் வரும்வரை இந்த வீதியை மக்கள் பயன்படுத்தவேண்டாம் என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

(ஒ-ஐ-15)

வடக்கு- கிழக்கின் மீன்பிடித் தொழில் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படும்

அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு,செப்.28

அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளின் மீன்பிடித் தொழிலுக்கு புத்துயிரளிக்க ஆவன செய்யுமென மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் ராஜிதசேனாரட்ன தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டுவரை நாட்டின் மீன்தேவையில் 43சதவீதத்தை வடக்கு மற்று கிழக்குப் பிரதேசங்களே பூர்த்தி செய்து வந்தன.இது தற்போது 7 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.இதனை ஆகக்குறைந்தது 36 சத வீதமாக அதிகரிப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஏழைப் பிள்ளைகளிற்கு மீன் உணவுகளை வழங்கி அவர்களின் போசாக்குக் குறைபாட்டினை நீக்குவதே தமது அமைச்சின் குறிக்கோள் எனக் கூறிய அமைச்சர்,போசாக்குக்குறைபாடு இந்த நாட்டில் உள்ள 21 சதவீத குழந்தைகளிடம் காணப்படுவது வெளிப்படையானது என்றும் கூறினார்.

மேலும் உலக சுகாதார ஸ்தாபனம் இந்தப் போசாக்குக் குறைபாட்டினை அடுத்த 3 வருடங்களில் 12 சதவீதமாக,எமது நாட்டில் குறைக்கப்படுமெனக் கூறியுள்ளது.ஆனால் இதனைப் பூச்சிய நிலைக்குள் கொண்டு வருவதே தமத இலக்கு என்றும்அவர் கூறினார்.

இந்த நாட்டின் வருடாந்த மொத்த மீன் உற்பத்தி 3 லட்சத்து 93 ஆயிரம் மெற்றிக் தொன்களாகும்.இதனை 6 லட்சத்து 86 ஆயிரம் மெற்றிக் தொன்களாக (உள்ளூர் தேவைக்காக)அடுத்த மூன்று ஆண்டுகளில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைவிட தற்போது வருடாந்தம் 21 பில்லியன்களாக உள்ள மீன் உணவு ஏற்றுமதி 50 பில்லியனாக அடுத்த 3 ஆண்டுகளில் அதிகரிக்கப்படும்.

அத்துடன் தற்போது மீன்பிடித்துறை 18.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.இது ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது 3ஆவது இடமாகும்.என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(க)

இன்றைய கிரிக்கெட்

வலி வடக்கு செப்.28

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் கிரிக்கெட் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் அளவெட்டி வேல்ட் இலெவன் விளையாட்டுக் கழகமும் ஏழாலை கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஒ-86)

முக்கிய நிகழ்வுகளில் பங்குபற்ற இன்று யாழ். வருகிறார் பஸில்

யாழ்ப்பாணம் செப்.28

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொள்ளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றவிருக்கிறார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும் அமைச்சர் முதலில் வயாவிளான் மகாவித்தியாலயத்தை அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வில் பங்குபற்றுவார்.

அதனைத்தொடர்ந்து கீரிமலைக்குச் செல்லும் அமைச்சர், அந்தப் பகுதியிலிருந்து சுண்ணக்கல் எடுத்துச்செல்லப்படுவதாக தெரிவிக்கப்படும் விவகாரம் குறித்து நேரில் ஆராய்வார்.

அதன்பின் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்துக்குச் செல்லும் அமைச்சர், அங்கு விவசாய அபிவிருத்திக்கு உதவி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளபயிர்த்துண்டங்கள், பதிய வகைகளை பார்வையிடு வார்.

அதனைத் தொடர்ந்து அரியாலை கிழக்கில் இடம்பெறும் ஏர்பூட்டும் விழாவிலும் அமைச்சர் பஸில் கலந்துகொள்வார்.

(ஒ-15)

அரியாலையில் இன்று ஏர் பூட்டும் விழா அமைச்சர் பஸில் ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம்,செப்.28

அரியாலை கிழக்கில் இன்று முற்பகல் 11.15 மணிக்கு ஏர்பூட்டும் விழாவை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பார். இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

உழவர் தொழிலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் இந்த ஏர்பூட்டும் விழாவைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

கைவிடப்பட்ட காணிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்காக விதை நெல்லும் இலவசமாக வழங்கப்படும்.

17 இரு சக்கர உழவுஇயந்திரம் (லான்ட் மாஸ்ரர்), 14 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பனவும் இங்கு வைத்து பஸில் ராஜபக்ஷவினால் வழங்கப்பட உள்ளன. அத்துடன் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாய சம்மேளனங்களுக்கும் 16 லான்ஸ்மாஸ்ரர்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

100 குடும்பங்களுக்கு தலா 7 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம் செப்.28

மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் வன்னியில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய நூறு குடும்பங்களுக்கு வாழ் வாதார உதவித் திட்டத்தின் கீழ் தலா ஏழாயிரம் ரூபா இன்று செவ்வாய்க் கிழமை மு.ப.10 மணிக்கு உடு வில் பிரதேச செயலர் பிரிவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இந்தக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு நாள் ஒன்றுக்கு ஏழுநூறு ரூபா என்ற அடிப்படையில் பத்து நாள்கள் கிராம அலுவலர்கள் மூலம் தமது பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குஉட்பட்டஉடுகிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (ஒ-86)

போக்குவரத்து விழிப்புணர்வுக் கண்காட்சி துரையப்பா விளையாட்டரங்கில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப்.28

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். போக்குவரத்துப் பிரிவுத் தலைமைக் காரியாலயப் பொலிஸாரால் இன்று காலை 8 மணி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மாபெரும் போக்குவரத்து விதிமுறை தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி நடப்படவுள்ளது.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தலைமையில் நடைபெறவுள்ளஇக்கண்காட்சிநிகழ்வை, பிரதம விருந்தினராக வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி.சில்வாவும், சிறப்பு விருந்தினராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோணும் கலந்துகொண்டு ஆரம்பித்து வைப்பர்.

இக்கண்காட்சியில் யாழ். குடாநாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் வாகன சாரதிகளும், பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்களும்பங்குபற்றவுள்ளனர்.

இதில் போக்குவரத்து விதிமுறைகள், வீதி ஒழுங்குகள் மற்றும் விசேடமாக மோப்ப நாய்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

கடந்த முப்பது வருடங்களின் பின்னர் யாழ்ப்பாண மக்களுக்கு நடத்தப்படவுள்ள இவ்விழிப் புணர்வுக் கண்காட்சி நிகழ்வில் அனைத்துப் பொதுமக்களையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ கேட்டுள்ளார். (த-16)

வவுனியாவில் சட்ட விரோதமாகத் தறித்த

பாலை மரங்களை கடத்திவந்த இருவர் சாவகச்சேரி பொலிஸாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம்,செப்.28

வவுனியா கிழவன் குளத்தில் இருந்து சட்டவிரோதமாக பாலை மரக் குற்றிகளைக் கடத்திவந்த இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர். .

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிய வருவதாவது:-

வவுனியா கிழவன்குளம் பகுதியிலுள்ள காணியொன்றில் பாலை மரங்களைச் சட்ட விரோதமாகத் தறித்து அவற்றை லொறியில் ஏ-9 பாதையூடாகக் கடத்தி வந்தவர்களே கைது செய்யப்பட்டதுடன் மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் நேவின் பத்மதேவாவுக்கு பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலை அடுத்து அவரது பணிப்பிற்கிணங்க குறித்த லொறி ஏ-9 வீதியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரிவு ஏ.எஸ்.பி. சனத்குமார தலைமையிலான பொலிஸ் பிரிவினர் இம் மரங்களை கடத்தி வந்த இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ- 16)

லொறி குடை சாய்ந்தவேளை சாரதி அதில் சிக்கி நசியுண்டு மரணம்

வல்லையில் நேற்றுக் காலை சம்பவம்

வடமராட்சி, செப். 28

வல்லைப் பகுதியில் லொறி ஒன்று குடை சாய்ந்த வேளை, அதிலிருந்து தப்புவதற்காகக் குதித்த சாரதி லொறியில் நசியுண்டு மரணமானார்.

நேற்றுக்காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லத்துரை ஜெகன் (35வயது) என்பவரே பலியானவர் ஆவார்.

வலிகாமம் பிரதேசத்திலிருந்து, குடத்தனைக்கு மணல் ஏற்றுவதற்காக வல்லையில் சென்றுகொண்டிருந்தவேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

வீதி அகலிப்புக்காகப் புதிதாகப் பாலம் ஒன்று நிர்மாணிக்கப்படும் இடத்தில் தற்காலிக போக்குவரத்துக்காகப் போடப்பட்டிருந்த மணல் பாதையில் பிரவேசித்தபோது மற்றொரு லொறிக்கு வழிவிட முற்பட்டவேளை லொறிக் குடை சாய்ந்தது.

சாரதியின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ஒ-236-319)

வடமாகாண சபை ரூ.5 மில்லியன் ஒதுக்கீடு

மழைக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் கூடாரத் துணிகள், கூரைத் தகடுகள்

யாழ்ப்பாணம் செப்.28

வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மழைக்கு ஈடுகொடுக்ககூடிய கூடாரத் துணிகள், கூரைத் தகடுகள் என்பவற்றை வழங்கும் முகமாக வடமாகாணசபை 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்படிருந்தவர்கள் தற்போது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

எனினும் தற்போது மழைகாலம் தொடங்கியுள்ளதால் இவர்களின் நிலைமை மோசமாகலாம். இதனைக் கருத்தில் கொண்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அதிகாரிகள் அண்மையில் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர்.

இதன்போது இந்திய அரசாங்கம் வழங்குவதாக இணக்கம் காணப்பட்ட தகரங்களுக்கு மேலதிகமாக மழைக்கு ஈடுகொடுக்கூடிய வகையில் கூடாரத்துணிகள் மற்றும் கூரைத்தகடுகள் போன்றவற்றை வழங்கவென வடமாகாண சபையால் 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குடும்பம் ஒன்றுக்கு 12 கூரைத் தகடுகள் வீதம் வழங்க முடிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் போராளிகள் 2000 பேர் அடுத்த மாதம் விடுவிக்கப்படுவர்

கொழும்பு, செப். 28

புனர்வாழ்வு என்ற பெயரில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் 2000 பேரை அடுத்த மாதமளவில் விடுதலை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அரசின் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜேமுனி சொய்சா தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் தொழிற் பயிற்சிகளை முடித்துக் கொண்ட முன்னாள் போராளிகளுக்கான வேலைவாய்ப்பு முகாம் ஒன்றை அரசாங்கம் வவுனியாவில் நாளையும் நாளை மறுதினமும் நடத்தவுள்ளது.

இந்த முகாமில் நாடாளாவிய ரீதியாக செயற்படும் சுமார் 25 நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன. ஆடைதயாரிப்பு, கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் இந்த முகாமில் பங்கேற்கவுள்ளன.

இறுதிப் போரின் போது அரச படையினரிடம் சரணடைந்த புலிகள் இயக்க போராளிகளுக்கு 12 புனர்வாழ்வு நிலையங்களில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அரசு கூறி வருகின்றது. அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் உறுதி அளித்து வருகின்றது.

எனினும் பயிற்சி அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் பெரும்பாலானவர்களுக்கு இது வரை வேலை வாய்ப்பு எதுவும் வழங்கப்படவில்லை.

தொழிற் பயிற்சி பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்படும் வேளையில் பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து 418 முன்னாள் போராளிகள் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 320 ஆண்களும், 98 பெண்களும் அடங்குவர். இவர்களுக்கு தச்சுவேலை, மின்னியல், அழகுக்கலை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

"ஒக்ரோபர் மாதம் 2000 இற்கும் அதிகமான முன்னாள் போராளிகளை விடுதலை செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதன் பின்னர் தடுப்புக்காவலில் உள்ள முன்னாள் போராளிகளின் எண்ணிக்கை 5000 ஆகக் குறைந்து விடும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை ஒட்டி இடம்பெற்றுவரும் அபிஷேகத்தின் எட்டாவது நாளான நேற்றுமுன்தினம் நாகதம்பிரானுக்கு சந்தனக் காப்பு சாத்தப்பட்டது. சந்தனக் காப்புச் சாத்தி, பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சிவசண்முகக் குருக்கள் பூசைகள் செய்வதைப் படத்தில் காணலாம். பாலஸ்தாபனம் செய்யப்பட்டதால் இம்முறை உற்சவம் நடைபெறவில்லை பதிலாக அபிஷேகம் நடைபெற்றது. (உ)

பஸில் மன்னிப்புக் கோரவேண்டும்; மட்டக்களப்பில் தேர் உண்ணாவிரதம்

கொழும்பு,செப். 28

தம்மை அவமானப்படுத்திய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேரில் வந்து, தம்மிடம் மன்னிப்புக் கேட்கக் வேண்டும் என வலியுறுத்தி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தேரர் ஒருவர் மட்டக்களப்பு நகரில் ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பிரதி பிரதம சங்க நாயகரும், மட்டக்களப்பு ஸ்ரீமங்களாராம ரஜமகா விகாரையின் விகாராதிபதியுமான அம்பட்டிய சுமணரத்ன தேரரே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைத் தாம் சந்திக்க முற்பற்றவேளையில், ஏனைய அமைச்சர்கள், ஊடகவியலாளர்கள், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் தம்மை அமைச்சர் பஸில் விரட்டினார் எனவும்,

இவ்வாறு அமைச்சர் தம்மை அவமானப்படுத்தியமையைக் கண்டித்தே இந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார் எனவும் சுமணரத்ன தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-10)

குண்டு வெடித்து சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்,செப்-28

அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியான மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

மக்கள் மீள் குடியமர்வுக்காக கண்ணிவெடி அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டிருந்தனர். அப்போது தற்செயலாக குண்டு ஒன்று வெடித்ததில் இந்தச் சாவு ஏற்பட்டது என்று பலாலி ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஒ-ஐ)

நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத அளவுக்கு பொன்சேகாவுக்கு சுகவீனம் ஏற்படவில்லை

இன்று ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப்.28

நீதிமன்றில் ஆஜராக முடியாத அளவுக்கு சரத் பொன்சேகாவுக்கு சுகவீனம் ஏற்படவில்லை எனப் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நவரட்ண பண்டா நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியதை அடுத்து பிரதிவாதியான சரத் பொன்சேகா கட்டாயமாக இன்று மன்றில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறுதிக்கட்ட வன்னிப் போரின் போது வெள்ளைக்கொடிகளை ஏந்தி படையினரிடம் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவு பிறப்பித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சண்டே லீடர் செய்தித்தாளுக்குத் தெரிவித்த தகவல் தொடர்பான விசாரணைகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகின.

மேல்நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதிபதிகளின் குழு முன்னிலையில் இந்த விசாரணை இடம் பெற்றது.

பொய்யான தகவல், இனக்கு ரோதத்தைத் தோற்றுவிக்கும் வகையிலான கருத்து மற்றும் அரச விரோத கருத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மனு சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நேற்று சுகவீனம் காரணமாகப் பிரதிவாதியான சரத் பொன்சேகா மன்றில் ஆஜராகவில்லை என அவரின் சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

எனினும், இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நவரட்ண பண்டா, மன்றில் ஆஜராக முடியாத அளவுக்கு சரத் பொன்சேகாவுக்கு சுகவீனம் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. இன்றைய விசாரணையில் பிரதிவாதியான சரத் பொன்சேகா கண்டிப்பாக நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. (சி)

பரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நாடாளுமன்றில் 7ஆம் திகதி வாக்கெடுப்பு

கொழும்பு, செப். 28

வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்வரும் 7ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இணங்கி உள்ளனர்.

அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி முன்மொழிந்துள்ளது.

விவாதம் மீதான வாக்கெடுப்பும் அன்றைய தினமே நடத்தப்படும் என்று அரதரப்பு கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரால் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை எதிர்க்காத அமைச்சர் பீரிஸ், அதனை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு அரச தரப்பு பிரதம கொறடாவைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கு வழங்கி வந்த ஜி.எஸ்.பி. வரிசலுகையை நிறுத்தியப் ஒன்றியம் இடைநிறுத்திய விவகாரத்தில் வெளிவிவகாரத் துறை அமைச்சர் சரிவர நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச் சாட்டையும் உள்ளடக்கியே பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது. (உ)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 27, 2010
பங்குச் சந்தைச் சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI) 6,881.54↓
மிலங்கா(MPI) 7,232.17↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3,696.89Mn
பங்குகளின் அளவு(No.) 108.46Mn
வியாபாரம்(No.) 26751
சந்தை முதல்(Mkt.Cap)Rs. 2,270.55Bn
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
போகல கிறைப்(f)ற் 55.70
ஜே.எல்.மொரிஷன்(x) 1924.00
சி.டபிள்யு.மக்ஹி 79.20
ஜே.எல்.மொரிஷன் 2300.00
ரீவ(f) கொம்பர்ஸ் 18.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
லங்கா ரைல்ஸ் 112.00
யூனியன் அசூரன்ஸ் 163.60
சிலிங்கோ இன்சூரன்ஸ்(x) 372.70
கொல்வீனியன்ஸ் பு(f)ட் 150.00
சிலிங்கோ இன்சூரன்ஸ்498.60
மேலதிக தகவல்கள் -www.cse.lk

ஜனாதிபதி மஹிந்த கடவுளுக்குச் சமமானவரா?

பிரிட்டன் பத்திரிகை எழுப்பும் சந்தேகம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடவுளுக்குச் சமமானவரா என்று வினவி பிரிட்டனில் வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை நேற்று முன்தினம் பத்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

இலங்கையில் பிறந்து பிரித்தானியாவில் வாழ்ந்துவரும் மனிதாபிமானத் தொண்டரும், எழுத்தாளருமான சாவித்திரி கென்ஸ்மன் இப்பத்தியை எழுதியுள்ளார்.

இவர் கடந்த நோன்புப் பெருநாளை ஒட்டிய பொது விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வந்திருந்தார். இங்கு நேரில் அவதானித்த விடயங்களை அப்பத்தியில் எழுதியுள்ளார்.

அவர் எழுதியிருப்பவை வருமாறு:-

நான் கடந்த நோன்புப் பெருநாளை ஒட்டிய பொது விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்குச் சென்றிருந்தேன். புத்தர், யேசு, இந்துக் கடவுள்களின் திருவுருவங்களுக்குப் பதிலாக தென்னிலங்கையில் உள்ள நகரங்கள், கிராமங்கள் தோறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரமாண்டமான 'கட்-அவுட்'டுக்களையே காண முடிந்தது.

நான் அவற்றைப்பார்த்து அதிர்ச்சியடைந்துவிட்டேன். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கடந்த வருடம் மே மாதம் அரசு தோற்கடித்த பிற்பாடு இவரின் 'கட் - அவுட்' டுக்கள்தான் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் காட்சி தருகின்றன.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலம் முதல் இந்நிலைமை தீவிரம் அடைந்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டவர் சரத் பொன்சேகா.

அவர் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றம் ஒன்றால் மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் தண்டனை பெற்றுள்ளார். மஹிந்தரின் அச்சமூட்டும் வருகின்ற ஊடகவியலாளர்கள் மிரட்டப்படுகின்றார்கள் அல்லது கொல்லப்படுகின்றார்கள். சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் படையினர் வன்முறைகளை மேற்கொள்கின்றார்கள். ஆனால், அப்படையினர் தண்டிக்கப்படுவதில்லை.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மிகவும் உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. குறிப்பாக இலங்கையில் ஒருவர் ஜனாதிபதிப் பதவிக்காக ஆகக் கூடியது இரு முறைதான் போட்டியிட முடியும் என்கிற கட்டுப்பாடும் நீக்கப்பட்டுவிட்டது.

ஜனாதிபதிப் பதவிக்காக ஒருவர் எத்தனை தடவையும் போட்டியிட முடியும் என்பது இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் அங்கிகாரம் பெற்றுவிட்டது. இத்திருத்தச் சட்டத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுதந்திரமான செயற்பாடு கூடப் பலவீனம் அடைந்து விட்டது.

குறிப்பாக தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையும், சுதந்திரமான செயற்பாடும் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. பொலிஸார், உயர்நிலை நீதிமன்றங்களின் நீதியரசர்கள் ஆகியோரை நியமனம் செய்கின்றமையில் ஜனாதிபதிக்குக் கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் அரசில் உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த அரசியல் வாரிசாக இவரின் பெயரே அடிபடுகின்றது.

இவரை வரும் காலத்தில் ஜனாதிபதியாக்குகின்றமையே மஹிந்தரின் அதிரடித் திட்டம் என்று நம்பப்படுகின்றது. அரச ஆதரவு இணையத் தளங்கள் நாமல் ராஜபக்ஷவை வருங்கால ஜனாதிபதியாகச் சித்திரிப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

கண்ணுக்குப் புலப்படாத ஆதரவு?

இலங்கை தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கு அந்த நாட்டின் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு எந்தவித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றும் -

இலங்கை சம்பந்தமான விடயங்களில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு மட்டுமே அக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது; எவ்வித சட்ட அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றும் -

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன், தம்மைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெளிவுபடுத்தி இருக்கிறார் குறிப்பிட்ட நிபுணர் குழுவின் விசாரணை தொடர்பாக இலங்கை அரசும் அதன் தலைவரும் வீணே அச்சம் கொள்ளத்தேவையில்லை; அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று இலங்கை அதிபருக்கு ஆறுதல் கூறுவது போன்ற தொனியில் அமைந்துள்ளது அவரது கருத்து.

பான் கீ- மூனின் ஆறுதல் வார்த்தை இந்த விடயத்தில் இலங்கை அதிபரும் அவரின் அரசினரும் எந்தளவுக்கு அச்சம் கொண்டிருந்தனர் என்பதனைப் பிரதிபலித்ததை அவதானிக்கலாம்.

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது நடைபெற்றதாகச் சொல்லப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் கடமை இலங்கைக்கு உண்டென்றும், அது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை விசாரிக்கவேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்தபோது, இலங்கை அதிர்ச்சியில் உறைந்தது. அத்தகைய ஒரு நிலை ஏற்படாமல் தடுத்துவிட தன்னால் இயன்ற மட்டும் தலையால் நடந்து அதில் வெற்றியும் கண்டது அரசு.

இந்த வெற்றியின் பின்னால் பான் கீ - மூனுக்குப் பெரும் பங்கிருந்ததாகப் பரவலாகக் கருதப்பட்டது; குற்றஞ்சாட்டப்பட்டது. விசாரணைக் குழுவை நியமிப்பதில் தாமதம் காட்டி, குறிப்பாக அதற்கு அணி சேரா நாடுகள் இயக்கம் போன்றவற்றின் ஆதரவையும் பெற்றுக்கொடுப்பதற்கு திரைக்குப் பின்னால் கருமாற்றியவர் செயலாளர் நாயகமே என்றும் கூட சர்வதேச ராஜீக வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தன.

எப்படியோ, இலங்கை அரசாங்கம் சம்பந்தப்பட்ட பெரிய விவகாரத்தை அமுக்கிவிடுவதில், இவருக்கு மறைமுகமான பங்கு உண்டு என்று பேசப்பட்டதை மறந்துவிடுவதற்கில்லை.

போரில் மக்கள் அழிந்து போவதைத் தடுப்பதில் இலங்கை அரசை உறுக்கிப்பேசி போரை நிறுத்தச் செய்வ தில் பான் அசட்டைத்தனமாக இருந்தார் என்ற குற்றச் சாட்டும் உண்டு.

அவரின் இலங்கை விஜயம் உள்நோக்கத்துடனேயே காலம் கடந்து இடம்பெற்றது என்ற சந்தேகமும் அவ்வேளை பல தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டது. காலம் கடந்த விஜயத்தின்போதும் அவரும் ஜனாதிபதி மஹிந்தவும் இணங்கிக்கொண்ட மனித உரிமைகளை மீறியதான குற்றச் சாட்டுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட இறுக்கமாக நிற்காமல் தாமதம் காட்டப்பட்டது என்பது யாவரும் அறிந்த ஒன்று.

இத்தகைய பின்னணியில், நிபுணர்குழு நியமனத்தை தாமதித்ததும் போதாமல் பிரச்சினைக்குரிய விடயத்தில் - அதாவது இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை தமது நிபுணர் குழு விசாரிக்காது - என்று உறுதிபடத் தெரிவித்து மஹிந்தவை மனமகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்! பான்.

நிபுணர் குழுவை பான் கீ - மூன் நியமித்துவிட்டார் என்ற தகவல் வெளிவந்ததும் இலங்கை அரசு துள்ளிக் குதித்ததும் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்டதும் அமைச்சர் ஒருவர் உண்ணாவிரத நாடகம் நடத்தியதும் அதன் பொருட்டு உலக நாடுகள் பலவற்றின் ராஜதந்திர வட்டாரங்கள் கண்டனம் வெளியிட்டதும் கூட பான் கீ மூனின் காதில் உறைக்கவில்லை.

இலங்கை ஜனாதிபதியை ஆசுவாசப்படுத்துவதிலேயே மூன் முழுஅளவில் செயற்பட்டிருக்கிறார் என்று பல தரப்புகளும் அப்போது சுட்டிக்காட்டியிருந்தன.

இத்தகைய ஒரு பின்னணியில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற ஒரு குழுவை நியமித்தால், அதன் மூலம் ஐ.நா. இந்த விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்க்க உதவும் என்ற ஆலோசனையை பான் கீ - மூனே நட்புறவுடன் அந்தரங்கமாகத் தெரிவித்திருப்பாரோ என்று இப்போது பல தரப்பாரும் சந்தேகம் வெளியிடும் நிலை தோன்றியுள்ளது.

இலங்கையில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் முழுவீச்சில் நடைபெற்று வரும் இன ஒடுக்கலைத் தடுக்க முடியாத இயலாமைக்கு ஐக்கிய நாடுகள் சபை தள்ளப்பட்டிருப்பது, இவரைப் போன்ற உயர் அதிகாரிகளின் பக்கச்சார்புப் போக்காக இருக்கலாம் என்று சர்வதேச அரசியல் நிபுணர்கள் சந்தேகம் கொள்ளத் தொடங்கி உள்ளனர்.

மொத்தத்தில் இலங்கை ஜனாதிபதியின் நியூயோர்க்- ஐ.நா. - விஜயம், அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதன் இலக்குகளை-நழுவி வழுவும் திட்டங்களை - எண்ணங்களை - நிறைவேற்றி உள்ளது. அவருக்கும் அரசுக்கும் அது பெரும் வெற்றியே.

பொன்சேகாவுக்கு தீர்ப்பு வழங்கியவர்களுக்கு நாடாளுமன்றம் அழைப்பாணை விடுக்க வேண்டும்

களனிக் கூட்டத்தில் ரணில் ஆவேசம்

கொழும்பு,செப்.28

ஜனநாயக தேசியக் கூட்டணி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவைச் சிறைச்சாலைக்கு அனுப்பியது ஓர் அத்துமீறிய செயற் பாடாகும். இதன் மூலம் அவரது நாடாளுமன்ற உரிமைகளைப் பறித்தெடுத்த ராணுவ நீதிமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றுக்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பாணை விடுக்க வேண்டுமென பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க களனியில் கடந்த 26ஆம் திகதியன்று தேசிய இளைஞர் பேரவையினால் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில் :-

இரண்டாவது இராணுவ நீதிமன்றில் நீதிபதிகளாகக் கடமையாற்றிய நான்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்சேகாவுக்கு எதிரான வழக்கில் உண்மைக்கு மாறான தீர்ப்பையே வழங்கியுள்ளனர்.

ஹைகோர்ப் கம்பனியிடமிருந்து 234 பைனாக்குலர்களையும், அதி சக்தி வாய்ந்த 50 மின்கலங்களையும், 50 மின்பிறப்பாக்கிகளையும் இராணுவம் கொள்முதல் செய்தபோது பொன்சேகாவின் மருமகன் தனுனா திலகரட்ணவுக்குக் குறித்த கம்பனியுடன் எதுவித தொடர்பும் இருக்கவில்லையென இந்த இராணுவ நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட ''கம்பனிகள் பதிவாளர்'' உறுதிப்படுத்தியுள்ளார் என அவர் கூறினார்.

இந்த நிலையில் முன்னாள் இராணுவத் தளபதியைக் குற்றவாளியாக்க முடியாது. இந்த நாட்டில் பொறுப்புடன் நடந்துகொள்ளும் பல்வேறு தரப்பினரும், இந்த விடயத்தில் மௌனஞ் சாதித்தது துரதிர்ஷ்டவசமாகும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவிற்கெதிரான குற்றச் சாட்டுக்களைக் கருத்திற்கொண்டு இவற்றின் உண்மையான நிலைப் பாட்டை எடுத்துக் காட்டக்கூடியவாறு தமது கருத்துக்களை வெளியிடாதிருந்தமைக்கு வர்த்தக சம்மேளனங்களையும் ரணில் குறை கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன்சேகாவுக்காக கோயில்களிலும் பௌத்த ஆலயங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மற்றும் மசூதிகளிலும் இறைவனை வேண்டி ஆராதனைகள், பூசைகள், தொழுகைகள் நடத்துமாறு ஐ.தே.கட்சி அங்கத்தவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். அரசியல் அமைப்பின் 18ஆவது திருத்தம் பற்றிக் கூறிய கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றுவான் விஜேவர்த்தன இதுபற்றி எமது கட்சி ஆட்சேபனை தெரிவித்து இதனை ரத்துச் செய்யுமாறு அரசைக் கோருமென்றார்.

நிறைவேற்று அதிகாரம் பற்றிய நிபந்தனைகளை நீக்கவேண்டிய தேவைகள் பற்றித் தற்போது ஐ.தே.கட்சி அலட்டிக்கொள்ளவில்லை எனவும், எமது கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியைத் தோற்கடிக்கும் என்றும் அவர் கூறினார்.

(சி)

அரசு அறிவித்ததைவிட அதிகளவில் வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள்

அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு,செப்.28

அரசினால் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட கூடிய எண்ணிக்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வருவதாக மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் தெரிவித்தவை வருமாறு:- வாகரைப் பிரதேசத்திலுள்ள இரு கிராமங்களில் இவ்விதம் 200 குடும்பங்கள் வரையில் வாழ்வது அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பான முதல்கட்ட நடவடிக்கையாக வெகு விரைவில் அவர்களுக்கு 25 வீடுகளை நிர்மாணித்து வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார் அமைச்சர்.

மேலும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாத தொரு கருமமே என்பதால், நிறுவப்பட்டுள்ள அனைத்து பாதுகாப்பு முகாம்களையும் அகற்றுவதென்பது சாத்திய மற்றது எனவும், இடம் பெயர்ந்தோரின் வசிப்பிடங்கள் தொடர்பாக அத்தகைய பாதுகாப்பு முகாம்கள் அகற்றப்படவேண்டி நேரும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப்பதிலாக அவர்களுக்கு வேறு பிரதேசங்களில் வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், இன்னமும் 20 ஆயிரம் போர் வரையிலான இடம் பெயர்ந்த மக்கள் முகாம்களில் வாழ்ந்து வருவதாகவும், நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் இன்னமும் நிறைவு பெறாதால், மீள்குடியமர்தல்கள் மேலும் தாமதமடையக் கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

(த-22)

ஸ்கந்தபுரம் இல.01 பாடசாலையில் நாளை மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி,செப்.28

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இல. 01 அ.த.க. பாடசாலையில் 2008, 2009, 2010ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி வ. விமலேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் இந்த மாணவர்களுடான தொடர்பு முழுமையாகக் கிடைக்காத நிலையில் இந்தப் பத்திரிகைச் செய்தியை வாசிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இந்த நிகழ்வுக்கு அழைத்துவருமாறும் அதிபர் மேலும் கேட்டுக் கொண்டார்.

(க)

மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் உதவி அலுவலகம் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நாளை புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான சேவையை விஸ்தரிக்கும் பொருட்டே இந்த அலுவலகம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் இராணுவ அதிகாரிகள், ஐ.நா. பிரதிநிதிகள், மிதிவெடி அகற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர். (உ-15)

15 வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் கிளைகளை நிறுவும்

கொழும்பு,செப்.28

பதினைந்து வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தமது கிளைகளை இலங்கையில் நிறுவுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல்கலைக் கழகங்களை நிறுவும் முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்படுவதோடு தேவையான நிலமும் வழங்கப்படும். மேலும் இத்தகைய பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படுவது உள்ளூர் கல்வியின் தரத்தை சர்வதேச தராதரத்தை எட்டுவதற்கும் உதவும்.

இங்கே வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படுவது வெளிநாட்டு மாணவர்களை இலங்கைக்கு ஈர்ப்பதற்கு உதவுவதற்கு மட்டுமல்லாது அந்நியச் செலாவணியை எமது நாடு ஈட்டுவதற்கும் உதவுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் முதலீட்டாளர்கள் நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்கும். அத்துடன் எமது நாட்டில் இயங்கும் பல்கலைக் கழகங்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து முன்னணி வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு ஈடாக அவற்றை மாற்றுவோம் என்றும் கலாநிதி நவரத்ன மேலும் தெரிவித்தார்.

(க)

நாளை

புரட்டாதி 13		29.09.2010
		புதன்கிழமை
திதி:	:	சஷ்டி
		மாலை 06.52 வரை
நட்சத்திரம்	:	ரோகிணி
		பி.ப. 05.57 வரை
சுபநேரம்	:	04.32-06.02 வரை
ராகுகாலம்	:	12.02-01.32 வரை

பனை மரங்களை வெட்டுவதற்கு சபையின் அனுமதி அவசியமானது

கொழும்பு,செப்.28

சமாதானம் ஏற்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பனை உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 8 லட்சம் பனம் விதைகள் நடப்பட்டும் மேலும் பனை உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவை அனுமதித்துள்ளது.

சட்டவிரோதமாக பனை மரங்களைத் தறிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். பிரதேச செயலாளர்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தற்போது 11 மில்லியனாக உள்ள பனை மரங்களின் எண்ணிக்கையை 16 மில்லியனாக அதிகரிப்பதற்கு 10 வருட பனை அபிவிருத்தித் திட்டமொன்று வருக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் அனுமதியின்றி பனை மரங்களைத் தறிப்பதற்கு எவருக்கும் அனுமதியில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நிறைவில்

Asian Alliance Insurance
Rest Assured

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளையின் முதலாவது ஆண்டு நிறைவில் நாங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்

ஆண்டொன்றில் வாழ்த்துக்கள்

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளையானது தனது ஓராண்டினைப் பூர்த்தி செய்வதையிட்டு எனது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களை பணரீதியான முறையில் ஈடுசெய்யும் அதேவேளை மருத்துவ ரீதியாக ஏற்படுகின்ற செலவுகளையும் ஈடுசெய்கின்ற ஒரு காவலனாகத் திகழுகின்றது. மேலும் மக்கள் மனங்களில் நிலைத்து நின்று சேவை மனப்பாங்குடன் பல கிளைகள் பரப்பி தனது பணிகளை தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

Dr.ஏ.சிறிதரன்
Teaching Hospital, Jaffna.

பொருளாதார அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பு

வர்த்தகத்துறை தாங்கி நிற்கும் முக்கிய தூண்களில் ஒன்றாக விளங்கும் காப்புறுதித் துறையிலே குடாநாட்டில் கால் பதித்து தனது கண்ணியமான ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்யும் Asian Alliance நிறுவனம் குடாநாட்டு மக்களுக்கும் வர்த்தக சமூகத்தினருக்கும் சர்வதேச தரத்துடன் கூடிய பங்களிப்பை வழங்குவதோடு எமது பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்திக்கு என்றும் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் மேலும் பல்லாண்டு காலங்கள் சிறப்புடன் சேவையாற்ற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

Mr.K.Vignesh, CEO/ Director
IIS City Campus,
200, Sivan Pannai Road, Jaffna

யாழ்.மக்களுக்கு ஆதரவுக் கரம்

Asian Alliance Insurance என்ற பெயருடைய கொழும்பில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்நிறுவனம் 28.09.2010ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பித்த முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதை அறிந்து மகிழ்ச்சிடைகின்றேன்.

மிகக் குறுகிய ஒரு வருட காலத்தில் இக்காப்புறுதித் தாபனம் யாழ்ப்பாணத்தில் தனது காலை ஆழமாக ஊன்றியதுடன் பல நூறு வாடிக்கையாளர்களைப் பெற்று மிகச் சிறப்பாக தனது பணியை ஆற்றி வருகிறது.

எப்பொழுதுமே சேமிப்பிலும் தமது குடும்பத்தின் வருங்கால சுபீட்ச வாழ்விலும் நாட்டமுடைய யாழ்ப்பாண மக்களுக்கு இக்காப்புறுதித் தாபனம் ஆதரவுக் கரத்தை நீட்டியுள்ளது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாண மக்களின் அபிமானத்தைப் பெற்றுள்ள இக்காப்புறுதித் தாபனம் தனது சேவையை தொடர்ந்தும் யாழ்.மக்களுக்கு வழங்க இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நிறுவனம் என்றும் வாழ்க வளர்க என இதயம் கனிய வாழ்த்துகிறேன்.

திருமதி யோ.பற்குணராசா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் பணி தொடர்க

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனமானது யாழ்.குடாநாட்டில் தனது சேவையை ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தி செய்து 2ஆவது வருடத்தில் கால்பதிக்கும் இந்நாளில் இந்நிறுவனத்தில் ஒரு வாடிக்கையாளராக இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சிடைவதுடன் மேலும் பல்லாண்டு காலம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்ற மனமார வாழ்த்துகிறேன்.

விநாயகமூர்த்தி குருக்கள்,
மானிப்பாய்.

பணி தொடர வாழ்த்துக்கள்

தனது முதலாம் ஆண்டினை பூர்த்தி செய்திருக்கும் ஏசியன் அலையன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளையை அதன் வாடிக்கையாளர் என்ற வகையில் வாழ்த்துவதுடன் அதன் பணிகள் தொடர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்தியன் சந்திரசேகரம்,
விவசாயி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

பணிகள் சிறக்கட்டும்

ஏசியன் அலையன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளை ஓராண்டினைப் பூர்த்தி செய்திருக்கும் நிலையில் அந்நிறுவனத்தின் யாழ்.கிளையின் முகாமையாளர் உட்பட பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுடன் இணைந்து இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

எமது மக்களின் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

வெறும் கடமைக்காகப் பணி செய்யாமல் சேவை மனப்பான்மையுடன் எமது மக்களினதும் எமது பிரதேசத்தினதும் இந்த நாட்டினதும் முன்னேற்றம் கருதி அனைவரும் தங்களது பணிகளைத் திறம்படவும் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் நியாயமாக மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

அந்த வகையில் ஏசியன் அலையன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளை தனது பணிகளை விருப்புற ஆற்றிவருவதாக நம்புகிறேன். இதன் பணிகள் மேலும் சிறக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஏசியன் அலையன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளையைத் திறந்து வைத்தவன் என்ற வகையிலும் இந்த நிறுவனம் எமது மக்களுக்காக ஆற்றிவருகின்ற பணிகளை அவதானித்துக் கொண்டிருப்பவன் என்ற வகையிலும் இதன் வளர்ச்சி கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

அர்ப்பணிப்புடனான மக்கள் நலன் சார்ந்த பணிகள் தொடரட்டும் என மீண்டும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா, நா.உ,
செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்,
இணைத் தலைவர் - யாழ்.கிளிநொச்சி
தேர்தல் மாவட்ட இணைப்புக்குழு.

சிறிய காலத்தில் மிகப் பெரிய வெற்றி

Asian Alliance Insurance நிறுவனமானது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுக் காப்புறுதித் துறையில் 4ஆவது இடத்தை வகிக்கின்றது. இதன் சேவையை யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இக் காப்புறுதி நிறுவனமானது தனது சேவையின் வெளிப்பாட்டினால் சிறிது காலத்திலேயே பெரிய அளவில் வெற்றியை ஈட்டியுள்ளது. இதன் சேவைகள் பற்றி மக்களுடன் விஞ்ஞான முறையிலான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பது இதன் சிறப்பான அம்சமாகும். அது மாத்திரமன்றி இந்நிறுவனத்தின் குறிக்கப்பட்ட இலக்கினை விட 9 மாத காலப்பகுதியிலேயே அதன் இலக்கை அடைந்துள்ளமை இந்நிறுவனத்தின் ஸ்திரமான சேவையை வெளிப்படுத்துகின்றது. இந்நிறுவனத்தின் சேவை மாவட்டத்தின் பல பாகங்களிலும் பரந்துபட்ட அளவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதனால் மக்களின் சேமிப்புடனான அபாய முகாமைத்துவத்தை அவர்கள் மத்தியில் அடித்தளமிடுவதாக அமைவதோடு காப்புறுதிச் சேவையின் தொழில் நிபுணர்களை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் அதற்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தமது வாழ்க்கைத் தரத்தை உயர்வான நிலைக்கு இட்டுச் செய்வதற்கும் இது வழிவகுக்கின்றது.

இவ்வாறான சேவைகளை ஈட்டி மக்களின் வாழ்க்கையை செழுமைப்படுத்தும் Asian Alliance Insurance நிறுவனத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழச்சியடைகின்றேன். தொடர்ந்தும் இதன் காப்புறுதிச் சேவை எதிர்காலத்தில் மேன்மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

மேலும் வளர்ச்சி கிட்டட்டும்

மேற்படி நிறுவனம் மக்களுக்கு ஆற்றிவரும் மகத்தான சேவை மேலும் தொடர எல்லாம்வல்ல நந்தாவில் மனோன்மணி அம்பாளின் நல்லாசி கிடைக்கட்டும். இந்து மதகுருவாகிய நான் இந்நிறுவனத்தின் காப்புறுதி வாடிக்கையாளர் என்கின்ற ரீதியில் பெருமையடைகின்றேன். இந்நிறுவனம் மேன்மேலும் பல தசாப்தங்கள் கண்டு வளர்ச்சியடைய ஆசி கூறி வாழ்த்தி வணங்குகின்றேன்.

[illegible]

மக்கள் சேவை தொடரட்டும்

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனம் தனது ஓராண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு எனது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்களுக்கு தற்செயலாகவும் தவிர்க்க முடியாததாகவும் ஏற்படுகின்ற இழப்புக்களைப் பண அடிப்படையில் நிவர்த்திக்கும் காவலனாக ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனம் தொழிற்படுவது யாழ்ப்பாண மக்களுக்கு வரப்பிரசாதமென்றே நான் நம்புகின்றேன். வாழ்க்கையில் ஏற்படும் உயிர் இழப்புக்களையும் தொழிலில் ஏற்படும் பொருள் இழப்புக்களையும் போக்குவரத்தில் ஏற்படும் விபத்து நட்டங்களையும் ஈடுசெய்வதென்பது யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்ட காலத்தின் தேவையாகும். அதனை நன்குணர்ந்து யாழ்ப்பாண மக்களுக்கு சேவையாற்ற வருகைதந்து ஒரு வருடத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருப்பது மட்டுமன்றி ஏசியன் அலைன்ஸ் காப்புறுதி நிறுவனம் வெகு விரைவில் மக்கள் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிவிட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தால் காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் புதிய காப்புறுதித் திட்டங்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. இதன் காரணமாகவே நான் உட்பட பலர் இந்நிறுவனத்தின் வாடிக்கையாளராக மாறியுள்ளனர் என்பதை மகிழச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்களைக் கவரக் கூடிய நடத்தையைக் கொண்டுள்ள இந்நிறுவனத்தின் தலைவரையும் ஊழியர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. யாழ்ப்பாண மக்களின் மனதைக் கவர்ந்த ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனம் மேலும் கிளைகளைப் பரப்பி இப்பிரதேசத்தின் முன்னணி காப்புறுதி நிறுவனமாக மாறவேண்டும் என்ற ஆவலையும் அதற்கான வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க.தேவராஜா, பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மகத்தான சேவை இது

ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனம் தனது மகத்தான சேவையை ஆற்றி யாழ்.குடா நாட்டு மக்களுக்கு தனது முதலாவது ஆண்டு நிறைவை 28.09.2010ஆம் திகதி பெருமையுடன் கொண்டாடுவதை நாம் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்
யாழ்.வீதி, மானிப்பாய்.

வெற்றி நடை தொடரட்டும்

இலங்கை முழுவதும் வியாபித்து நிற்கும் Asian Alliance காப்புறுதி நிறுவனமானது யாழ்.குடாநாட்டிலும் காலடி பதித்து வாடிக்கையாளருக்கு ஏற்றவாறு தனது சேவையை வழங்கி பல இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்து தனது ஒரு வருட பூர்த்தியினை மிகவும் வெற்றிகரமாக இன்று கொண்டாடுகிறது. இந்நிறுவனத்துக்கு வாடிக்கையாளர் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

அ.கிருபாகரன் - உரிமையாளர்
கிருபா லேணேர்ஸ் (சாரதி பயிற்சி பாடசாலை)
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353

ஏசியன் அலையன்ஸ் சிறந்த பணியாளன்

Asian Alliance இன் வாடிக்கையாளர் என்ற முறையில் சூரியன் இருள் சூழ்ந்த நீண்ட இரவுக்காலத்தைக் குறைப்பது போல் தனது சேவையை ஆற்றி இரண்டாவது வருடத்திற்குள் காலடி பதிக்கும் இந்நிறுவனமானது மேலும் அனைத்து சமூகத்திற்கும் சிறந்த பணியாற்றும் பரந்த சிந்தனையுடன் திகழ வாழ்த்துகிறேன்.

Mr.Selvarajah Easan, Navaly North, Manipay.
Best Buisness Man (மரக்கறி வியாபாரி)

வாழ்த்துவோர் :
ஏசியன் அலையன்ஸ்
வாடிக்கையாளர்கள்

(சி/571501)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொம்மைவெளிப் பிரதேசத்தில் குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.28

பொம்மைவெளிப்பிரதேசத்தின் புதிய சோனகத்தெரு, 3ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பொது மக்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி வசித்து வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மீளக்குடியமர்த்தப் பட்டு ஒரு வருடம் கழிந்த நிலையிலும் இன்னமும் ஓலைக் குடிசைகளும் தறப்பாள் கூடாரங்களும்தான் இவர்களது வாழ்விடமாக உள்ளன.

1990ஆம் ஆண்டு நிகழ்ந்த இடம்பெயர்வின் போது புத்தளம், வவுனியா போன்ற இடங்களில் குடியிருந்த மக்களே தற்போது பொம்மைவெளிப் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறுவனங்களால் வழங்கப் பட்ட தறப்பாள்களினாலும் ஓலைகளினாலும் தாமாகவே குடிசைகளை அமைத்து இவர்கள் வசித்து வருகின்றார்கள்.

மழை காலம் ஆரம்பித்துள்ள மையால் இவர்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அரசாங்கம் 15-20 நாள்களுக்கு ஒரு தடவையில் அரிசி, மா, சீனி, கடலைப்பருப்பு, தேங்காய் எண்ணெய் போன்ற உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

வழங்கப்படும் கோறா அரிசியினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒவ்வாத நோய்கள் ஏற்படுவதாகவும் இந்த நிவாரணக் கொடுப்பனவு 6 மாத காலம் வரையே வழங்கப்படும் எனவும் மக்களால் விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

இங்கு அதிகமானோர் கடற் றொழிலினையே நம்பியுள்ள நிலையில் இதுவரைக்கும் எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. பலரிடம் தாம் கோரிக்கை விடுத்த போதும் யாரும் உதவி செய்ய முன்வரவில்லை எனவும் இதனால் நாம் சிறுசுயதொழில்களையும் நிரந்தரமற்ற தொழில்களையும் செய்து வருகின்றோம்.

எமது பிரதேசத்தில் உப்பு நீர்க் கிணறுகள் அதிகம் இருப்பதால் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள நீர்ப்பம்பிகள் மூலம் நீரினைப் பெறும் நாம் குறித்த நேரத்தில் நீர் கிடைக்காமல் குடிநீருக்கும் பெரும் சிரமப்படுகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான பல அடிப்படை வசதிகள் அற்று குப்பைகள் நிரப்பியவெளியில் அசுத்தக்காற்றை சுவாசித்து அல்லல்படும் மக்களின் நிலை எப்போது மாறும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

(204-313-315)

இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் 2010ஆம் ஆண்டுக்கான தொழிற்றுறை சிறப்பு விருது கொழும்பில் வழங்கப்பட்ட போது எடுக்கப் பட்ட படம்.

இந்த நிகழ்வில் அண்ணா நிறுவனத்தின் அதிபர் எஸ்.பி.நடராசா விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (த-204)

மனித உரிமைகள் தொடர்பாக விளக்கும் மாநாடு பொது நூலகத்தில்

யாழ்ப்பாணம், செப்.28

மனித உரிமைகள் தொடர்பான விளக்கங்களை சிவில் அமைப்புகளுக்கு வழங்கும் முகமாகவும் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டும் விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் இந்த விசேட மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

குடாநாட்டில் உள்ள சமூகம், சமயம் சார்ந்த நிறுவனங்களின் பொறுப்புள்ள பிரமுகர்களுக்கு தலைவர்களுக்கு இந்த மனித உரிமை சம்பந்தமான கருத்தமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

கருத்தமர்வின் போது யாழ். மாவட்டபொலிஸ் அத்தியட்சகர், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயரதிகாரிகள் எனப் பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இதில் கலந்து கொள்வதற்கு 60இற்கு மேற்பட்ட சிவில் அமைப்புகளுக்குக் கடிதங்கள் அனுப்பிவைக்கபட்டுள்ளதாகவும் அதில் பங்கேற்கவுள்ள முக்கியஸ்தர்கள் தமது துறைசார் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான தயார்படுத்தலுடன் சமுகமளிக்குமாறும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப் பதிகாரி த.கனகராஜ் கேட்டுள்ளார். (த-9)

வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். ஜும்ஆ பள்ளிவாசல் வீதி தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப் பட்டு வருகின்றது.

கடந்த பல ஆண்டுகளாக போக்குவரத்து செய்யமுடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்பட்டது.

இந்த வீதியில் ஏற்பட்ட குழிகள் கற்களால் நிரப்பப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

(204-26)

தடுப்பூசி வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.28

பொம்மைவெளிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட பொது மக்களின் சுகாதார நலன் கருதி தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

3 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் இத் தடுப்பூசி வர்த்தகர்கள், சமையலாளர்கள் போன்றோருக்கும் வழங்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது

(த-204-315-313)

யாழ்.கோட்டை துப்புரவுப் பணியின் போது திடீரென படையெடுக்கும் விஷ ஜந்துக்கள்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.கோட்டையில் விஷ ஜந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கோட்டையில் புனர்நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று-

கோட்டையின் உள் சுற்றாடல்களும் துப்புரவு செய்யப் பட்டு வருகின்றன.

இந்தச் சமயத்தில் பற்றைகள், புற்றுகளில் இருந்து விஷ ஜந்துக்கள் திடீரென படையெடுக்கத் தொடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது

கடந்த வாரத்தில் துப்புரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் வெள்ளைப் பூரானின் கடிக்கு இலக்காகி உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (204-26)

போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு காணப்படும் வீதிகளால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.பாங்ஷால் வீதிக்கும், பிரதான வீதிக்கும் இடைப்பட்ட பகுதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சேதமடைந்து காணப்படுவதால் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

அச்சுக்கூட வீதியில் தொடங்கி பழைய பூங்கா வீதி வரை செல்லும் குருசோ வீதியும் பாவனைக்கு உதவாதவாறு காணப்படுகின்றது.

இந்த வீதிகளால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளர்கள் எனப் பலதரப் பட்டவர்கள் பயணிப்பதனால் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

யாழ். மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியோருக்கு இது சம்பந்தமாக அறிவித்தும் இதுவரை செப்பனிடப்பட வில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதிகளை பாவனைக்கு ஏற்றவாறு புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204-160)

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் தாதியர்கள், சிற்றூழியர்களுக்குப் பற்றாக்குறை

வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். போதனா வைத்தியசாலை சிறப்பாக இயங்கி வருகின்ற போதிலும் தாதியர், சிற்றூழியர்கள் பற்றாக்குறை இருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் டாக்டர் கே.பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தாதியர் பற்றாக்குறை தொடர்பாக சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

8 அம்புலன்ஸ் வண்டிகள் இருக்கின்ற போதிலும் 5 அம்புலன்ஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுகின்றன.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சிடம் தெரிவித்துள்ளோம்.

அவர் தருவதாக உறுதி அளித்திருக்கிறார். பழுதாகிய இயந்திரங்கள் திருத்தப்பட்டு நீர்ப்பிரச்சினை, மின்சாரப்பிரச்சினை எதுவும் இல்லை.

தினமும் 300 நோயாளிகளை அனுமதித்து சிகிச்சை அளித்து வருகின்றோம். அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் கொழும்புக்கு நோயாளிகளை அனுப்பி வருகின்றோம். முன்னரை விட தற்போது வைத்தியசாலை சிறப்பாக இயங்கி வருகின்றது.

கட்டட வேலைகளுக்கு ஜப்பான் அரசு நிதி வழங்கி வருகின்றது.

21மாத ஒப்பந்த அடிப்படையில் கட்டட வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இருந்த போதிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனபோதிலும் நோயாளிகளைப் பார்க்க வருபவர்களே பொலித்தீன்களை கொண்டு வந்து எறிந்துவிட்டு செல்கிறார்கள்.

இதனால் பாரிய சுகாதாரப் பிரச்சினை ஏற்படுகின்றது. அவர்கள் மலசலகூடங்களை பயன்படுத்துவதில் சுத்தமற்றதன்மை காணப்படுகின்றது. மலசலகூடங்களை ஒழுங்காகப் பயன்படுத்துவதில்லை. நீரை விரயமாக்குகின்றார்கள்.

பொதுமக்கள் இந்தப் பிரச்சினையை தவிர்த்து வைத்திய சாலையை திறம்பட நடத்த ஒத்துழைக்க வேண்டும்.

விடுதிகள் பற்றாக்குறை உள்ளது. கட்டுவதற்கு இடம் போதாது. எனினும் இருப்பதைக் கொண்டு முன்னரை விட சிறப்பாக நடத்தி வருகின்றோம்.

நோயாளிகளைப் பார்ப்பவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் வந்து பார்க்கவேண்டும். ஏனைய நேரங்களில் பார்வையிட அனுமதி கேட்பதை தவிர்க்க வேண்டும்.

ஒரே நோயாளியைப் பார்வையிட பலர் வருகின்றனர். இதனால் வைத்தியசாலையில் நெருக்கடி ஏற்படுகின்றது. இதனை தவிர்த்து குறிப்பிட்டவர்களே வந்து பார்வையிடவேண்டும். எனவே பொது மக்களின் ஒத்துழைப்பை நாம் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்- என்றார் அவர். (த-204-319)

ஐ வடநல அலகுகளில் பணியாற்றும் ஊழியர் மலையகத்துக்கு சுற்றுலா

யாழ்ப்பாணம், செப்.28

சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்திய சாலைகள், போதனா வைத்திய சாலை ஆகியவற்றில் இயங்கி வரும் உளநல அலகுகளில் பணி புரியும் பல்துறைசார் சிகிச்சைப் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் கடந்த 9 ஆம் திகதி மத்திய மலையகத்துக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய ஆதார வைத்தியசாலைகளிலும் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் உளநல அலகுகளில் பணியாற்றும் ஊழியர்களே இந்த சுற்றுலாவை மேற்கொண்டார்.

கடந்த 23 ஆம் திகதி உதயனில் உளப் பாதிப்புக்கு உள்ளானோர் தென்னிலங்கைக்குச் சுற்றுலா என்ற தலைப்பில் வெளியான செய்தி தவறானது என யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பாலம் சேதம்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.மணிக்கூட்டு வீதியில் பொலிஸ் நிலையத்திற்கு முன் பாகவுள்ள பாலம் சேதமடைந்து காணப்படுகின்றது.

கடந்த வாரத்தில் பெய்த மழையை அடுத்தே பாலத்தில் இவ்வாறு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாலத்தில் ஏற்பட்ட சேதத்தால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (த-204-26)

செஞ்சிலுவைத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குக

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையில் தொண்டர் சேவையில் உள்ள 44 பேருக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு அமைச்சர் அரசைக் கேட்டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் தெரிவித்துள்ளார்.

(204-07)

பொம்மைவெளிப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், செப்.28

பொம்மைவெளிப் பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் முஸ்லிம் மக்களால் நிதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினைக் கொண்டு தாம் தமக்கென ஒரு வீட்டை அமைத்து வசித்து வருவதாக அப்பகுதி முஸ்லிம் மக்கள் தெரிவித்தார்கள். இருந்த போதும் இந்நிதிகள் போதுமானதாக இல்லை.

இந்த நிதியைக் கொண்டு சிறு குடிசைகளை அமைக்கவே முடிந்தது. அதிக அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்களுக்கு இக்குடிசை போதியதாக இல்லை.

வேறு நிறுவனங்கள் எமக்கு உதவ முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(204-315-313)

யாழ். மாநகரப் பகுதியில் பஸ் தரிப்பிடங்கள் நிர்ணயிக்கப்படாமையால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.மாநகரப் பகுதியில் பஸ் தரிப்பிடங்கள் நிர்ணயிக்கப்படாமையினால் வெளியூர்களில் இருந்து வரும் பயணிகள் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

வழமைக்கு திரும்பியுள்ள யாழ் நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் யாழ். மாநகரப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, பருத்தித்துறை வீதி, கண்டி வீதி, மானிப்பாய் வீதி, ஊர்காவற்றுறை வீதி ஆகியவற்றின் ஊடாக பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த வீதிகளில் பஸ் வண்டிகள் நிறுத்தப்படும் இடம் தெரியாமல் பஸ் வண்டிகளில் ஏறுவதற்காக பயணிகள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

குறிப்பிட்ட வீதிகளில் பஸ் தரிப்பதற்குரிய இடங்களில் அதற்கான குறியீட்டுப் பலகைகளைத் தொங்க விட்டால் பயணிகள் குறிப்பிட்ட தரிப்பிடங்களில் பஸ் வண்டிகளில் ஏறிச் செல்லவோ, இறங்கிச் செல்லவோ முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர சபையோ அல்லது இலங்கைப் போக்குவரத்துச் சபையோ மேற்கொள்ளுமா என பயணிகள் எதிர்பார்க்கின்றனர்.

(த-204-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2010ஆம் ஆண்டு 'சாமஸ்ரீ' விருது வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உப தலைவர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் பாஷையூரைச் சேர்ந்த இம்மானுவேல் ஆனல்ட்டுக்கு பொன்னாடை போர்த்தி 'தேசமான்ய' விருது வழங்குவதை இரண்டாவது படத்திலும் தமிழ்த்தொண்டாளர் புரவலர் ஹாசிம் உமரால் மானிப்பாயைச் சேர்ந்த சி.பொ.வ.மா.க.முதலியாருக்குப் பொன்னாடை போர்த்தி 'சாமஸ்ரீ தேசகீர்த்தி' விருது வழங்குவதனை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: தமிழினியன்)*

அதிபர்கள், ஆசிரியர்கள் சாக்குப்போக்குச் சொல்லாமல் முழுமையாகச் செயற்பட்டு கல்வியை மேம்படுத்த வேண்டும்

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம் செப்.28

எமது நாட்டில் இருந்த பல்வேறுபட்ட பிரச்சினைகளும் நீங்கி சுமுகமானசூழல் ஏற்பட்டுள்ளதை உணர்ந்து ஆசிரியர்கள், அதிபர்கள் 'சாக்குப்போக்கு' சொல்லாமல் முழுநேரமாகச் செயற்பட்டு எமது பிர தேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கு உதவ வேண்டும் என தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாக்கிருஸ்ணன் தெரிவித்தார்.

தீவக வலயப்பாடசாலையின் அதிபர்க ளுக்கான பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச் சித்திட்டச் செயலமர்வு யாழ்/மத்திய கல் லூரியில் நடைபெற்றபோதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று கல்வி அமைச்சு ஜி.சீ.ஈ சாதார ணதரப் பரீட்சையில் மாணவர்களின் சித்தி வீதத்தை உயர்த்த வேண்டும் எனப் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றது. அதுபோலவே எமது வலயத்திலும் கணித, தமிழ் பாடங்கள் உட்பட முழுப்பாடத்திலும் சித்தி வீதத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு செயல்திட் டங்கள் வலயத்தால் அமுல்படுத்தப்படுகின்றது. எனவே அதிபர் கள் தமது பாடசாலை மட்டத்திலும் அவ்வாறு செயற்பட வேண் டிய விதிகள் உள்ளதோடு பாடசாலைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எமது கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இச்செயலமர்வு அதிபர்களின் முகாமைத்துவத்திறனை மேம்படுத்துவதற் கான பல்வேறு முகமான நுட்பங்களையும் செயல்முறை வேலை ஊடாக வழங்குகின் றது. இதனை சரியான முறையில் பெற்று பாடசாலை ஆசிரியர்களை வழிப்படுத்த வேண்டும் - என்றார்.

3 தினங்கள் நடத்தப்பட்ட இச்செயல மர்வு தீவக வலயப் பிரதிக்கல்விப் பணிப் பாளர் ஐ.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்தின் பல்வேறு வலயங்களையும் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்கள், சிறந்த அறிஞர்கள், வள வாளர்களும் கலந்து கொண்டனர்.(ற-267)

தவறிவிட்டது

எமது கன்ரர் வாகனத்தின் இலக்கத் தகடு (NP LH 4301) தவறிவிட்டது. கண் டெடுத்த வர்கள் 021 222 0045, 077 3880590 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும். (103888)

விற்பனைக்கு

இரு மாத காலத்திற்குள் புதிதாக வாங் கிய நல்ல நிலையில் உள்ள NP.V.Q XXXX இலக்கம் கொண்ட ZMR (HERO HONDA) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 077 8094901 (103885)

விண்ணப்பம் கோரல்

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடமாகா ணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீட்டு நிர்மாணிப்பு வேலைக்கு வேலையாள் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. தச்சுவேலை, மேசன் வேலை ஆகியனவற்றைமேற் கொள்ளத் தகுதி யானவர்கள் எதிர் வரும் 29ஆம் திக திக்கு முன்னர் யாழ். வீரசிங்கம் கட்ட டத்தில் இயங்கும் மாவட்டத் தொழிற் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளு மாறு யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆ ணை யா ள ர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (201-9)

கௌரவிப்பு விழா

குடும்பநல உத்தி யோகத்தர் பிரிவு ஜே/101க்கான முதி யோர் சிறுவர் கௌர விப்பு விழா எதிர் வரும் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாந கரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மரிய தாஸ் தலைமையில் நீராவியடி சைவ பரிலான சபையில் நடைபெறவுள்ளது என குடும்பநல உத்தியோகத்தர் திருமதி வி.சுமதி தெரிவித்தார். இந்த நிகழ்வில் யாழ். மாந கரசபை முதல்வர் திருமதி யோ. பற் குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204-311)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தரம்-6 அனுமதி - 2011

தரம் 6 அனுமதிக்கான விண்ணப் பப்படிவங்களை கல்லூரி அலுவல கத்தில் பெற்று 15.11.2010இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

சேவை நலன் பாராட்டு

திருமதி
சர்வேஸ்வரி நரேந்திரன்
உப அதிபர்
B.Sc (Hons) Dip. in.Edu
ஆசிரியர் தரம் I

எமது கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலை வராக, உப அதிபராக நீண்டகாலம் கடமையாற்றி 11.09.2010இல் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள கல்லூரியின் பழைய மாண வியான திருமதி சர்வேஸ்வரி நரேந்திரன் அவர்கள் தமது சேவைக் காலத்தில் மிகவும் துடிப்புடன் தனது பணிக ளைத் திறம்படச் செய்துள்ளதுடன் பல மாணவிகளை மருத்துவபீடம், விஞ்ஞானபீடங்களிற்கு அனுப்புவதற் கும் காரண கர்த்தாவாக இருந்துள்ளார். இவர் தனது கற் பித்தற் பணிகளுடன் மாத்திரமன்றி முகாமைத்துவச் செயற்பாடுகளிலும் மாணவர்களுடைய நலனோம்புதல் செயற்பாடுகளிலும் மிகவும் ஈடுபாட்டுடன் சேவையாற்றியுள்ளார். அவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவை எமது கல்லூரியின் வளர்ச்சியில் அளப்பரியதாகும். அவர் தமது ஓய்வுகாலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழிவாழ எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

சேவை விவரம்

1) அ/திருக்கோயில் அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா மிஷன் ம.வி	- ஆசிரியை	12.07.1976-31.12.1989
2) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி	- ஆசிரியை	01.01.1990-31.10.1995
3) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி	- பகுதித் தலைவர்	01.11.1996-15.01.2006
4) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி	- உப அதிபர்	16.01.2006-11.09.2010

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்று தான் கற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கும் உறவுகளான எமக்கும் பெருமை சேர்த்துத் தந்த
Dr.அச்சுதன்-Dr.விநோதா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
அச்சுதன் கீர்த்தனன்
அவர்களை மனதார வாழ்த்துவ தோடு, அவர் கல்வித் துறையில் தொடர்ந்து சாதனைகள் புரிய ஆசிகள் கூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
நாட்டார்மை, அம்மம்மா, மாமா
குருப்பத்தினர், சித்தியார் குருப்பத்தினர்.
"வள்ளி மனை"
மீசாலை கிழக்கு, மீசாலை. (103901)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த (25.09.2010) சனிக்கிழமை இரத் தினபுரி மாநகரசபை மண்டபத்தில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் நடத்தப் பட்ட சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில் தேசமான்ய கௌரவபட்டம் பெற்ற எமது பாசையூர் மண்ணின் மைந்தனும் சிறந்த சமூக சேவையா ளனும் அகில இலங்கை சமாதான நீதிவானும் ஜனசக்தி காப்புறுதி யாழ்.பிராந்திய முகாமையாளருமாகிய 'தேச மான்ய' இம்மானுவல் ஆனல்ட் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தண்டர்ஸ், பாசையூர்.
(சி-571398)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாசையூரைச் சேர்ந்த
தேசமான்ய
இம்மானுவல் ஆனல்ட்
(BA(Hons).
Spl Phy.MSS & AMTC Limra International)

(அகில இலங்கை சமாதான நீதிவான் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர்)

25.09.2010 சனிக்கிழமை இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் அகில இலங்கை இனநல்லுறவு ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில் தேசமான்ய கௌரவபட்டம் பெற்றமையை இட்டு அவரை வாழ்த்துவதோடு அவரின் சேவை மேலும் சிறக்க ஆசித்து நிற்கின்றோம்.

குமார் வெதுப்பகம்,
பாசையூர்.
ஸ்ரீமுருகன் வெதுப்பகம்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன்கிழமை தவிர்ந்த ஏனைய வார நாள்களில் கிராம அலுவலர்களை அலுவலகங்களுக்கு அழையாதீர்

பொதுநிர்வாக அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.28

கிராம அலுவலர்களை புதன் கிழமை தவிர்ந்த எனைய நாள்க ளில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவல கங்களுக்கு அழைப்பதைத் தவிர்த் துக் கொள்ளுமாறு மாவட்ட அலு வலகங்களுக்கு அரசாங்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலு வல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுற்றுநிருப்பத்தில் குறிப் பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

புதன்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் கிராம அலுவலர் களை பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் தமது அலுவலகங்களுக்கு அழைப்ப தால் பொதுமக்கள் கிராம அலு வலர்களிடம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியா திருப்பதாகவும் இதனால் கிராம அலுவலர்களும் சிரமத்துக்குள் ளாகும் நிலை காணப்படுவதாக வும் இதனால் புதன்கிழமைகளில் கிராம அலுவலர்களை அலுவல கங்களுக்கு அழைக்கு மாறு (Admin)04-002 சுற்றுநிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத் திலுள்ள பல கிராம அலுவலர் பிரிவுகளில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் காலை யில் அவர்களைச் சந்திக்க முடி யும் இல்லையேல் அவர்களது அறிவித்தல் பலகைகளில் எந்த வித அறிவித்தலும் காணப்படாத நிலையும் -

பொதுமக்கள் கேட்டால் பிர தேச செயலகம் சென்றார், விசார ணைக்குச் சென்றார் என்று கூறிச் செல்லும் நிலையே காணப்படு கின்றது.

இதேவேளை, கிராம அலுவலர் களை புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பொதுமக்கள் சந்திப்பதற்கு மேற்படி சுற்ற றிக்கை சந்தர்ப்பத்தை ஏற்படுத் திக் கொடுத்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

(த-201)

தொழில் பயிற்சி நெறிகள் விரைவில் பிரான்பற்றில்.

பண்டத்தரிப்பு,செப்.28

வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தால் பிரான்பற்றில் ஒரு கோடி 4 லட்சம் ரூபா செலவில் நவீன தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தி யாகி திறப்பதற்குத் தயாராக உள்ளது.

இந்தக் கட்டடத்தில் மாவட்ட ரீதியில் பயிற்சி நெறிகள் மிக விரை வில் ஆரம்பிக்கப்படவுள்ளன என மேற்படி பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார். (201-130)

பாதுகாப்புக் கவசங்களை வழங்குமாறு தெளிகருவி இயக்குநர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யின் கீழ் இயங்கும் தெளிகருவி இயக்குநர்களுக்கு உரிய பாது காப்பு அங்கிகள், காது பாதுகாப் புக் கருவி, வாய்மூடி அங்கி என் பன வழங்கப்படவில்லை. இத னால் மேற்படி நியமனத்தில் உள்ள 26 இயந்திர இயக்குநர்களும் டெங்கு ஒழிப்பு புகையூட்டலின் போது பாதிக்கப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் 2001முதல் நியமனம் பெற்று தெளிகருவி இயக்குநர்களாக பணியாற்றி வரு கின்றோம்.

நாம் கால் நடையாகச் சென்றே சுகாதாரச் சீர்கேடான இடங்களி லும், டெங்கு நோய் அபாயம் ஏற் படும் இடங்களிலும் புகையூட் டுபவர்களாகவும் - மருந்து தெளி கருவி மூலம் மருந்து தெளிப்ப வர்களாகவும் பணியாற்றி வரு கின்றோம்.

ஆனால் எமக்கு உரிய கொடுப் பனவுகள் கிடைப்பதில்லை, பாது காப்பு அங்கி, வாய்மூடி, காது பாது காப்புக் கருவி, காலணி, கையுறை என்பன இன்றியே பணியாற்று கின்றோம்.

எமக்கு சீருடைத் துணி மட் டுமே வழங்குவதனால் எமது கட மையை முழுதாக நிறைவேற்ற முடியவில்லையென சம்பந்தப் பட்டவர்கள் விசனம் தெரிவித் துள்ளனர். (201-302)

ஆரம்பப் பிரிவு ஆக்கத்திறன் போட்டிகள் இம்முறை மாகாண மட்டத்திலும் நடக்கும்

கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.28

ஆரம்பப் பிரிவு மாணவர் களுக்கு நடத்தப்படுகின்ற ஆக் கத்திறன் போட்டிகள் இம்முறை மாகாண மட்டத்திலும் நடத்துவ தென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும் என்று வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பப் பிரிவு மாணவர்க ளுக்கான ஆக்கத்திறன் போட்டி கள் வழமையாக வலய ரீதியாக வும் - கோட்ட ரீதியாகவும் நடத் தப்பட்டு பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறும். இவ்வாண்டில் இருந்து அந்த நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தி மாணவர் களின் திறனை மேம்படுத்தும் நோக்கிலும் விருத்தி செய்யும் வகையிலும் போட்டிகளை மாகாண மட்டத்திலும் நடத்தி அவர் களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பதென்று வவுனியா வில் அண்மையில் நடைபெற்ற கல்வியமைச்சின் செயலாளர், வட மாகாண ஆளுநர் ஆகியோ ருடனான கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வவுனியா றம் பைக்குளம் மகா வித்தியாலயத் தில் மாபெரும் பரிசளிப்பு நிகழ் வினை நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் கௌர விப்பதாகவும் தீர்மானிக்கப்பட் டது. (ஐ-9)

மோ.சைக்கிள் விபத்துகள் நயினாதீவில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

நயினாதீவுப் பகுதியில் மோட் டார் சைக்கிள் விபத்துக்கள் அதி கரித்து வருவதாகக் கூறப்படு கிறது. மதுபோதையுடன் மோட்டார் சைக்கிள்களை வேகமாகச் செலுத்துவதன் காரணமாகத்தான் இவ்விபத்துகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ள னர்.

இதேவேளை, நயினாதீவில் போக்குவரத்து நெருக்கடிகள் அற்ற வாகன நெரிசல் இல்லாத நிலையில் கடந்த காலத்தில் மட் டும் மோட்டார் சைக்கிள் விபத் தில் ஐந்து பேர் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், தலைக்கவ சம் அணிதல் போன்ற விடயங் கள் மேற்படி பிரதேசத்தில் நடை முறைப்படுத்தப்படுவதில்லை எனவும் அப்பகுதி மக்கள் கூறி யுள்ளனர். (201-7)

பொன்னாலைப் பிரதேச வீட்டுத்திட்டத்தை விரைவில் புனரமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.28

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்டு தற்போது அழிவடைந்துள்ள பொன்னாலை வீட்டுத்திட்டத் தில் உள்ள 65 வீடுகள் மீளப் புனர மைக்கப்படவுள்ளதாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத் திட்டங்களின் அபிவி ருத்தி தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ் வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மேற்படி வீட்டுத்திட்டத்தை மீளப்புனரமைத்து வீடில்லாதவர் களுக்கு வழங்குதல் மேலதிக குடிதண்ணீர், முன்பள்ளி, கடைத் தொகுதி, பாடசாலை விளையாட் டுத்திடல் ஆகியன அமைத்தல்.

விரைவில் பொன்னாலை 65 வீட்டுத்திட்டப் பயனாளிகளின் விவரம் கிராம அலுவலரினால் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை யிடப்பட்ட பின்னர் அடுத்த கட்டப் பணிகள் குறித்து அவசர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி அபிவிருத்தி தொடர் பாக பொருளாதார அபிவிருத்தி நிபுணர் எந்திரி ஆர்.ரி.இராமச் சந்திரன் மேலதிக உதவிகளை வழங்கவும் முன்வைத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (201-302)

சமூர்த்தித் திட்டப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வேலணைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் தையல் இயந்திரம் வழங்குகிறார்.

(படங்கள்: லக்ஸ்மன்)

அபிவிருத்திக்கு இடையூறு செய்வோர் மீது பாரபட்சமற்ற நடவடிக்கைகள் தேவை

நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள் கின்றபோது அதற்கு மாறாகவும் அபிவிருத்திக்கு இடையூறாக வும் சட்டத்துக்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் கள் மீது பாராபட்சமின்றி நடவ டிக்கைகள் மேற்கொள்ளவேண் டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் முருகேசு சந்திரகுமார் தெரி வித்தார்.

கடந்த சனிக்கிழமை சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறு கையில்:-

மக்களுக்குப் பணியாற்று வதற்காகத்தான் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கு கிறது. எனவே அரச ஊழியர்கள் மக்களின் இடங்களுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டு அதற்கான தீர்வு களை பெற்றுக்கொடுக்கவேண் டும் அப்படி மக்களுக்காகவே பணியாற்றும் போது நான் உங்க ளுக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பேன் எனவும் கூறினார்.

தொடர்ந்து கடந்த மாத ஒருங் கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பான கூட்ட றிக்கை ஒவ்வொரு துறைசார்ந்த விடயங்களாக வாசிக்கப்பட அதன் முன்னேற்றங்கள் குறித்து மக்கள் அமைப்புகளின் கருத்துக்களும் விமர்சனங்களும் பெறப்பட்டு அந்த இடத்திலேயே உரிய அந் தந்த திணைக்களங்களின் அதி காரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தீர்வுகளும் பெறப் பட்டன.

அந்த வகையில் குடிதண் ணீர், மின்சாரம், போக்குவரத்து, நீர்விநியோகம், மீன்பிடி, விவசா யம், கால்நடை, வீதி அபிவிருத்தி, கல்வி, கலாசாரம், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில் கூட்டுறவு, பனை, தென்னை என பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டதுடன் மக்களின் தேவை கள் கேட்டறிந்து அதற்கு உரிய திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி கள் கோரப்பட்டு அத்தேவை களை பூர்த்தி செய்து மக்களுக்கு வழங்குமாறு அவர் பணிப்புரை வழங்கினார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிர தேச செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம், ஈ.பி.டி.பி அமைப் பின் வலிகாம பிரதேச இணைப் பாளர் ஜீவன், மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் ஜீவா உட்பட அரச திணைக்களங்களின் உயரதிகாரி கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் கிராம அலுவலர்கள், மக்கள் அமைப்புக்களின் பிரதி நிதி கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (201)

மருதங்கேணிப் பாடசாலைகளுக்கு புதிதாக அதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.28

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு அதி பர் பதவிகளுக்கான நியமனங் கள் வழங்கப்பட்டுள்ளதாக வட மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் வை.செல்வராசா தெரி வித்துள்ளார்.

மருதங்கேணி கல்விக் கோட் டத்துக்கு உட்பட்ட ஏழு பாட சாலைகளின் அதிபர் பதவிக ளுக்கே இந்நியமனங்கள் வழங் கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் இது வரையும் மூன்று பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் நான்கு பாடசாலைகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளின் அதி பர் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு அண்மையில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றன.

நடைபெற்ற நேர்முகப்பரீட் சையிலிருந்தே புதிய அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

பாடசாலைகளுக்கான அதி பர் நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில் பாடசாலை களுக்கான ஆசிரியர்களும் அங்கு கடமைக்கு செல்வதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன என மேலும் தெரிவித்தார்.

(த-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தில் 29டீ எனும் பிரிவின் கீழான தீர்மானம்

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தில் 29டீ என்னும் பிரிவில் கீழ்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 31.07.2009ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

யாழ்.பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 05.11.2003ஆம் திகதி இலக்கம் 4064 கொண்டதும் மற்றும் 23.12.2005ஆம் திகதி கொண்ட இலக்கம் 5696 ஈட்டு முறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு.கந்தையா சசிகரன், சின்னப்பு கந்தையா, கமலேஸ்வரி கந்தையா ஆகியோர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது ரூபா நாலு லட்சத்து இருபத்தொன்பதினாயிரத்து ஐந்நூற்றி தொண்ணூறும் சதம் தொண்ணூற்றிமூன்றும் (ரூபா 429,590/93) பணத் தொகையை ஈட்டுமுறி இல.4064 பிரகாரமும் ரூபா பன்னிரண்டு லட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு சதம் முப்பத்து நாலு (ரூபா 1,296,978/34) ஈட்டு முறி இலக்கம் 5696பிரகாரம் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேர வேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இத் தருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 4064உம் 5696ஐயும் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவு அதிகாரம் பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேர வேண்டிய ரூபா நாலு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து ஐந்நூற்றி தொண்ணூறும் சதம் தொண்ணூற்றி மூன்றும் (ரூபா 429,590/93) 25.08.2006ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இருபது தசம் இரண்டு ஐந்து வீதம் (20.25 %) வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபா பன்னிரண்டு லட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு சதம் முப்பத்துநாலுக்கு (12,96,978/34) 22.07.2006ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை (22.5 வீதம்) வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அதை தவிர்த்து மக்கள் வங்கிச் சட்டம் 29 எல் பிரகாரம் அறவிடப்படும். அத்துடன் ஏனைய வரவு தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோயில்பற்று அராலி தெற்கு இறை ''பிளக்க வெட்டியான்'' என்றழைக்கப்படும் உறுதியின்படி நில. பரப்பு 2ம் 0.67 குளி வ.செ.விஸ்தீரணம் கொண்டது. ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்திரன் 24ஆம் திகதி மே மாதம் 2002இல் தயாரித்துள்ள இலக்கம் 40 வரைபடத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டதில் நில பரப்பு 2ம் 5.738 குளி வ.செ.விஸ்தீரணம் உள்ளதுக்குள் வரும் வீடும் கிணறும், செய்பயிர், வான்பயிர் அங்குள்ள அதற்குச் சேர்ந்தவைகளும் இங்கு சொல்லப்பட்ட நில.பரப்பு 2உம் 5.738 குளி விஸ்தீரணம் கொண்டதுக்கும் எல்லைகளாவன

கிழக்கு : நடராஜா பெண் பூமலர்க்குரிய ஆதனம்
வடக்கு : றோட்டு
தெற்கு : கந்தசாமி பெண் கனகம்மாவிற்குரிய ஆதனமும் கணேசலிங்கம் பெண் பத்மாதேவிக்குமுரிய ஆதனம்
மேற்கு : இராமு பொன்னுத்துரைக்கும் மற்றும் கந்தையா பாஸ்கரனுக்குமுரிய ஆதனம்.

(இவை யாவும் யாழ்ப்பாணம் காணிப்பதிவு காரியாலயத்தில் E 690/209ல்) 10.11.2003 திகதியிலும் E 690/233ல் 02.01.2006ஆம் திகதியிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்சபை கட்டளைப்படி,
உதவிப் பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி வடபிராந்தியம்.

(சி/571395)

மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29டீ எனும் பிரிவின் கீழான தீர்மானம்

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டீ என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2008.05.30ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேச நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.06.25ஆம் திகதி கொண்ட இல.5258 இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு.பொன்னையா சற்குணமும், திருமதி சற்குணம் சறோஜாவும் தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பதின்ஏழு லட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்து எட்டு ரூபா (1,799,948.00) பணத்தொகையை ஈட்டு முறி இல.5258 பிரகாரம் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் அண்டின் 29ஆம் இலக்க வங்கி சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதி கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிட்ட ஈட்டு முறி 5258இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனம் யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஸ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேர வேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பதின் ஏழு லட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டையும் (1,799.948.00) பதின் ஏழு லட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ரூபா (1,799,990.00 ரூபா) 2006.10.17ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை 20.25%வீதம் வருடாந்த வட்டியும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச்சட்ட ''29எல்'' பிரகாரம் அறவிடப்படும். ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரம்

1.வடமாகாணம், யாழ்.மாவட்டம்,வலிகாமம் மேற்கு பிரிவு, சங்கானை பரிஷ், சங்கானை மேற்கு இறை ''வெள்ளுருவன் கூடல்'' நிலப்பரப்பு 2 வ.க உறுதியின் படி ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்திரன் 2004.07.20ஆம் திகதி வரையப்பட்ட இல.4017A படத்தின் படி பிரிவு 1ல் பரப்பு 2 வ.க. குளி 06.759 உடன் வீடு கிணறுடன் அங்குள்ள அனுபந்தங்களுடன் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2 வ.க. குளி 06.759இன் எல்லை கிழக்கு கலைவாணி சிறுவர் இல்லமும், ஆறுமுகம் குமரேசனின் ஆதனமும், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கை, தெற்கு கிஷ்ணராசா பெண் மங்கையற்கரசியின் ஆதனம் இலக்கம் E 575/187இன் கீழ் யாழ்ப்பாண காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளை சங்கானை,
மக்கள் வங்கி.

(சி/571395)

பணிப்பாளர் சபை கட்டளைப்படி
உதவிப் பொது முகாமையாளர்,
வடக்கு வலயம்.

O/L மாணவர்களே!
உதயன் வழங்கும் ஒரு நற்செய்தி...

மாபெரும் வலம் - 2010

நாட்டின் எப்பகுதியில் இருந்தும் நாடு முழுவதும் உள்ள பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள்களைப் பயிற்சி செய்ய

உதயன் கல்விச்சுடர்

வழங்கும் அரிய வாய்ப்பு

யாழ்ப்பாணம்
கொழும்பு
திருமலை
வவுனியா
கிளிநொச்சி
மன்னார்
மட்டக்களப்பு
அம்பாறை
கண்டி
பதுளை
நுவரெலியா
புத்தளம்
குருநாகல்

இறுதி எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

கணிதம்
விஞ்ஞானம்
தமிழ்
ஆங்கிலம்
வணிகக்கல்வியும் கணக்கீடும்
வரலாறு

இவ்வருடம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக மாவட்ட ரீதியிலான பிரபல ஆசிரியர்களினது பல்வேறு நுட்பமான மாதிரி வினாத்தாள்கள் வாரம் ஒரு மாவட்டமாக உங்கள் உதயன் நாளிதழில்

01.10.2010

முதல் வெளிவர உள்ளன.

முதல் வாரம் அம்பாறை மாவட்ட பிரபலங்களின் மாதிரி வினாத்தாள்கள்....

தொலைபேசி: 0115788855, 0714278035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வேறு இடங்களுக்கு மணல் எடுத்துச் செல்வதற்கு முற்றாகத் தடை விதிப்பு

அரச அதிபர் றூபாவதி அறிவிப்பு

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் மோசமாகப் பாதிப் படைந்த கட்டடங்களைப் புனர மைக்க வேண்டியுள்ளதால் அங் குள்ள மணல் வளத்தினை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று கிளி நொச்சி அரச அதிபர் திருமதி றூப வதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் அறிவித்துள்ளவை வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து மணல் அகழ்வு பெருமளவில் இடம்பெறுவதால் ஈடுபடுவதால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது.

அத்துடன் யுத்தத்தால் பொதுமக் களது வீடுகள், வியாபார நிலை யங்கள், அரச சார்பற்ற நிறுவனங் களின் கட்டடங்கள் என்பனவற் றின் பெரும் பகுதிகள் சேதமடைந் துள்ளன. அவற்றினைப் புனரமைப் பதற்கு மணல் தேவைப்படுகிறது.

மேற்கூறிய இரண்டு காரணங் களையும் கருத்திற்கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு மணல் எடுத்துச் செல்லப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திற்குத் தேவை யான மணலினைப் பெற்றுக் கொள்பவர்கள் பின்வரும் நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும்

✱மணல் எடுக்கக் கூடிய பிர தேசங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மணலை ஓரிடத்தில் சேமித்து மணல் கோரிக்கை களுக்கேற்ப வழங்குதல்.

✱மணல் தேவைக்கு உரிய கோரிக்கைகள் கிராம உத்தி யோகத்தரின் விதந்துரையுடன் உதவி அரசாங்க அதிபரால் அனு மதி வழங்கப்பட்டு குறிப்பிட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தில் மணல் பெறப்படல் வேண்டும்.

✱ புவிச்சரிதவியல் திணைக் களம், சுற்றாடல் அபிவிருத்தி அதி காரசபை அனுமதி வழங்கப்பட்ட இடங்களில் மணல் சேகரிக்கப்பட வேண்டும்.

✱சுற்றாடல் பாதிப்பை ஈடுசெய் வதற்காகக் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை மணல் பெறு பவரிடம் அறவிடமுடியும்.

✱ கிராம அபிவிருத்தி சங்கங் களிடம் இருந்து மணலைப் பெற்று வேலைத்தளத்திற்குக் கொண்டு செல்வதற்கான வாகனங் களுக்கான அனுமதி, மணலின் அளவு என்பவற்றை உதவி அர சாங்க அதிபர் வழங்குவார்.

✱அனுமதியின்றி மணல், கிரவல் அகழ்வு நடைபெறுவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

✱மணல் விற்பனைக்கு அனுமதி பெற்ற நிலையங்களில் இருந்து ஓர் உழவு இயந்திரத்தில் ஏற்றக் கூடிய மணலை ஆயிரத்து 500 ரூபாவிற்குப் பெற்றுக் கொள்ள லாம். (க-9)

கிளிநொச்சியில் காசநோய் சிகிச்சை

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் காசநோயாளர்களுக்கு புதன்கிழமை தோறும் சிகிச்சைகள் வழங்கி வருவதாக மருத்துவர் யமு னானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்பட்ட சிகிச் சைகள் மூலம் 40 பேர் காசநோயா ளராக இனங்காணப்பட்டுள்ளார் கள்.இந் நோயாளிகளில் அநேகமா னோர் இளவயதினரே என்பது குறிப்பிடத்தக்கது. (க-313-315)

தமிழ்ச் செம்மொழி விழா செயலகம் மன்னாரில் திறப்பு

மன்னார், செப்.28

மன்னார் தமிழ்ச் சங்கத்தி னால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நான்கு நாள்கள் நடத்தப்படும் தமிழ்ச் செம்மொழி விழாவுக் கான நிர்வாகச் செயலகம் மன் னாரில் தமிழ்ச் சங்கத்தின் தலை வர் அருட்பணி தமிழ்நேசன் அடி களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார், வைத்தியசாலை வீதியில் இயங்கவுள்ள இச் செய லகம் ஒக்ரோபர் மாதம் இறுதி வரையில் செயற்படும். தினமும் 24 மணி நேரமும் இயங்கும் இச் செயலகத்திற்கு நிர்வாக அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒக்ரோபர் மாதம் 22ஆம், 23 ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் காலை, மாலை இரு அமர்வு களாகச் செம்மொழி விழா நடை பெறவுள்ளது. தினமும் ஆய்வ ரங்குகளுடன் இயல், இசை, நாட கங்களுமென மூன்று தினங் களும் மன்னார் கலைஞர்களுக் காக ஒரு தினமும் ஒதுக்கப்பட் டுள்ளதுடன் நான்கு தினங்களும் மன்னார் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும்.

அத்துடன் வரலாற்று ஆவணப் பதிவுக்காக மன்னார் தமிழ்ச் செம் மொழி விழா சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும் (க-80)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் அரசினர் அ.த.க.பாடசாலையின் மாணவர்களுக்கு ஜேர்மனியில் வசிக்கும் பெண் ஒருவரால் பால்மா வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட பாட சாலை அதிபர், வலயத்தின் மாணவ அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோ ரைப் படத்தில் காணலாம். *(படம்- கிளிநொச்சி செய்தியாளர்)*

வீட்டுத்திட்ட மதிப்பீட்டுப் பணியில் இந்திய விசேட நிபுணர்கள் குழு

கிளிநொச்சி, செப்.28

இந்திய அரசின் நிதியுதவி யுடன் முல்லைத்தீவு மாவட் டத்தில் நிர்மாணிக்கப்படவிருக் கும் முதற்கட்ட வீட்டுத் திட்டத் துக்கான பூர்வாங்க மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக அந்த நாட்டின் விசேட குழு வொன்று கடந்த வாரம் நேரில் சென்று விரிவாக ஆராய்ந்துள்ளது.

ஐம்பது ஆயிரம் வீடுகளை வட பகுதியில் நிர்மாணித்து வழங் கும் இந்திய அரசின் திட்டத்தின் முன்னோடியாக ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான மதிப்பீட்டுப் பணி களை இந்திய நாட்டின் விசே குழு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஓர் அங்கமாக வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டி ருந்த அந்த விசேட குழுவினர் கடந்த 23 ஆம் திகதி வியாழக் கிழமை முல்லைத்தீவு மாவட்டத் தின் மாந்தை கிழக்குப் பகுதிக்கு நேரில் சென்று மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டது.

இந்த மாவட்டத்தில் முதற்கட் டமாக 200 வீடுகள் அமைக்கப் படவுள்ளன. அதனைத் தொடர்ந்து 12 ஆயிரத்து 500 புதிய வீடு களும் சேதமடைந்த 2 ஆயிரத்து 500 வீடுகளும் நிர்மாணிக்கப் படவுள்ளன.

இந்திய நாட்டின் விசேட நிபுணர்குழு, மாந்தை கிழக்கு வீட்டுத் திட்டப் பயனாளி களுடன் கலந்துரையாடி அந்த மக்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்துள்ளனர். இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகமும் உடனிருந்தார். (க-14)

அதிகரிக்கும் சட்டவிரோதச் செயல்கள் கட்டுப்படுத்த மக்கள் வலியுறுத்து

மன்னார், செப்.28

மன்னாரில் சட்ட விரோதச் செயல்கள் அதிகரித்துக் காணப் படுவதால் உரிய நடவடிக்கை களை எடுக்குமாறு பொதுமக்கள் காவல்துறையினரை வேண் டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கடந்த வாரம் தனது ஐந்து வயதுக் குழந்தையுடன் மன்னார் வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் காணாமற் போயுள்ளார். அத்துடன் மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் பி.ரமேஷ் வாகனத்தில் வந்த 12 முகமூடி அணிந்தவர்களால் தாக்கப் பட்டுள்ளார். இதைவிட இளம் வாலிபர்களால் இளம் பெண்கள் மற்றும் ஏனையோர் கேலி செய் யப்படுவதும், போதைவஸ்துப் பாவனை அதிகரித்துச் செல்வ தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நிலைமை மேலும் மோச மடைவதற்கு முன்னர் இராணு வத்தினரும், காவல்துறையின ரும் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே இங்கு வாழும் அமைதியை விரும்பும் மக்களின் வேண்டுகோளாக உள்ளதென் றும் கூறப்படுகின்றது. (க-80)

ஆளுநர் விருதுக்கு மன்னார் காதர் தெரிவு

மன்னார், செப்.28

வடமாகாண ஆளுநர் விருதுக் கான மன்னாரைச் சேர்ந்த காதர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறும் வடமாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் இறுதி நாள் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறியிடமிருந்து இவ்விருதை யும், பணப் பரிசையும் பெற்றுக் கொள்கிறார்.

செம்மலை ம.வி.யில் அடையாள அட்டைகள்

மன்னார், செப்.28

வவுனியா காமினி மகா வித்தி யாலயத்திலிருந்து இவ்வருடம் ஆறாம் மாதத்தில் விண்ணப்பித்த முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த செம்மலை மகாவித்தியாலய மாண வர்களின் தேசிய அடையாள அட் டைகள் யாவும் கிடைக்கப் பெற் றுள்ளதாக செம்மலை மகா வித்தி யாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பித்த மாண வர்கள் பாடசாலை நேரத்தில் அங்கு வருகை தந்து அடையாள அட் டைகளைப் பெற்றுச் செல்லு மாறும் அவர் கேட்டுள்ளார். (க-20)

கொக்குளாய், விசுவமடுவில் மீள்குடியேற்றம் இன்று ஆரம்பமாகுமென அரச அதிபர் தகவல்

முல்லைத்தீவு, செப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய், விசுவமடுப் பகுதி களில் மக்கள் மீள்குடியமர அனு மதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகம் தெரிவித்தார்.

மீள்குடியமர்வு விடயம் தொடர் பாக அரச அதிபர் மேலும் தெரி வித்தவை வருமாறு:

கரைத்துறைப் பற்றுப் பிர தேச செயலர் பிரிவிற்கு உட் பட்ட கொக்குளாய் கிழக்கு மற் றும் மேற்குப் பகுதியில் மக்கள் மீள்குடியமர இன்று தொடக்கம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுக்குடியிருப் புப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நாளை மறுதினம் மக்கள் மீளக் குடியமர அனுமதிக் கப்படுவர். இவ்வாறு மீள்குடியமர் வதற்கு என மெனிக்பாம் இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப் பட்டிருந்தவர்களில் 250 குடும் பங்களைச் சேர்ந்த 900 அங்கத் தவர்கள் தமது விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். மக்கள் தமது பகுதிகளில் மீளக்குடியமர்வதற் கான போக்குவரத்துச் சேவையை ஐ.ஓ.எம். நிறுவனம் பொறுப் பேற்று நடைமுறைப்படுத்தி வருகிறது- என்றார். (க-14)

ஒக்ரோபர் 24 கிளிநொச்சியில் மரதன் ஓட்டம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி மாவட்ட மெய்வல் லுனர் சங்கத்தினால் அடுத்த மாதம் 24 ஆம் திகதி நடத்தப் படவுள்ள மரதன் ஓட்டப் போட் டிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். 17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் பங்குபற்ற முடியும். எனினும் 17 வயதிற்குக் குறைந்த வர்கள் தமது தாய் அல்லது தந்தையின் சம்மதக் கடிதத்தினை சமர்ப்பித்தால் போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியானது 24 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு முறி கண்டி பிள்ளையார் ஆலய முன் றலில் ஆரம்பமாகும் எனவும் ஆண்களுக்கான போட்டி முறி கண்டியில் இருந்து கண்டி வீதி வழியாகப் பரந்தன் சந்தியை அடைந்து முல்லைத்தீவு வீதி வழி யாகச் சென்று பிரதேச செயலகம் வரை சென்று திரும்பி அதே வழியாக கிளிநொச்சி கச்சேரி வரை சென்று முடிவடை யும். பெண்களுக்கான போட்டி முறிகண்டியில் ஆரம்பமாகி கண்டி வீதி வழியாகப் பரந்தன் சந்தியை அடைந்து அங்கிருந்து அதேவழியாகக் கிளிநொச்சி கச் சேரி வரை சென்று முடிவடை யும்

மேற்படி போட்டிக்கான விண் ணப்பப் படிவங்களைக் குறித்த பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் பெற்று பூரணப்படுத்தி கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுனர் சங்கத் திற்கு கிடைக்க கூடியதாக எதிர் வரும் ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட மெய்வல் லுனர் சங்க செயலாளர் சு.கனகராசா அறிவித் துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி உதய னில் தவறுதலாக அன்றைய தினம் மேற்படி போட்டி நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (க-405)

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை கிளிநொச்சி மத்தி 6 பேர் சித்தி

கிளிநொச்சி, செப்.28

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யின் பெறுபேறுகளின் அடிப்படை யில் கிளிநொச்சி மத்திய கல் லூரியில் இருந்து ஆறு மாணவர் கள் கிளிநொச்சி மாவட்ட வெட் டுப் புள்ளியான 139 புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள் ளனர். அவர்களது விவரம் வரு மாறு:

மாவட்ட நிலை

குணராஜா ரேணுஜன் - 158-19
தேவராசா தயானன் - 155 - 24
சதாசிவம் துவஸ்டா -154- 28
சந்திரகுமார் றிக்சன் -147 -51
தோமஸ் டிலக்சனா- 146 -53
கணேசமூர்த்திபிரியங்கா-142-68.

இக்கல்லூரியில் இருந்து 150 வரையான மாணவர்கள் பரீட் சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 47 பேர் 100 புள்ளி களுக்கு மேல் பெற்றுள்ளதாக வும் 104 பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சான்றிதழ் பெறத் தகுதி பெற்றுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இக்கல்லூரியானது இவ் வாண்டு மார்ச் மாதம் மீள இயங்கத் தொடங்கிய போதிலும் இது வரை பாடசாலைக் கட்டடங்கள் இடைத்தங்கல் முகாமாகப் பயன் படுத்தப்பட்டு வருவதும் தற்காலி கக் கொட்டகைகளில் தரம் செயற்பாடுகள் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.(க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்:

வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம், தெம்பு குடிகொள்ளும் நாள். பல நாள்களாக உங்களுடன் பேசாமல் இருந்த நண்பர் ஒருவர், திடீரெனப் பேசலாம். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். தேக ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

இடபம்:

கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரலாம். உடன் பிறப்புக்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். சேமிக்க நினைத்த பணம் ஒன்றை ஏதோ ஒரு காரியத்திற்காக திடீரென செலவிடலாம். பல நாள்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒரு வரை இன்று நேரில் சந்திக்கலாம். வீண் பயம் ஆள்கொள்ளும்.

மிதுனம்:

மாற்றங்களால் ஏற்றங்கள் பெறும் நாள். உங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரை சந்திப்பீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம். அடைமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். நண்பர்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக்கும்.

கடகம்:

அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். ஏதோ ஒரு வழியில் பணவரவுகளைப் பெறலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் நண்பர் ஒருவரை பார்க்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத் தேடி வரலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக, சில காரியங்களைச் செய்வீர் கள். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். நல்லது நடக்கும் நாள்.

சிங்கம்:

பிள்ளைகளால் தொல்லைகளுக்கு ஆள்படலாம். சிலர் உங்களிடம் கடனாக வாங்கிய பணத்தை, மீண்டும் கொடுத்து விடலாம். எதிர்பார்த்த ஒரு காரியம் நடக்குமோ, நடக்காமல் போகுமோ என கவலை அடையலாம். சக ஊழியர் ஒருவரைப் பற்றி மற்றொரு சக ஊழியரிடம் விமர்சனம் செய்வீர்கள். வாகன யோகம் கிடைக்கும்.

கன்னி:

வேண்டாத வேலைகளில் ஈடுபட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியாக நீங்கள் செய்த தவறுகளை சிலர் சுட்டிக் காட்டலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் கடைசி நேரத்தில் காலைவாரி விடலாம். வாகன பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். தந்தையுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

துலாம்:

நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து செயல்படும் நாள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நிலம், பூமி விவகாரங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப் போகலாம். காரியம் சாதிக்கும் நாள்.

விருச்சிகம்:

எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். உங்களுக்கு தெரியாத விடயம் ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் கேட்டு அறிவீர்கள். குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்லலாம். பழைய நண்பர்கள் சிலர் மூலம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வெற்றிகரமான நாள்.

தனுசு:

நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். வெளியூர் பயணங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். சிலர் உங்களை வம்பில் மாட்டி விடலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

மகரம்:

திட்டமிட்ட காரியம் ஒன்றை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். இறைவழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் வெளியூர் பயணங் கள் செல்லலாம். வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டிய நாள்.

கும்பம்:

மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். இரண்டு நாள்களுக்கு முன் விமர் சித்த ஒருவர் இன்று உங்களைப் பாராட்டலாம். நெருங் கிய நண்பர் ஒருவருடன் சேர்ந்து நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். பண உதவிகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் நினைத்தது நடக்கலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

மீனம்:

இனம்புரியாத கவலைகள் ஆள்கொள்ளும் நாள். கடனாக வாங்கிய பணத்தை ஒருவர் உங்களிடம் திரும்ப கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். வெளியில் செல்லும் போது, சில பொருள்களை மறந்து விட்டு செல்வதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். தொழில் ரீதியாக தவறுகளைச் செய்ய நேரிடலாம்.

மீள்குடியேறியுள்ள மக்களுக்கு வறுமை ஒழிப்பு கடன்திட்டம்

யாழ்ப்பாணம் செப்.27

தமது செந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ள மக்கள் மீண்டு புதிதாக தொழில்களை ஆரம்பிக்கும் வறுமை ஒழிப்பு நுண்நிதிக்கடன் திட்டத்தைப் பயன் படுத்துவதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை அதிக ரிக்க முடியுமென இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய பிரதிப் பணிப்பாளர் அ.சிறிதரன் தெரிவித் துள்ளார்.

தற்போது மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகின்ற போதிலும் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு வங்கிகள் எவ்வாறான கடன் திட்டங்களை வழங்கிவருகின்றன எனக் கேட்டபோதே அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் புதிதாகத் தொழில் ஆரம் பிப்பவர்கள் இலகுவாகக் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் இது ஏனைய கடன் திட்டங்களைப் போல் இல்லாமல் மக்கள் தாமாகவே குழுக்களை அமைத்து ஒருவர் மாறி ஒருவர் பிணைவழங்க முடியு மெனவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களும் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். (ற-15)

கனவு வியாபாரிகள்

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் ஒரு கனவு கண்டார். அக்கனவிலே கறுப்பாக ஓர் உருவம் அவரின் முன் வந்து நின்றது. அவர் பயந்து போய் '' நீ யார்?'' என்று கேட்டார். அதற்கு '' நான் தான் இயமன்!'' என்றது அவ்வுருவம். '' எதற்காக வந்திருக்கிறாய்?'' என்று ராஜா கேட்டவுடன் ''உனக்கு என்னைச் சந்திப்பதை ஞாபகப்படுத்த வந்திருக்கிறேன்'' என்று கூறி மறைந்து விட்டது.

உடனே ராஜா அதிர்ச்சியில் முழித்தவுடன் கனவு கலைந்துவிட்டது. கலக்கமும் குறையவில்லை. நள்ளிரவு நேரம் தூக்கமும் வரவில்லை. உடனே தனது அமைச்சர்கள், ஆலோசகர்கள், அரண்மனைச் சோதிடர்கள் எல்லோரையும் அழைத்துத் தான் கண்ட கனவைக் கூறி '' அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்தைக் கூறினர். அந்தக் கருத்துக் களில் அவருக்குத் திருப்தியில்லை.

அந்தநேரம் அரண்மனையில் வேலை பார்க் கும் வயதான பெரியவரொருவர் வந்து '' மிக வேகமாக ஓடக் கூடிய ஒரு குதிரையிலேறி இவ் விடத்தை விட்டுத் தப்பிப் போய்விடுங்கள்'' என்றார். மன்னருக்கும் அது சரி என்று தோன்றியது. உடனே தனது அதிவேக குதிரையிலேறி அதிக தூரத்துக்கு வந்துவிட்டார். ஏதோ ஓர் ஊர். அவ்வூரின் எல்லையிலே உள்ள சோலையில் சிறிது நேரம் இளைப்பாற எண்ணி குதிரையை ஒரு மரத்தில் கட்டினார். அவருக்குச் சரியான பசியும் தாகமுமாக இருந்தது. என்ன செய்யலாமென நினைத்துத் திரும்பியபோது அவரது தோள்மேல் ஒரு கை விழுந்தது. மன்னர் திரும்பிப் பார்த்தார். கனவிலே வந்த அதே கறுப்புருவம். மன்னருக்கு அதிர்ச்சி. '' ஏன் சிரிக்கிறாய்?'' என்று அவ்வுரு வத்தைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அவ்வுருவம் '' இதுதான் நான் சொன்ன இடம்! சரியான நேரத்தில் உன்னை இங்கு கொண்டு வந்து சேர்த்த எனது குதிரைக்கு நன்றி''என்று கூறியது.

மக்களிடம் கனவுகளைத் தவிர வேறு எதுவு மில்லை. நீண்ட காலமாகக் கனவுகளை விற்று சுரண்டிப் பிழைக்கும் கனவு வியாபாரிகள் எங்கும் இருந்துதான் வருகின்றார்கள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

அர்த்தமுள்ள வாழ்வு

'' வாழ்க்கை அன்பு உள்ள போதுதான் அர்த்தமுள்ளதாகிறது?''

'' தனக்காக மட்டுமே வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டவர்தான் அன்புள்ளவர்''

'' பிறருக்காகவும் வாழ்வதுதான் அன்பு என்றால், பிறருக்காகச் சாக நேர்ந்தால் சாகலாமா? அப்படிச் சாவதும் அன்புதானா?''

''பிறருக்காகச் சாக நேர்ந்தால் சாவும் ஒரு சாவல்ல... நீடித்த வாழ்வே! தர்மம் அவர்களைச் சாகவிடாது. மரணத்தை நிறுத்திவிடும்''

'' அப்படிச் செத்தவர்களே இல்லையா?''

சுய நலத்துடன் வாழும் வாழ்க்கை ஆரம்பத்தில் இனிமையாக இருக்கும். பின்பு மிகமிகக் கசக்கும். பிறர் துயர் உணர்தல், பிறர் நலம் யோசித்தல்,பிறருக்கேற்ப தான் சிறிது மாறுதல்... விட்டுக் கொடுத்தல் இவை ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். முடிவில் மிகமிக இனிமையாக இருக்கும். வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கும். வாழ்வில் பற்று இருக்கும்.

அவன் ஒரு பணக்கார இளைஞன். வாழ்வின் போகங்களில் மூழ்கித் திளைத்தவன். தனது வசதிக்கு உலகத்தையே வளைத்துப் போட்டு அடிமையாக்கி அனுபவித்த சாம்ராஜ்யம் அவனுடையது! தனது ஊழியர்களை அவன் அவமதித்திருக்கிறான், அடித்திருக்கிறான். தன் பொருட்டு அவர்கள் உழைக்கக் கடமைப்பட்டவர்கள் என்றே அவன் அவர்களைப் கஷ்ரப்படுத்தி இருக்கிறான்.

பெற்றோர்கள் தன்னைப் பேணக் கடமைப்பட்டவர்கள். கேட்கும் போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டியவர்கள் என்ற உரிமையில் அவன், பெற்றோர் மனதைக் காயப்படுத்தி இருக்கிறான். கண்ணீர்விடச் செய்திருக்கிறான். எல்லாமே தனக்காக.. எதுவுமே தனக்காக என்பதே அவனது தீர்மானம். அதனால் முப்பது வயதுக்குள் அவனுக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. வெறுப்பு விளைந்தது. அமைதி தேடி அங்கும் இங்கும் அலைந்தான். முடிவில் ஒரு குருவிடம் தன் துயரத்தைச் சொல்லி அழுதான். ''வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது'' என்று அழுதான்.

அவனது கதையைக் கேட்ட குரு தட்டிக் கொடுத்தார். ''அதுசரி ... வாழ்வில் உனக்கு என்ன தெரியும்...? ஏதாவது கலை, வித்தை, திறமை தெரிந்தால் சொல்லு. நான் தெரிந்து கொள்கிறேன்'' என்றார்.

'' செஸ் விளையாடத் தெரியும்... மிக நன்றாய் விளையாடுவேன்'' என்றான். குரு

பக்குவமான ஒருவரை அழைத்து அவனுடன் செஸ் விளையாடச் சொன்னார். அந்தச் சீடரின் கண்களில் கனிவு... வார்த்தையில் பணிவு.. நெஞ்சில் துணிவு. ஒளி உமிழும் உயர்வான முகம். ஆனால் அவருக்கு செஸ் என்றால் என்ன என்றே தெரியாது. ஆனால் குரு வார்த்தையை மீறும் வழக்கம் அவருக்குக் கிடையாது! குரு சொன்னதால் அந்த இளைஞனுடன் செஸ் விளையாடத் தொடங்கினார்.

அடுத்துக் குரு செய்த காரியம் சிக்கலானது. பளபளப்பான கூர்வாள் ஒன்றைக் கொண்டு வரச் சொல்லி நடுவில் வைத்தார். ஆட்டத்தில் யார் தோற்கிறார்களோ அவர்கள் வெட்டப்படுவார்கள் என்று அறிவித்தார். சீடரின் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் இளைஞன் பயந்துவிட்டான். கவனமாக விளையாட ஆரம்பித்தான்.

சீடருக்கு செஸ் விளையாடத் தெரியாது என்பது அவனுக்கு ஆரம்பத்தில் தெரியாது. ஆனால் எச்சரிக்கையுடன் ஆடினான். நேரம் போகப் போகப் புரிந்துவிட்டது! சீடரின் காய்களை வெகுவாக வெட்டித் தள்ளினான். மரணத்தின் பிடியில் இருந்து தாம் தப்பிவிட்டதாகச் சந்தோஷப்பட்டான். சீடர்தானே சாகப் போகிறார் என்று வெகு தீவிரமாக ஆடினான். சீடரோ தோல்வி, மரணம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் நிதானமாக ஆடிக் கொண்டே இருந்தார். இளைஞனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவரால் அமைதியாக இருக்க முடிகிறது. யோசித்தான் அவருடைய ஒளி மிகும் தாமரைக் கண்களை, நிலவு முகத்தை உற்று உற்றுப் பார்த்தான்.

அவன் மனம் என்னவோ செய்தது! எவ்வளவு நல்லவர் இவர்! இவர் சாவதா? நான் எவ்வளவு அயோக்கியன்! நான் வாழ்ந்து என்ன பயன்? இவரல்லவா வாழவேண்டும் என்று பொறிதட்டியது. தாறுமாறாக ஆட ஆரம்பித்தான். சீடர் வெற்றி பெறட்டும் என்று வேண்டும் என்றே தன் காய்களைப் பலி கொடுத்தான்.

பளிச்சென்று குரு எழுந்தார். செஸ் பலகையைக் கைகளால் கவிழ்த்தார். இரண்டு பேரும் தோற்கவில்லை என்றார். இளைஞனைப் பார்த்து ''ஆரம்பத்தில் சாவுக்குப் பயந்து வெறியோடு விளையாடினாய். பிறகு இவர் வாழ வேண்டும் என்று சாகவும் துணிந்தாய். பிறருக்காக வாழ்வதுதான் வாழ்வின் உண்மையான அர்த்தம் என்பது உனக்குப் புரிந்துவிட்டது. ஆச்சிரமத்தில் கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போ'' என்று ஆசி கூறினார்.

பிறருக்காக வாழும் போதுதான் வாழ்க்கை அர்த்தம் உடையதாகிறது.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
ndolaham.org | aavanaham.org

சாதனைப் பாதையில் வரலாறு படைக்கும் டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வசாவிளான் மின்மீன் விளையாட்டுக்கழகம் நடத்திய சுற்றுப் போட்டியிலும் டயமன்ட்ஸ் கழகம் வெற்றியினைப் பெற்றிருந்தது. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் சுற்றுப்போட்டி 7 பேர் கொண்ட சுற்றுப்போட்டியாக இருந்தபோதிலும் டயமன்ட்ஸ் அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது. இந்த அணியில் சி.ரவீந்திரன், பொன்ராஜன், சி.யோகராஜா, லோகதாசன், அ.பரமநாதன், குணசேகரன் போன்றோரின் சிறப்பாட்டம் வெற்றிக்குச் சான்றாக அமைந்தது. இதன் பின்னர் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற அல்வாய் நண்பர்கள் சுற்றுப்போட்டி, கொற்றாவத்தை றேஞ்சர்ஸ், கொற்றாவத்தை சிவானந்தா சுற்றுப்போட்டிகள் மூலம் டயமன்ட்ஸ் அணி முன்னணி பெற்றது.

குறிப்பாக றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மாவட்ட நிலைப் போட்டியில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த பொற்பதி அணியை வெற்றிபெற்று டயமன்ட்ஸ் அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது. இதுமேலும் டயமன்ட்ஸ் அணியை வளர்த்தெடுக்க துணை நின்றதாக டயமன்ட்ஸ் கழகத் தலைவர் தி.வரதராஜன் அவர்கள் தெரிவித்தார். இந்தக் காலத்தில் மேற்கூறப்பட்ட அணிகளுடன் சேர்ந்து இ.குமாரராஜன், கி.தர்மேந்திரா, இ.அனுராகாந்தன், தி.வரதராஜன் போன்றோர் சிறப்பாக விளையாடி இருந்தார்கள். தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் ஒழுங்கமைக்கப்பட்ட மின் ஒளியில் நடைபெற்ற மிகப் பிரமாண்டமான உதைபந்தாட்டப் போட்டியில் டயமன்ட்ஸ் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது. இந்தப் போட்டியில் கி.தர்மேந்திரா, சி.குமாரராஜன் ஆகியோரின் சிறப்பாட்டங்கள் ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்தது. தொடர்ந்து கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் டயமன்ட்ஸ் அணி சிறப்பான இடத்தை வகித்தது. ஒவ்வொரு வருடமும் இறுதி ஆட்டம் வரை வந்து வெற்றிகொள்ளும் அணியாக விளங்கியது மட்டுமல்லாமல் பல வருடங்கள் முதலாம் இடத்தைப் பெற்று பிரதேசத்தின் நட்சத்திர அணியாகத் திகழ்ந்தது. இந்தப் போட்டியிலே கலந்துகொண்ட அனுராகாந்தன், அரவிந்தன், பிறேம்குமார் ஆகிய வீரர்கள் மாவட்ட அணியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றனர். அத்துடன் இவர்கள் வடக்கு, கிழக்கு மாகாண அணியிலும் விளையாடினார்கள்.

இக்காலத்தில் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 'சி' சான்றிதழுக்கான பயிற்சி முகாமுக்காக கி.தர்மேந்திரா, இ.அனுராகாந்தன், தி.வரதராஜன் ஆகியோரும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து ஒலிம்பிக் சொலிவிடா ரிற்றி பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். இது டயமன்ட்ஸ் அணி நவீன நுட்பங்களையும் திறன்களையும் தந்திரோபாயங்களையும் பயில வாய்ப்பாக அமைந்தது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியிலும் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக சுற்றுப்போட்டியிலும், சுடரொளி விளையாட்டுக் கழகத்தின் சுற்றுப்போட்டியிலும் நாவாந்துறை சென்.மேரிஸ் நடத்திய சுற்றுப்போட்டியிலும் டயமன்ட்ஸ் கழகம் சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது. அதேவேளை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியிலும் பருத்தித்துறை லீக் நடத்திய வடக்கின் வசந்தம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றது. தற்போது வ.பிறேம்குமார், உஷானன், கொலிங்டன், ஜனார்த்தனன், நிமலன், நிர்மலன், ஸ்ரீதர், அனுராகாந்தன், ரஜனிகாந், ராஜ், பிரியங்கன், றூபகாந்தன் போன்றோர் சிறப்பாக விளையாடி வருகின்றனர். அத்துடன் டயமன்ட்ஸ் வீரரான வி.சாரங்கன் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 'சி' பயிற்றுநர் தரத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் டயமன்ட்ஸ் கழகத்தைச் சேர்ந்த வ.மனோராஜ், வ.ரூபகாந்தன் ஆகியோர் இளைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கொழும்பில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றனர். இக்காலத்தில் கழக மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் நட்சத்திர வீரனாக டயமன்ட்ஸ் கழக வீரன் ம.பிறேம்குமாரை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இனங்கண்டு இலங்கையின் தேசிய அணிக்கு சிபார்சு செய்தது. தேசிய அணியின் பயிற்சிகளிலே சித்திபெற்ற அவர் இலங்கை தேசிய அணியில் இணைக்கப்பட்டு தற்பொழுது பயிற்சிகளை மேற்கொண்டுள்ளார். பருத்தித்துறைப் பிரதேசத்தில் தேசிய அணியில் இணைக்கப்பட்ட இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு பிரதேச மட்டத்தில் மட்டுமல்ல தேசிய ரீதியிலும் சாதனைகளைத் தொடரும் இந்தக்கழகம் மென்மேலும் வெற்றிப்படிகளை எட்டும் என உறுதியாக கூறலாம்.

(முற்றும்)

புதிய அத்தியாயத்தில் பிரவேசிக்கும் ஊறணி வைத்தியசாலை

தொகுப்பு: ஹரிஸ்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு ஊன்றுகோலாக விளங்கிய அப்புக்குட்டிப்பிள்ளை என்பவருக்கு இலங்கை அரசு 'முகாந்திரம்' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இவரது உருவச் சிலை தற்போது வைத்தியசாலையில் திறக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியசாலை விடுதிகளின் வரிசையில் விஷ்ணுசுந்தரம் அவர்களினால் அவரின் தாயாரின் பெயரில் விடுதி ஒன்று கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் 02.02.1966இல் அப்போதைய இலங்கைச் சுகாதார அமைச்சராக இருந்த அமைச்சர் எம்.டி.எச்.ஜெயவர்த்தன அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் இப்பிரதேச மக்களின் நிதியுதவிகளின் மூலம் சத்திரசிகிச்சைக்கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டடம் 1967 மார்ச்மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு 1970 மார்ச் மாதம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 'சுற்றயல்கூறு' என்ற தரத்தில் இருந்த இவ்வைத்தியசாலை ஒரு மாவட்ட வைத்தியசாலையாக 1992ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. இதற்கு ஊன்றுகோலாக இருந்தவர் சுப்பிரமணியம் என்பவராவார். பிரதேச செயலக நிதியிலிருந்து சத்திர சிகிச்சைக் கூடமும் அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியின் மூலம் ஆண்கள் விடுதியும் புனரமைக்கப்பட்டு காணப்படுகின்றன.



இவ்வைத்தியசாலைக்கு வருவாயை ஏற்படுத்துமுகமாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் சிற்றுண்டிச்சாலையும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரிகள் வரிசையில் டாக்டர் சோதிநாதன், டாக்டர் பி.நடராஜா, டாக்டர் முத்துராஜா, டாக்டர் சு.பாலகிருஷ்ணன், டாக்டர் பி.கதர்காமத்தம்பி, டாக்டர் த.அருளானந்தம், டாக்டர் சி.விவேகானந்தன், டாக்டர் த.உபேந்திரன், டாக்டர் செல்வி ப.ஆறுமுகம், டாக்டர் கே.ஜேசுதாசன், டாக்டர் கா.இராஜேந்திரன், டாக்டர் ப.ஆண்டியப்பர் R.M.O., டாக்டர் பொன். பாலகிருஸ்ணன், டாக்டர் செல்வி சி.பத்மலோஜினி, டாக்டர் செல்வி உ.சிவபாதசுந்தரம், டாக்டர் ப.அப்பாத்துரை, டாக்டர் மயிலேறும் பெருமாள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

தற்போது இவ்வைத்தியசாலையில் சராசரி 75 நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். பிரதி வியாழன் தோறும் குருதியமுக்க சிகிச்சையும் சனிக்கிழமை தோறும் நீரிழிவு நோய் சம்பந்தமான சிகிச்சையும் நடைபெறுகின்றன. குளிரூட்டப்பட்ட அறையிலே பற்சிகிச்சை கூடம் நவீன உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வளர்ச்சியும் எழுச்சியும் கண்டு வரும் இவ்வைத்தியசாலை நவீன சிகிச்சைக் கூடங்களையும் மேலும் பல வைத்திய நிபுணர்களையும் கொண்ட ஒரு சிறந்த வைத்தியசாலையாக மாற்றமடைந்து மக்கள் பணியான வைத்தியப்பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையும் எதிர்பார்ப்புமாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

25 ஆவது வருடம்

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வெள்ளிவிழாவை முன்னிட்டு

எழுத்தாக்கப் போட்டிகள்

உதயன் நாளிதழ் தனது 25 ஆண்டுகள் நிறைவுநாள் நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாடும் நோக்குடன் எழுத்தாக்க ஆர்வமுடைய உதயன் வாசகர்களிடையே பின்வரும் திறனறியும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

1. சிறுகதை
2. புதுக் கவிதை
3. மரபுக் கவிதை
4. கட்டுரை

பரிசுகள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவாகும் ஆக்கங்களுக்குப் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே:-

முதலாம் இடம் ரூபா 25,000/-
இரண்டாம் இடம் ரூபா 15,000/-
மூன்றாம் இடம் ரூபா 10,000/-

தெரிவு செய்யப்படும் மேலும் 08 ஆக்கங்களுக்குச் சான்றிதழ் வழங்குவதுடன் தெரிவாகும் அனைத்து ஆக்கங்களும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

சிறுகதை ஆக்கம் - நிபந்தனைகள்

- சிறுகதை ஒவ்வொன்றும் சமகால சமூகப்பண்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாய் மானிட மேன்மையை அவாவுவனவாய் அமைதல்வேண்டும்.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை சிறுகதைகளையும் எழுதலாம். சிறுகதை எழுதப் பட்ட தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதுவதைத் தவிர்க்கவும். தனியான தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதி இணைக்கவும்.

கவிதை ஆக்கம் - நிபந்தனைகள்

- கவிதைகள் யாப்பமைதி பேணுபவையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் தனித்தனிப் பிரிவாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.
- கவிதைகள் சமூகப் பிரஞ்ஞை உடையனவாய் மானிடத்தின் மேன்மையை அவாவுவன வாய் அமையவேண்டும்.
- இலக்கண வழுக்கள் சொல் / எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.
- கவிதைகள் 40 அடி / 60 வரிகளுக்கு மேற்படாதவனவாய் அமையவேண்டும்.

கட்டுரை ஆக்கம் - நிபந்தனைகள்

பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை ஆக்கப்படுதல் வேண்டும்.

1. மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்
2. புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகுமா?
3. எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்
4. ஈழத்தில் மெல்லத்தமிழ் இனி ..... !
5. தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா?

எழுதப்படும் கட்டுரைகள் A4 தாளில் அச்சிடப்பட்டதெனின் 06 பக்கங்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும். கையெழுத்தெனின் A4 தாளில் 06 பக்கங்களுக்குள் உள்ளடக் கத்தக்கவாறு அச்சிட்டுப்பெறும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்

- ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கம் ஒவ்வொன்றும் தனது சொந்த ஆக்கம் என்பதையும் முன்னர் எப்பொழுதும் வெளியிடப்படாததும், வேறெவரது ஆக்கமும் அல்ல என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை / புதுக்கவிதை / மரபுக்கவிதை / கட்டுரை என்பதைக் குறிப்பிடவும். (தேவையற்றதை நீக்கிவிடவும்)
- இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் ஆக்கங்களே பரிசீல னைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆக்கங்கள் யாவும் 15.10.2010ந் திகதிக்கு முன்னர் உதயன் பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதயன் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாதவையும் குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஆக்கங்கள் கையெழுத்தாகவோ அச்சிடப்பட்டனவாகவோ அமையலாம்.
- உதயன் நிறுவனத்தினர் மற்றும் சகோதர நிறுவனங்களில் பணிபுரிவோர் இப் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாது.

உதயன் வெள்ளிவிழா – 2010

எழுத்தாக்கப் போட்டிகள் விண்ணப்பப்படிவம்

சிறுகதை/ புதுக்கவிதை/ மரபுக்கவிதை/ கட்டுரை
(தேவையற்றதை கீறிட்டு நீக்குக)

1. எழுத்தாளர் பெயர் : .....
2. புனைபெயர் இருப்பின் : .....
3. முகவரி : .....
4. ஆக்கத்தின் தலைப்பு : .....

இது எனது சொந்த ஆக்கம் என்பதையும் இதற்கு முன்னர் எவ்வழியிலும் இது வெளியிடப்படவில்லை என்பதையும் இது வேறு எவரது ஆக்கமும் அல்ல என்பதையும் இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவர். கையொப்பம்

விழிப்புலனற்றோரின் தேவைகளை நிறைவேற்ற அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும்

சங்கத்தின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம் செப்.28

பார்வையற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நிறுவனங் கள் முன்வர வேண்டும் என யாழ்.மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சா.மகேந் திரன் தெரிவித்தார்.

ஐ.டி.எம். நிறுவன சாவகச்சேரிக் கிளை யின் ஓராண்டு நிறைவையொட்டி யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு 05 கணி னிகளை அன்பளிப்பாக வழங்கும் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகை யில் தெரிவித்ததாவது:

பார்வையற்றவர்களை நாம் முதலில் இனங்கண்டு அவர்களை எமது சங்கத்தில் அங்கத்தவராக்கி வெள்ளைப் பிரம்பினை வழங்கி தன்னம்பிக்கையுடன் இந்த சமூ கத்தில் வாழச் செய்கின்றோம். எனினும் கண்பார்வையற்ற பலர் இன்னும் தமது வீடுகளில் எதிர்காலம் என்னவென்று தெரியாமல் முடங்கிக் கிடக்கின்றார்கள். அவர்கள் யாரும் இன்னொருவரில் தங்கி வாழக் கூடாது என்பதுதான் எமது நோக்கம்.

கடந்த 35 ஆண்டுகளாக இயங்கி எமது சங்கத்தில் கண்பார்வையற்றோருக்கு சுய தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களு டைய வாழ்வில் தன்னம்பிக்கை ஏற் படுத்தி வருகின்றோம். மேலும் அவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப் படும்பொழுது உதவிகளை வழங்கி வரு கின்றோம்.

இன்றைய தொழில்நுட்ப விஞ்ஞான யுகத்தில் நாம் எமது அங்கத்தவர்களுக்குக் கணனி அறிவு பற்றி எடுத்துக் கூறுவதற்கு எம்மிடம் போதிய கணனி வசதிகள் இல் லாமல் இருந்த குறைபாடும் இன்று டன் நீங்குகின்றது.

ஐ.டி.எம் நிறுவனம் போன்று ஏனைய நிறுவனம் எமக்கு உதவ முன்வந்தால் நாமும் இந்தச் சமூகத்தில் தன்னம்பிக்கை யுடன் மிளிர முடியும். எமக்குரிய தேவை கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியிருக் கின்றன. அவற்றை நிவர்த்தி செய்ய முன் வர வேண்டும் எனக் கேட்கின்றேன் இப் படி அவர் கூறினார். (ற-14-15)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்

பேராசிரியர் ஜயந்த களுபோகல தகவல்

யாழ்ப்பாணம்,செப்.28

எமது நாட்டின் பிரஜை ஒருவருக்கு உரிமைகள் மறுக்கப்படுதல், தவறாகத் தண்டிக்கப்படுதல், சமூகத்தில் அநீதிகள் இடம்பெறுதல் ஆகியவற்றின்போது மனித உரிமைகள்அமைப்பில் பணிபுரியும் நாம் துணிவுடன் குரல் கொடுத்து பாதிக்கப்பட்ட வர்களுக்கு சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என சமாதான நீதி வான்கள் மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த களுபோகல தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கான சமாதான நீதிவான்கள் மனித உரிமைகள் அமைப் பின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்ப்பா ணம் கடற்கரை வீதியில் உள்ள வீதி அபி விருத்தி அதிகாரசபைக் கேட்போர் கூடத் தில் அண்மையில் நடைபெற்றது.

சுமார் நாற்பதுக்கும் அதிகமான சமா தான நீதிவான் கள் கலந்து கொண்ட இந்த அங்குரார்ப் பணக் கூட்டம் சமாதான நீதி வான்கள் மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த களுவாவில தலைமையில் நடை பெற்றது.

உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் தனக்குரிய சகல விதமான உரிமைகளை யும் சாதி, சமய, குலபேதமின்றி தனக்குச் சொந்தமான நாட்டினுள் அனுபவிக்க உரி மையுண்டு எனவும் அவர் தெரிவித்தார். (ற-236)

ரவிழிகளுடன்
ராண்டு நினைவலைகள்

அன்னை
மடியில்:
18.03.1923

ஆண்டவன்
அடியில்:
19.09.2008

திதி: அபரபக்க பஞ்சமி
28.09.2010

அமரர்
நாகநாதர் ஆறுமுகம்
நமசிவாயம்

(புங்குடுதீவு தீவர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதிபதியும், மக்கள் குழுத்தலைவரும், முன்னாள் தீவுத்தொகுதி ப.நோ.கூ.சங்கங்களின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வை அதிகாரியும் ஒய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் பரீட்சைத் தினைக்களம், கொழும்பு)

வாழ்வேனும் ஓடத்தில் ஏறிய மாந்தரின்
பாதை நெடுகிலும் பலப்பல பாறைகள்.
தடுக்கிய இடமெல்லாம் தளராது வழிகாட்டி
தனித்திடாது எம்மனதில் அழியாது உருவெடுத்தீர்
ஓடிடும் கணங்களில் தோன்றிடும் உம் நினைவு
அன்பான அரவணைப்பும் அறிவான வழிகாட்டுதலும்
உதாரணமான உயர்ந்த நற்குணங்களும்
தலை நிமிர்ந்த தலைமைத்துவப் பண்புகளும்
இணைந்த உம் இடத்தின்...
இழந்துவிட்ட இணையற்ற அருமைதனை
பெருமையோடு சிந்தை தொட்டுச்செல்லும்
புவியதனில் நீங்கியதுநின் சரீரம் மட்டுமே...
துவி வருடம் ஆனாலும் எம்மவர் மனங்களில்
அணையாது ஒளிபரப்பும் அகல் விளக்காய் விட்ட
மாறாத உம் நினைவுகளுடன்....

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

43/1, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(103891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் ஆசிரியர் சங்கச் செயற்பாடுகள் மீண்டும் புத்துணர்ச்சி அடைவது நிச்சயம்

காரைதீவில் பொதுச் செயலாளர் மகாசிவம் உரை

மட்டக்களப்பு,செப்.28

''ஒரு நூற்றாண்டு காலச் சேவையை ஒரு சில தசாப்த காலத்துள் செய்து கொடி கட்டிப் பறந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த சில காலம் மௌனித்திருக்க வேண்டியதாயிற்று. இன்றைய சூழலில் சங்கம் மீண்டும் புத்துணர்ச்சி பெற்று இயங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நிச்சயமாக மீண்டும் அது ஆசிரியர் குரலாய் முழங்கும்.''

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் காரைதீவு சங்கக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் மாவட்ட செயலாளரும், பிரசாரச் செயலாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இதற்கு முன்னர் காரைதீவுக் கிளைச் செயலாளராகவிருந்த அமரர். ம.சிவபாலனுக்கு 2 நிமிட அனுதாப அஞ்சலி செலுத்தப்பட்டது.

செயலாளர் மகாசிவம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

''2008இல் அமுலாகும் எனக் கூறப்பட்ட ஆசிரியர் பொதுச் சேவை சுற்றுநிருபம் இன் னும் அமுலுக்கு வரவில்லை. அப்படி அமுலுக்கு வந்தாலும் அவ்வருடத்திலிருந்து பதவி உயர்வுகளும், 2012இலிருந்து சம்பளமும் அமுலாகுமென அறிவிப்பார்கள். நிலுவைகள் ஐந்து வருடங்களின் பின்னரிலிருந்து கணக்கிடப்படும் என்பார்கள்.

அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தால் இந்தக் காலத்திலேயே அச்சுற்று நிருபம் அமுலுக்கு வராது. எனவே, ஆசிரிய தொழிற்சங்கங்கள் உரக்கக் குரல் கொடுத்துப் போராட்டம் நடத்தும்போது விரைவாக அமுலுக்கு வரும்.

எனவே, ஆசிரியர்களுக்குரிய உரிமைகளுக்காய் குரல் கொடுக்கும் வல்லமை, பக்குவம் எம்மிடம் மீண்டும் உயிர் பெறவேண்டும். அதற்கு ஆசிரியர்களுக்கான உரிமைகள் எவை? கடமைகள் எவை? இவற்றை முதலில் ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்.

அதற்காகவே நாம் மாவட்டம் தோறும் சங்கப் பிரதிநிதிகளுக்கு இருநாள் செயலமர்வுகளை நடத்தி வருகிறோம். அவற்றில் பங்கு பற்றி நிலைவரங்களை அறிந்து, புரிந்து தெளிவடைய வேண்டும்.

எமக்குரிய வேதனம், சம்பள உயர்ச்சி, ஓய்வூதியம் ஆகிய உரிமைகள் பற்றி அறிந் திருக்க வேண்டும். உரிய காரணமின்றி அவற்றை யாராலும் மறுக்கமுடியாது.'' - என்றார்.

அதிபர்களான தி.வித்தியாராஜன், எஸ். மணிமாறன், முன்னாள் அதிபர் த.சுந்தரலிங்கம் ஆகியோரும் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர். காரைதீவுக் கிளையின் புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (ளி)

மட்டக்களப்பு நகரத்தில் 'நெக்டப்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தகவல் நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது. இவ்வைபவத்தில் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் பௌசி, பிரதி அமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் அழைத்துவரப்படுகின்றனர்

கிழக்கில் பாரிய விவசாய அபிவிருத்தி வேலைகள்

மட்டக்களப்பு,செப்.28

கடந்த 30வருடங்களுக்குப் பின் கிழக்கு மாகாணத்தில், கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், விவசாயிகளின் முழுமையான ஒத்துழைப்போடு பாரிய விவசாய வேலைத்திட்டங்கள் அரச அதிபர்களின் கண்காணிப் பின்கீழ்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக கிழக்கு மாகாணசபையின் விவசாயத் துறை அமைச்சு 14 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது முதற்கட்ட வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்

ளன. 30வருடங்களுக்கு மேல் நெற்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்கள் இம்முறை பயன்படுத்தப்படவுள்ளன என விவசாயப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

இந்தத் திட்டத்தின் கீழ் கூடுதலான வருமானத்தை ஈட்டும் பொருட்டு தேனீ வளர்ப்புத் திட்டமொன்றும் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

ஓட்டுத்தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கக் கோரிக்கை

யுத்தசூழ்நிலை காரணமாக கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர், முதிரயடி ஏற்றம் (கொடுவா மடு)ஆகிய இடங்களிலுள்ள ஓட்டுத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

அவற்றை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு ஈரோஸ் கட்சியின் தலைவர் இராஜநாதன் பிரபாகரன், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்தொழிற்சாலைகளை திறப்பதன் மூலம் சுமார் 500 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கமுடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ளி)

சுதேச ஆயுள்வேத வைத்தியர்களுக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் பணியாற்றும் சுதேச ஆயுள்வேத சித்த வைத்தியர்களுக்கு ஆயுள்வேத உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலையிலுள்ள பொது நூலகங்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட பொதியுடனான இறுவெட்டுகளும் நூலகர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத்தில், திருகோண மலைப் பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகத் தகவல் தொடர்பாடல் உத்தியோகஸ்தர் சர்வேஸ்வரன் தலைமையில் கையளிப்பு வைபவம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் குணநாதன், நிக்கோட் திட்ட உதவிப் பணிப்பாளர் புவனேந்திரன், கிழக்கு மாகாண ஆயுள்வேத பணிப்பாளர் திருமதி தர்மராஜா உட்படப் பல முக்கியஸ்தர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (ளி)

ஊவா மாகாண பாடசாலைகள் சகல வசதிகளுடன் தரமுயர்வு

முதலமைச்சர் நடவடிக்கை

பதுளை,செப். 28

ஊவா மாகாணத்தில் சகல கல்வி வலயங்களிலும் தலா ஒரு பாட சாலையை தரமுயர்த்தி, அப்பாடசாலைகளை அனைத்து வசதிகளையும் கொண்டவை

யாக அபிவிருத்தி செய்யத் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

பாடசாலை இனம்காணப் பட்டு தெரிவுசெய்யப்பட்டிருக் கின்றன.

ஊவா மாகாண முதலமைச் சரும் மாகாண கல்வி அமைச்சருமான சசிந்திர ராஜபக்ஷ மேற்படி வேலைத்திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று மேற்கொண்டு வருகிறார். (ளி)

மலையகத் தோட்டப் பகுதி மக்களுக்கு தீபாவளி முற்பணத்தை அதிகரிக்கவும்

ஐ.தொ.கா. நிதிச் செயலாளர் கோரிக்கை

கண்டி,செப்.28

மலையக தோட்டப் பகுதி மக்களுக்கு தீபாவளி முற்பணத்தை அதிகரித்துத் தரும்படி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலர் கோரியுள்ளார்.

மலையக பெருந்தோட்ட மக்கள் விசேடமாக தீபாவளி திருநாளை வெகுசிறப்பாக கொண்டாடுவர்.ஆகையால் ஒவ்வொரு வருடமும் 4,000 ரூபா முற்பணமாக தோட்ட கம்பனிகள் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை விலைவாசிகள் உயர்வடைந்துள்ளதால் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் குறைந்த பட்சம் தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு 6,000 ரூபா முற்பணமாக வழங்க தோட்ட கம்பனிகள் முன் வரவேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்தத் தோட்ட உரிமையாளர் சம்மேளனத்திற்குத் தொலை நகல் மூலம் கடிதங்கள் அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''கடந்த காலங்களில் சகல உணவு பொருள்கள் மற்றும் ஆடைகள் விலை மலிவாக இருந்தன. தற்போது அவற்றின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

இதனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 6,000 ரூபா தீபாவளி முற்பணமாக வழங்க வேண்டும். அவ்வாறு தோட்ட நிர்வாகங்கள் வழங்கினால் மட்டுமே இம்முறை பெருந்தோட்ட மக்கள் சிறப்பாக தீபாவளி திருநாளை வெகுசிறப்பாக கொண்டாட வாய்ப்பு உண்டு''

- இவ்வாறு முரளி ரகுநாதன் தெரிவித்திருக்கிறார். (ளி)

இலங்கை பெருந்தோட்டத் துறையில் மில்லேனியம் இலக்குகள் பருதோல்வி

ஜனாதிபதியின் ஐ.நா. உரை தவறு என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு,செப்.28

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐ.நா சபையால் நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்பிலான மில்லேனியம் இலக்குகளை இலங்கை வெற்றிகரமாக அண்மித்து வருவதாக ஜனாதிபதி ஐ.நா உரையில் குறிப்பட்டுள்ளார்.

இந்த இலக்குகளில் வறுமை குறைப்பு என்பது முக்கியமான தாகும். தேசிய ரீதியாக இலங்கையிலே வறுமை குறைந்திருந் தாலும், மலையக பெருந்தோட்டங்களில் வறுமை அதிகரித்துள்ளது. எனவே மலையக பெருந்தோட்டத் துறையை பொறுத்தவரையில் ஜனாதிபதி ஐ.நா சபையில் தெரிவித்த கருத்து தவறானதாகும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அமைப்புகளின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஐ.நா உரை தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டையே மில்லேனியம் இலக்குகளின் கால எல்லையாக ஐ.நா தீர்மானித்துள்ளது. அந்த 2015 ஆம் ஆண்டில் அடையவேண்டிய சமூக பொருளாதார இலக்குகளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உலகவங்கி உட்பட சர்வதேச நிதி நிர்வனங்கள் செயற்திட்டங்களை முன்னெடுக்கின்றன.

2015ஆம் ஆண்டில் இலங்கை இறங்கி வர வேண்டிய தேசிய வறுமை நிலை 13 சதவிகிதமாகும். 2002 ஆம் ஆண்டில் 20 சதவிகிதமாக இருந்த வறுமை நிலை இன்றைய 2010ஆம் ஆண்டில் சுமார் 15 சத விகிதமாக குறைந்திருக்கின்றது. எனவே, இன்னும் நான்கு வருடம் கழித்து 2015ஆம் ஆண்டில் மில்லேனியம் இலக்கான 13 விகித இறக்கத்தை மிக சுலபமாக இலங்கை அடைந்துவிடும் என்பதையே ஜனாதிபதி பெருமிதமாக குறிப்பிடுகின்றார்.

ஆனால்,இலங்கையில் மலையகத்தின் பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் சமூகத்தில் 2002 ஆம் ஆண்டிலேயே வறுமை நிலை 30 சதவிகிதமாக இருந்தது. 2010ஆம் ஆண்டில் அது குறைவதற்குப் பதிலாக சுமார் 33 சத விகிதமாக உயர்ந்திருக்கின்றது.

எனவே, இன்னும் நான்கு ஆண்டுகள் கழித்து மில்லேனியம் இலக்குகளை இறுதி ஆண்டான 2015ஆம் ஆண்டில் மலையக பெருந்தோட்டத்துறையில் வறுமை நிலை 35 விகிதத்தை கடந்து விடக்கூடிய மோசமான நிலைமை உள்ளது.

ஒரு தீவான இலங்கைக் குள்ளே மலையக பெருந்தோட்டத் துறை இன்னும் ஒரு தீவாக இருப்பதையே இது காட்டுகின்றது. இதற்கு இன்றைய அரசு உட்பட இந்நாட்டை தொடர்ச்சியாக ஆண்டுவந்த அரசு இந்த அரசுக்குள்ளே இடம்பெற்று வரும் மலையக அரசியல் பிரதிநிதிகளும் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் மலையகத்திலே தெரிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அரசுக்குள் சங்கமமாகியுள்ளனர். இவர்கள் இந்த மலையக வறுமை நிலைமையை பற்றி புரிந்துகொள்ள வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ளி)

தேநீர் அருந்த உலகில் சிறந்த இடம் பொகவந்தலாவை

கொழும்பு,செப்.28

சர்வதேச ரீதியாக தேநீர் அருந்துவதற்கு சிறந்த இடங்களில் ஒன்றாக இலங்கையின் பொகவந்தலாவை தெரிவாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் 'சிட்னி மோனிங் ஹெரல்ட்' செய்தித்தாள் மேற்கொண்ட ஆய்வில் உலகின் 10 இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இலங்கை - பொகவந்தலாவையைத் தவிர லண்டன், சிபேரியன், ரஷ்யா, சீனா, ஜப்பான், பெரு உட்பட பத்து இடங்கள் இந்த செய்தித் தாளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவின் மணிவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள். மண்டப வாயிலில் கலாசாலை மாணவிகள் திருநாவுக்கரசு தம்பதியரை ஆரத்தியெடுத்து வரவேற்பதை முதலாவது படத்திலும் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், லயன் டாக்டர் வை.தியாகராஜா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். விழா நாயகருக்குக் கற்பித்த ஆசிரியை ஆச்சிமுத்து பொன்னம்பலம் உரையாற்றுவதையும் கலாநிதி த.காலாமணி அருகில் இருப்பதையும் இறுதிப்படத்தில் காணலாம்.

கிராமசேவை அதிகாரிகளைச் சேர்ப்பதில் புதிய நடைமுறை

மட்டக்களப்பு, செப்.28

கிராம சேவை அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தில் புதிய நடைமுறைகளைப் பின்பற்றப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதுவரை கிராமசேவை அதிகாரிகளின் நியமனம் தரம்-11 இலிருந்தே ஆரம்பமாகியது. அது புதிய நடை முறையின் பிரகாரம் தரம்- 111 என மாற்றப்படவுள்ளது. அதேவேளை, எதிர்காலத்தில் இத்திட்டம் தரம்-111, 11, 1 என்றும் அதியுயர் தரம் என்றும் நான்கு பிரிவுகளைக் கொண்டதாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கிராம சேவை அதிகாரிகளின் அதியுயர் தரத்தில் எழுபது வெற்றிடங்கள் உள்ளன. உத்தேச புதிய நடைமுறையின்படி கூடுதலானவர்களுக்கு பதவியுயர்வு பெறும் சந்தர்ப்பம் கிட்டுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் தற்போது 14,022 கிராம சேவை அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். உத்தேச புதிய திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் மேலும் இரண்டாயிரம் பேர் புதிதாக இணைத்துக்கொள்ளப்படுவர் என்றும், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி
விஸ்வலிங்கம்
செல்லம்மா
பிறப்பு
06.10.1911
இறப்பு
08.10.2009

திதி: 28.09.2010

அன்புத் தெய்வமே! உங்கள் வழிகாட்டலிலே உங்கள் நினைவுகளோடு உங்களை வணங்கி வாழ்ந்துவரும் எங்களுக்குத் தொடர்ந்தும் உங்கள் நல்லாசி வேண்டி நிற்கின்றோம்.

855, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் இசையாய் ஒலித்த
நல்லரசு இராஜேஸ்வரன்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் . அவரது ஆத்மா அமைதிபெற பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி!

ஆலய நிர்வாகம்.

மரண அறிவித்தல்

திருமதி நாகேசு செங்கமலம்

புங்குடுதீவைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேசு செங்கமலம் நேற்று (26.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-தாமாசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தில்லைவனம் தம்பதியரின் மருமகளும் நாகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து, விசாலாட்சியின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, சின்னையா, நல்லையா, தம்பிஐயா, ராமலிங்கம், முருகேசு, முத்துக்குமார் மற்றும் தர்மலிங்கத்தின் மைத்துனியும் குருநாதசிவம் மற்றும் காலஞ்சென்ற மகாலிங்கசிவம் மற்றும் குணமணிதேவி, தவமணிதேவி, பரமலிங்கசிவம், யோகலிங்கசிவம் ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புங்குடுதீவு 11ஆம் வட்டாரம், கிழக்கூரில் உள்ள அவரது இல்லத்தில அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணல்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து.குருநாதசிவம் (பெறாமகன்)
(சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர்)
தொலைபேசி இலக்கம்: 0212222567

கிழக்கூர்,
11ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (சி/571394)

இலவச மருத்துவ முகாம்

நவாலி,செப்.28

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தினருக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் இலவச மருத்துவ முகாமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

சங்க அங்கத்தவர்களை தமது வாகனங்கள் மூலம் ஏற்றிச்சென்றுதமது நிறுவனத்தில் வைத்து பரிசோதனை செய்த பின்னர் பெறுமதிமிக்க மருந்து வகைகளை வழங்கியதுடன்மதிய உணவாக இலைக் கஞ்சியும் வழங்கி மீண்டும் அவர்களது இல்லத்தில் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர். (த-201-100)

முதியோருக்கு பரிசுப் பொருள் அன்பளிப்பு

நவாலி, செப்.28

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தினருக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினர் கடந்த சனிக்கிழமை பரிசுப் பொருள்களை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

சங்கத் தலைவர் செ.மகேந்திரன் தலைமையில் நவாலி பொதுநோக்கு மண்டபத்தில் நடந்த இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மாவும், ஊழியர்களும் கலந்துகொண்டு மக்கள் வங்கியின் செயற்பாடுகளும் அதனால் மக்கள் பெறும் பயன்கள் பற்றியும் கலந்துரையாடினர்.

இதனைத் தொடர்ந்து பெறுமதிமிக்க வெந்நீர்ப் போத்தல்கள், குடைகள், குறிப்பெடுக்கும் புத்தகங்கள் என்பவற்றைக் குலுக்கல் மூலம் பரிசாக வழங்கினர். (204-100)

ஷெல்காஸ்

பாவனையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி

யாழ்ப்பாணத்திலே சுவைமிகு உணவுகளை இலகுவாகவும் துரிதமாகவும் தயார்செய்துகொள்ளவும். புகை, கரி போன்ற கஷ்டங்களைத் தவிர்க்கவும் இப்போது புதிய ஷெல்காஸ் சிலிண்டர்களை அனைத்து ஷெல்காஸ் விற்பனையார்களிடமும் இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியும்.

27.09.2010 - கிளிநொச்சி, பரந்தன், கொடிகாமம் ஆகிய இடங்களிலும்
28.09.2010 - யாழ்.நகர் சந்தை, கொட்டடி மீன்சந்தை, நல்லூர், திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும்
29.09.2010 - மருதனார்மடம்,சுன்னாகம், சங்கானை ஆகிய சந்தைகளுக்கு மத்தியிலும்

பாதுகாப்பிற்கும் நம்பிக்கைக்கும் பெயர்பெற்றது 'ஷெல் காஸ்'

ஷெல்காஸ் கம்பனியாலும், யாழ்.குடாநாட்டு விநியோகஸ்தர்களாலும் 'ஷெல்காஸ்' விற்பனை விரிவாக்கம் செய்யப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பாதுகாப்பு பற்றியும் பாவனையின்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கும் உரிய சந்தேகங்களையும் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

S.V. முருகேசு
ஷெல்காஸ் விற்பனை முகவர்

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8899, 0776053660.

Nestle NESPRAY

சர்வதேச சிறுவர் தினம் 2010

நெஸ்லே நிறுவனம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம், வலயக் கல்வி அலுவலகங்கள், மாநகரசபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சிறிலங்கா காவல்துறை ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தும் நெஸ்பிறே சிறுவர் உலகம்.

எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில்....

உங்கள் குழந்தையின் அறிவு, மகிழ்வு மற்றும் வினோதம்

★ மெரிகோ ரவுண்ட் ★வினோத விளையாட்டுக்கள் ★ பவுண்சர் ★பலூன் மாடி
★ பால்வீடு ★குழந்தைகள் சினிமா ★ சிறுவர் இசைநிகழ்ச்சி
★ மேலும் விசேட அம்சங்கள் பல
★ விசேட வைத்திய சந்திப்பிற்கு குழந்தையை இலவசமாக பங்குபற்ற வைக்க முடிவதுடன் தொலைக்காட்சி நாடகக் கலைஞர்களுடன் களிப்படையவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
★ குழந்தைக்கான சேமிப்புக் கணக்கை வெல்லவும் வாய்ப்பு

களிப்படையுங்கள்.... பரிசை வெல்லுங்கள்....!

நெஸ்பிறே என்றிட்ச் 400 கிராம் பைக்கற்றின் மேல் அட்டையை கொண்டு வர மறக்கவேண்டாம்.

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சுப்பிரமணியம் பூங்காவிற்கும் இடைப் பட்ட வீதியில் குழந்தைகளின் ஊர்வலம் ஆரம்பமாகி சிறுவர்களின் அலங்கரிப்புடன் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும்.

நெஸ்பிறே சிறுவர் உலகைக் காண வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாரீர் சிறுவர் உலகை கண்டு களித்திட....
மகிழ்வீர் உங்கள் பிள்ளைகளின் திறமையைக் கண்டு.

(103785)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேபாள புதிய பிரதமர் தேர்வு: 8ஆவது முயற்சியும் தோல்வி

காத்மாண்டு,செப்.28

நேபாளத்தில் புதிய பிரதமரைத் தேர்வு செய்ய 8ஆவது முறையாக நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த வாக்கெடுப்பிலும் யாரும் பெரும்பான்மை பெறவில்லை.

இதையடுத்து பிரதமரைத் தேர்ந்தெடுக்க 9ஆவது முறையாக செப்ரெம்பர் 30ஆம் திகதி மீண்டும் வாக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

601உறுப்பினர்களைக் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு 301 உறுப்பினர்களின் வாக்குகள் வேண்டும். நேபாளத்தில் மாதவ் குமார் நேபாள் தலைமையிலான 22 கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி கடந்த மே மாதம் கவிழ்ந்தது. இதையடுத்து புதிய அரசைத் தேர்ந்தெடுக்க 7 தடவைகள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டன.

இவற்றில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 8ஆவது தடவையாக ஞாயிற்றுக்கிழமை நடந்த வாக்கெடுப்பில் நேபாள காங்கிரஸின் பொதுயால் மட்டுமே பிரதமர் பதவி வேட்பாளராகப் போட்டியிட்டார்.

அவருக்கு ஆதரவாக 116 வாக்குகள் கிடைத்தன. எதிராக 2 வாக்குகள் பதிவாகின. 71 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். 238 உறுப்பினர்களைக் கொண்ட மாவோயிஸ்ட்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

நேபாள பிரதமர் தேர்வுக் கூட்டம் எட்டாவது முறையாக தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது. இம்முறையும் எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. இதனால் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட்ட நேபாள காங்கிரஸ் தலைவர் ராம் சந்திரபவுடல் (வலது) சோகத்துடன் வெளியேறுகிறார்.

கடந்த 7 தடவைகளும் மாவோயிஸ்ட் தலைவர் பிரசந்தா பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டு பெரும்பான்மை பெற முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

109உறுப்பினர்களைக் கொண்ட மற்றொரு முக்கிய கட்சியான சி.பி.என் - யு.எம்.எல் கடந்த 7 தடவைகளும் வாக்கெடுப்பில் கலந்துகொண்டது. எனினும், அது நடுநிலை வகித்தது. இம்முறை வாக்கெடுப்பை புறக்கணித்தது.

இதையடுத்து புதிய அரசைத் தேர்ந்தெடுக்க செப்ரெம்பர் 30ஆம் திகதி மீண்டும் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. (சி)

இந்திய மாணவர் மீது ஆஸியில் தாக்குதல்

கான்பரா,செப். 28

ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் இந்திய இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டார். ஸ்பிரிங்வேல்ஸ் பகுதியில் இந்திய இளைஞர் ஒருவரைச் சுற்றிவளைத்த ஆஸ்திரேலிய இளைஞர்கள் 4 பேர் அவரை சரமாரியாக தாக்கியுள்ளனர்.

தாக்கப்பட்ட 21 வயது நிரம்பிய இளைஞர் பொலிஸில் அளித்த வாக்குமூலத்தில் தன்னை தாக்கியவர்கள் முதலில் தான் இந்தியரா எனக் கேட்டு உறுதிபடுத்திக் கொண்டு தாக்கினர் எனத் தெரிவித்துள்ளார். (சி)

ஹெய்ட்டியில் சூறாவளி: ஐவர் பலி; 50 பேர் காயம்!

போர்ட்ஒவ்பிரின்ஸ்,செப்.28

பூகம்பம் பாதித்த ஹெய்ட்டியில் தற்போது கடும் சூறாவளி தாக்கியதால், 5 பேர் பலியாயினர்.

கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி ஹெய்ட்டியில் பூகம்பம் ஏற்பட்டதில், இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாயினர்; 10 இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

வீடுகளை இழந்துள்ள மக்கள் கூடாரங்களில் தங்கியுள்ளனர். இந்நிலையில், சனிக்கிழமை பயங்கர சூறாவளி ஹெய்ட்டியைத் தாக்கியது. பலத்த சூறாவளி தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸில் அமைக்கப்பட்டிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான கூடாரங்கள் பறந்தன.

இந்தச் சம்பவத்தால் 50 பேர் படுகாயமடைந்தனர். இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் பலியாயினர்; ஏராளமான மரங்களும், மின்கம்பங்களும் வீதியில் விழுந்து கிடக்கின்றன.

பூகம்பப் பாதிப்பிலிருந்து இன்னும் மீளாத ஹெய்ட்டியில் தற்போது தாக்கியுள்ள சூறாவளியால், மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். (சி)

பல் ஈறு நோய்களுக்கு 5 மணி நேரத்தில் சிகிச்சை

லண்டன்,செப்.28

பல் ஈறுகளில் ஏற்படும் நோய்களை 5 மணி நேரத்தில் தீர்க்கும் புதிய சிகிச்சை முறையை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சிகிச்சை மூலம் ஈறுகளிலுள்ள பிரச்சினைகள் தீர்வதுடன், பற்களும் வலுவடையும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பற்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை பலரும் ஈறுகளுக்கு கொடுப்பதில்லை. இதுவே பிரச்சினைக்குக் காரணமாகி விடுகிறது.

புதிய சிகிச்சை முறையில் சிதைந்த ஈறுகளைச் சீராக்குவதும், பலப்படுத்துவதும் மிக எளிது என்றும் அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (எ)

பிரிட்டனின் தொழிற் கட்சித் தலைவராக முன்னாள் அமைச்சர் மிலிபான்ட் தேர்வு

பிரிட்டனின் முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் புதிய தலைவராக ஈட் மிலிபான்ட் (வலது), மான்செஸ்டரில் நடந்த கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டார். இக்கூட்டத்துக்கு முன்னர் கட்சியின் மூத்த தலைவர் மைக்கேலா புடின் என்பவரின் நினைவு நாளையொட்டி சில நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் மிலிபான்ட் கலந்துகொண்டார்.

லண்டன்,செப்.28

பிரிட்டனில் 13 ஆண்டுகளாக ஆளும் கட்சியாக இருந்த தொழிற் கட்சி சமீபத்தில் நடந்த தேர்தலில் தோல்வியடைந்தது.

இதைத்தொடர்ந்து அந்தக் கட்சியின் புதிய தலைவர் தேர்தல் சனிக்கிழமை நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர்களான மிலிபாண்ட், அவரது சகோதரர் டேவிட் மிலிபாண்ட் ஆகியோர் உட்பட 5 பேர் போட்டியிட்டனர்.

5 பேர் களத்தில் இருந்தாலும் போட்டி அண்ணன் - தம்பிக்கு இடையேதான் கடுமையாக இருந்தது. இதில் 50.65 சதவீத வாக்குகள் பெற்று எட்மிலிபாண்ட் வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் 49.35 சதவீத வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றி பெற்ற எட் மிலிபாண்ட் கூறுகையில்; ''புதிய வரலாறு ஆரம்பமாகிறது'' எனத் தெரிவித்தார். (சி)

மதக் கோட்பாடுகளை பின்பற்றுவோர் மிகவும் ஆரோக்கியமாக வாழ்கின்றனர்

அமெரிக்க ஆய்வாளர் தெரிவிப்பு

வாஷிங்ரன்,செப்.28

மதக் கோட்பாடுகளை ஒழுங்காகப் பின்பற்றி நடப்பவர்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றனர் என அமெரிக்க ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கிறிஸ்டோபர் ஸ்கீட்டில், கடந்த 1972ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை 423 பேரிடம் ஆய்வு செய்தார்.

மதக் கோட்பாடுகளை ஒழுங்காக பின்பற்றுபவர்களும், ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறி அந்த மதத்தின் கோட்பாடுகளை பின்பற்றுபவர்களும் நல்ல ஆரோக்கியமான உடலைப் பெற்றிருக்கின்றனர் என்றும் நம்பிக்கையை இழந்த பெரும்பாலானோர் உடல் ஆரோக்கியம் குன்றியவர்களாகக் காணப்படுகின்றார் என்றும் கிறிஸ்டோபர் தமது ஆய்வில் தெரிவித்துள்ளார்.

மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்கள் கெட்ட பழக்கங்களை விட்டொழித்து விடுகின்றனர். மது, புகைப்பழக்கம் ஆகியவை இல்லாததாலும், உபவாசம் இருப்பதாலும், வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதாலும், நல் உபதேசங்களைக் கேட்பதாலும் அவர்கள் நேரிய சிந்தனையுடையவர்களாக உள்ளனர்.

இதன் மூலம் அவர்களது ஆரோக்கியம் நீடிக்கிறது என தமது ஆய்வறிக்கையில் கிறிஸ்டோபர் தெரிவித்துள்ளார். (சி)

அமெரிக்கா , இந்தோனேசியாவில் பூகம்பம்: மக்கள் பீதியில் ஓட்டம்

அமெரிக்கா,செப்.28

அமெரிக்காவின் அலாங்கா மாகாணத்தில் ராட் தீவுகள் உள்ளன. அங்கு ஞாயிற்றுக்கிழமை காலை 9.27 மணிக்கு திடீரென பூகம்பம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர்.

எனவே வீடுகளிலிருந்து வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர். சிறிது நேரம் கழித்து தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். இங்கு 5.11 ரிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது என அலாங்கா பூகம்ப தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இங்கு பூமிக்கு அடியில் 226 கிலோ மீற்றர் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு, சேத விவரம் ஆகிய எதுவும் வெளியிடப் படவில்லை.

இந்தோனேசியாவிலும் ஞாயிற்றுக்கிழமை சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. அங்கு அருதீவுகளிலுள்ள டோபோ என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி இரவு 9.12 மணிக்கு இப்பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் வீடுகள் குலுங்கின. எனவே பீதியடைந்த மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வெளியே ஓடிவந்தனர். இதனால் அங்கு கடும் பீதி ஏற்பட்டது. பூகம்பம் ரிச்டர் அளவில் 6 ஆக பதிவாகியுள்ளது. பூமிக்கு அடியில் 59 கி.மீற்றர் ஆழத்தில் இது ஏற்பட்டுள்ளது.

44 ஆயிரம் பேர் இப்பூகம்பத்தின் தாக்கத்தை உணர்ந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தால் அங்கு சிறியளவில் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு சுமத்ரா தீவுப்பகுதியில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்துக்கு 2 இலட்சத்து 27 அயிரத்து 898 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

டெங்கு காய்ச்சலுக்கு தடுப்பு ஊசி ஆஸி. விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

மெல்போர்ன், செப். 28

டெங்கு காய்ச்சலுக்கு ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தடுப்பு ஊசியைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மருந்து விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

கொசுக்களால் பரவக்கூடிய நோய்களில் மோசமானது டெங்கு. வைரஸ் கிருமியால் ஏற்படும் இந்தக் காய்ச்சல் பொதுவாக குழந்தைகளையே அதிகம் தாக்குகிறது.

இந்நிலையில் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள டெலிடோன் குழந்தைகள் நல ஆய்வு மைய விஞ்ஞானிகள் டெங்கு காய்ச்சலுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இப்போது அவர்களின் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

''சோதனை முறையில் தடுப்பு ஊசி பரிசோதனை வெற்றி பெற்றுள்ளது. எனவே, இனி டெங்கு காய்ச்சல் குறித்த பயம் தேவையில்லை'' என்று விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் பீட்டர் ரிச்மோன்ட் தெரிவித்துள்ளார். (சி)

ராணுவத்தை விமர்சித்த பாக். அமைச்சர் ராஜிநாமா

இஸ்லாமாபாத், செப். 28

இராணுவத்தையும், தலைமை நீதிபதியையும் விமர்சனம் செய்து பேசிய பாகிஸ்தான் அமைச்சர் ராஜிநாமா செய்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பெய்த பலத்த மழையால் பஞ்சாப், சிந்து மாகாணங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இன்று வரை அந்த வெள்ளம் வடியவில்லை. 20 இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளின் நிவாரண உதவி கிடைத்த போதும், அரசு இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணவில்லை என்ற முறைப்பாடு பரவலாகக் எழுந்துள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி சர்தாரியின் சுவிஸ் வங்கி ஊழல் குறித்து விசாரணை நடத்தவேண்டும் என உச்ச நீதிமன்றம் அரசை நிர்ப்பந்தித்துள்ளது. ஆனால், பிரதமர் யூசுப் ரசா கிலானி, ''இந்த உத்தரவை செயல்படுத்த முடியாது'' எனத் தெரிவித்துள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கையால் பாகிஸ்தானில் இராணுவம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றக் கூடிய சூழல் உள்ளது என பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பிரதமர் கிலானி, தாம் இந்த வார இறுதியில் மேற்கொள்ள விருந்த பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கான பயணத்தை ஒத்தி வைத்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ இணை அமைச்சர் அப்துல் கயூம் ஜடோய், சமீபத்தில் ஒரு பேட்டியளித்திருந்தார். அப்போது அவர் குறிப்பிடுகையில், ''ஊழலில் எல்லாருக்கும் பங்குண்டு, உரிமையும் உண்டு'' எனத் தெரிவித்திருந்தார்.

''இராணுவ ஆட்சி வரப்போகிறது எனக் கூறுகிறார்கள். வரட்டும். இதற்காக நாங்கள் பயப்படப் போவதில்லை. இராணுவ ஆட்சி ஒன்றும் எங்களுக்கு புதிதல்ல. கடந்த 60 ஆண்டுகளாக இராணுவ ஆட்சியுடன் தான் நாம் போராடி வருகிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

''இராணுவ ஆட்சி வந்தால் மீண்டும் போராடுவோம். ஆட்சியாளர்களாகிய நாங்கள் இராணுவத்துக்கு சீருடையும், சப்பாத்தும் அளிக்கிறோம். எனவே, படையினர் எங்கள் உரிமையைப் பறிக்க மாட்டார்கள் என நம்புகிறோம். அப்பாவி மக்களை வதைப்பதை விட்டு விட்டு இராணுவம் எல்லைப் பகுதி பாதுகாப்பில் கவனம் செலுத்தவேண்டும்'' என்றும் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ஜடோயின் பேட்டி அனைத்துத் தொலைக்காட்சி சேவைகளிலும் தொடர்ந்து ஒளி பரப்பானதால் பிரதமர் கிலானி எரிச்சலடைந்தார். அமைச்சர் ஜடோயை அழைத்து எதற்காக இப்படி பேசினீர்கள் என விளக்கம் கேட்டார்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, அமைச்சர் ஜடோய் சனிக்கிழமை தமது பதவியை இராஜிநாமா செய்துவிட்டார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


உங்கள் வாழ்க்கையை
இலகுவாக்க...

ரூ.5000/- போன்ற சிறுதொகையில்
இப்போது உங்களுக்குமொரு நடைமுறைக்கணக்கு

யூனியன் வங்கியின் ATM அட்டையும் இலவசம்

உங்கள் வாழ்க்கைக்கு மேலும் மேலும் வசதி செய்தவண்ணம் யூனியன் வங்கி இப்போது உங்களுக்கென தனிப்பட்ட நடைமுறைக்கணக்கொன்றை அறிமுகம் செய்கிறது.

யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்குக் காசோலைப் புத்தகம் இருக்கும்போது உங்கள் பணக்கொடுப்பனவு விடயங்களை மிக இலகுவாகச் செய்துகொள்ள முடிவதோடு, செலவுகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தவும் முடியும். யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்கு உங்களது அன்றாடப் பணக்கொடுக்கல் முகாமைத்துவத்துக்கோர் அரிய வழி.

UNION BANK

15A, அல்பிரட் பிளேஸ், கொழும்பு-03. தொலைபேசி : 011 2370870 www.unionb.com

• கன்னாகம் • ஜாஎல • யாழ்ப்பாணம் • கண்டி • கொள்ளுப்பிட்டி • கொட்டாஞ்சேனை • குருநாகல் • மன்னார் • மாத்தறை • மொறட்டுவை • நீர்கொழும்பு • நாவலை • நுகேகொடை • பழையசோனகத்தெரு • புறக்கோட்டை • வவுனியா • வெள்ளவத்தை • வென்னப்புவ

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள், கல்விக்கந்தோருக்கு அருகாமையில்,34, செல்லர் வீதி, நல்லூரில் 7½ பரப்புக்காணி,2 கிணறு,இடிபாடடைந்த வீட்டுடன் விற்பனைக்குண்டு.

நேரடித் தொடர்புக்கு:
0776296570

தவறிவிட்டது

கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கு எனும் முகவரி வரியுடைய பாஸ்கரன் சதீசன் என்பவரின் தேசிய அ.அ. (902242392V) வல்வெட்டிக்கும் வல்வெட்டித் துறைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர் கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ,0773055401 என்ற தொ.பே. இலக்கத் துடனோ தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

* சாரதி (A வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்)
* கட்டடப்பொருள் விற்பனைப் பிரதிநிதி (A/L சித்தி)

தொடர்புகளுக்கு: 0212220045, 0773880590
சாருகயா கொண்ஸ்ரக்சன், 70/1, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
ஏ.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணிக்குள் தொடர்புகொள்ளவும்

விற்பனைக்கு

No.18, றக்கா றோட், யாழ்ப்பாணத்தில் ஐந்து கடைகள் (11' × 30'), வாகன சுத்திகரிப்பு நிலையம் (with Lisence) என்பன அமைந்த இரண்டு பரப்புக் காணி (with C.O.C) விற்பனைக்கு உண்டு. கடைகள் தனியாகவும் கொடுக்கப்படும்.

தொடர்பு: எஸ்.ரமேஸ், 0772231096

தவறிவிட்டது

அண்ணா வீதி, நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை என்னும் முகவரியைச் சேர்ந்த யேசுராசா டிறோன் றஞ்சித் என்பவரது தேசிய அ.அட்டை (805863223V), விசேட அடையாள அட்டை, கடற்படை அ.அட்டை என்பன கடந்த 18.09.2010 அன்று சாட்டி மாதா கோயில் பெருநாள் அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும் தொ.பே: 0770650741

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் றோட்டில்4 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0777715105

கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி மாவட்ட செயலக
அபிவிருத்தி உதவியாளர்

துரைசிங்கம் விஜயமனோகர்

அவர்கள் கடந்த 25.09.2010 அன்று அகால மரணமானதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

அரசாங்க அதிபரும்
மாவட்ட திட்டமிடல் செயலக
உத்தியோகத்தர்களும்.

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினேஸ்வரி பாலச்சந்திரன் (தவம்)

கோயிலாக்கண்டி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகவும் 8/1, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி பாலச்சந்திரன் (தவம்) கடந்த 25.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் ராசமணி (கனடா) தம்பதியரின் மருமகளும் கப்பல் வளவு, சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலச்சந்திரனின் அன்பு மனைவியும் யசிந்தா (கனடா), கிரிஷாந்தி (வைத்தீஸ்வராக் கல்லூரி, A/L 2009 விஞ்ஞானப் பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மாவதியின் அன்புச் சகோ தரியும் ஸ்ரீஸ்கந்தராஜா, சுவாமிநாதர் சாரதாதேவி ஆகியோரின் மைத்துனியும் திருமதி கஜா முகுந்தன், மணிமாறன், சிவசுந்தர், பாலநாதன் ஆகியோரின் மாமியும் நிதர்ஷன், நிவேதன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/1, B.A.தம்பி லேன்,
(பன்றிக்கோட்டுப்
பிள்ளையார் அருகில்)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(103911)

தகவல்:
யசிந்தா (கனடா)
0019058289307
கிரிஷாந்தி
0775185533
(பிள்ளைகள்)

31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து
எண்ணம் தனில் நிறைந்து- இன்று
விண்ணில் விரும்பி அமர்ந்த
கண்ணனைய எம் தந்தை

அமரர்

பொன்னையா செல்லையா

(மீசாலை)

வாடி வருந்திநின்று வாடாது எமைக்காத்த
வல்ல பெருந்தகையே வாடினமே- நாடியெமை
கோடி பணிசெய்து கோலமாய் வளர்த்தெடுத்த
கோபுரமேன் சரிந்ததையோ...ஓ...?

சிந்தை தனில் நிறைந்த சிங்காரச் சிரிப்பெங்கே?
செழிக்க வாழ்ந்த புகழ் வாழ்வெங்கே? விந்தையுற
எந்தை வாழ்ந்திட்ட எழில்வாழ்வு ஓய்ந்ததுவோ?
சுந்தரநல் லிறைதாளில் சிறந்து வாழி

உருவாய் மண்ணில்:
1942.03.16

அருவாய் விண்ணில்:
2010.08.30

எம் அன்புத் தந்தையின் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறுகின்றன. இந்நிகழ்வுகளிலும் - அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

துயர்ச்செய்தி அறிந்து விரைந்துவந்து அனைத்து வழிகளிலும் உதவியும்- துயர்பகிர்ந்தும் ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இதயங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தவர்
தொலைபேசி இலக்கங்கள்:
0217333666, 0217901999

(103905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தாக்குதலிலிருந்து தப்பிக்க மீனவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டியநிலை

பழ.நெடுமாறன் ஆவேசம்

தூத்துக்குடி,செப்.28

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை - என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்து மக்கள் கட்சி சார்பில் நடைபெற்ற தமிழக மீனவர்களின் வாழ்வுரிமை மாநாட்டில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 500 இற்கும் மேற்பட்டோர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஊனமாகியுள்ளனர். மீனவர்களின் படகுகள் மற்றும் சொத்துக்களையும் அவர்கள் கடலில் மூழ்கடித்துள்ளனர்.

பாதிக்கப்படும் மீனவர்கள் தமிழர்கள் என்பதால் இந்தியக் கடற்படையும் அக்கறை காட்டுவதில்லை.

நமது வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, தமிழக மீனவர்கள் எல்லை தாண்டிச் செல்கின்றனர். அதனால் எதுவும் செய்ய முடியாது - என்று கூறுகிறார்.

இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் அருகில் உள்ள மீனவர் கிராமத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். மத்திய, மாநில அரசுகள் இதைக் கண்டுகொள்வதில்லை. எனவே, தமிழக மீனவர்கள் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைத் தங்கள் பாதுகாப்புக்காக வைத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மீனவர்கள் பிரச்சினை மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழக மக்களின் பிரச்சினை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நலமாக, பத்திரமாக உள்ளார். அவர் அடுத்த கட்ட ஈழப்போருக்கு ஆயத்தமாகி வருகிறார். - இப்படி தெரிவித்தார்.

முன்னதாக, கோவை கங்காதர தேசிகர் தலைமையில், மீனவர் நலன் வேண்டி தமிழ் வழிபாட்டு யாகம் நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற தமிழக மீனவர்களின் வாழ்வுரிமை மாநாட்டுக்கு, இந்து மக்கள் கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் இராம. குணசீலன் தலைமை வகித்தார்.

மாநாட்டில், தியாக தீபம் திலீபனின் 28 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது படத்துக்கு, பழ.நெடுமாறன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திப் பேசினார்.

இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத், செயலர் ஞானசம்பந்தம், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பரந்தாமன், சாது சாந்த லிங்க சுவாமி, ம.தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலர் நாசரேத்துரை, இந்து பரதர் சங்க நிர்வாகி ராஜன், நாம் தமிழர் மாவட்டச் செயலர் பிரபு உள்ளிட்ட பலர் பேசினர்.

115 மணி நேரம் நடனம் கேரளப் பெண் சாதனை

கேரளா,செப்.28

கேரள மாநிலம் கலமண்டலம் என்ற ஊரைச் சேர்ந்த பிரபல மோகினி ஆட்ட நடன மங்கை ஹேமலதா, தொடர்ந்து 115 மணி நேரம் மோகினி நடனம் ஆடிச் சாதனை படைத்துள்ளார்.

திருச்சூரில் இந்தச் சாதனை நிகழ்ச்சி நடந்தது. ஒருமணி நேரத்துக்கு 5 நிமிடம் மட்டும் அவர் ஓய்வு எடுத்தார்.

108 மணிநேரம் நடனம் ஆடி ஜதராபாத்தைச் சேர்ந்த ஒரு பெண் முன்பு சாதனை படைத்திருந்தார். அவரது சாதனையை ஹேமலதா முறியடித்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றார்.

இந்தச் சாதனையை முடித்தும் அவர் களைப்பின் காரணமாக தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஹேமலதா, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியக் கலையில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

உத்தரப் பிரதேசம் அயோத்திப் பிரச்சினை தொடர்பான தீர்ப்பு வழங்கப்படுவதை ஒட்டி மும்பையில் பாடசாலை மாணவிகள் அமைதிப் பேரணி நடத்தினர்.

தேர்தலின் போதே கூட்டணி பற்றி அறிவிக்க முடியும்-தே.மு.தி.க.

சென்னை,செப்.28

தே.மு.தி.க யாருடன் கூட்டணி சேரும் என்பதை இப்போது முடிவு செய்ய முடியாது என அவைத் தலைவர் பண்ருட்டி ராமசந்திரன் நாகர்கோவிலில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் சமயத்தில் ஏற்படும் நிகழ்வுகள் தான் வெற்றி தோல்வியை முடிவு செய்யும். எனவே, தேர்தல் சமயத்தில் தான் கூட்டணி சேர்வது பற்றி முடிவு எடுக்கப்படும். தி.மு.க மற்றும் அ.தி.மு.கவுக்கு எதிராக தே.மு.தி.க உள்ளது.

தி.மு.க கட்சியின் ஆட்சி சரியில்லை என அ.தி.மு.கவை ஆதரிப்போம். பின்னர் அ.தி.மு.கவின் ஆட்சி வந்ததும் அவர்கள் சரியில்லை என தி.மு.கவை ஆட்சியில் அமர வைத்தால் அது சந்தர்ப்பவாதமாகி விடும். எனவே கூடுகிற கூட்டம் எல்லாம் வாக்குகள் ஆகிவிடாது.

எனவே வருகிற தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். இலத்திரணியல் இயந்திரங்களை விட ஓட்டுச் சீட்டு முறைதான் சிறந்தது. அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் இன்னமும் ஓட்டுச் சீட்டைத் தான் வாக்களிக்கப் பயன்படுத்துகின்றன என்றும் அவர் கூறினார்.

(ற)

தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு இன்றேல் தமிழக சட்டசபையை நடத்த விடமாட்டோம்

புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை

சென்னை,செப்.28

தமிழக மேல் சபையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு வழங்காமல் சபையை நடத்த விடமாட்டோம் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளர்.

கோவையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தமிழக மேல் சபை கொண்டுவரப்பட உள்ளது. இச்சபையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்க முடியாது என்று தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவின்குமார் அறிவித்திருப்பது -

வன்மையாக கண்டிக்கதக்கது எனவும் இம்மேல் சபையில் தாழ்த் தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படுவதோடு இட ஒதுக்கீடு வழங்காமல் மேல் சபையை நடத்த விடமாட்டோம் எனத் தெரிவித்த அவர் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தில் எந்த பயனும் இல்லை என்றும் மாறாக போர்க் குற்றத்தில் இருந்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தப்புவதற்காகவே இந்த பயணம் அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி வெற்றியடைய வியூகம் வகிக்க புதிய தமிழகம் கட்சியின் மாநில மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெறும் இடம், திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தலில் எமது கட்சிக்கு எத்தனை தொகுதி என்பதனை முடிவு செய்ய முடியும் என்றார்.

அத்தோடு, தமிழகத்தில் தி.மு.க. அல்லாத அனைத்து கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும். எனவே இதற்கு மூன்றாவது அணி தேவையில்லை என்றார். (ற)

தலைவர் முன்பாக காங்கிரஸார் மோதல் அடிதடியில் குதிப்பு; மண்டைகள் உடைப்பு

தமிழகத்தில் அல்லோலகல்லோலம்

கரூர்,செப்.28

கரூரில் நடந்த காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டத்தில் மாநிலத் தலைவர் தங்கபாலு முன்னிலையில் உட்கட்சிப் பூசல் வெடித்தது. இரு தரப்பினர் கடுமையாக அடித்துக் கொண்டதில். சட்டைகள் கிழிக்கப்பட்டன. ஒருவருக்கு மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. இதைத் தடுக்க முடியாமல் வேடிக்கை பார்க்கும் நிலைக்கு தங்கபாலு தள்ளப்பட்டார்.

சோனியா காந்தி ஒக்டோபர் 9 ஆம் திகதி திருச்சி வருகிறார். அங்கு நடக்கும் காங்கிரஸ் கட்சியின் 125 ஆவது ஆண்டு விழா, திருநாவுக்கரசர் காங்கிரஸ் கட்சியில் இணையும் விழா, பொதுக் கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்கிறார்.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து கரூரில் நேற்றுமுன்தினம் மாவட்ட காங்கிரஸாரின் செயல் வீரர்கள் கூட்டம் நடந்தது. இதில் தங்கபாலு கலந்து கொண்டார்.

அப்போது கூட்டத்தில் பங்கேற்ற, தாந்தோணி வட்டார காங்கிரஸ் துணைத் தலைவர் வீரமலை எழுந்து இங்கு உள்ள போஸ்டர்களில் என்.ஜி.கே.வாசன், ஜி.கே.மூப்பனார் படங்கள் வைக்கவில்லை என்று பிரச்சினை எழுப்பினார்.

இதையடுத்து அவருக்கும், தங்கபாலு கோஷ்டியினருக்கும் இடையே மோதல் மூண்டது.

அடுத்த சில நிமிடங்களில் இரு தரப்பினரும் அடிதடியில் இறங்கினர். தெருவில் நடக்கும் சண்டை போல் சரமாரியாகத் தாக்கிக் கொண்டனர். இதில் வீரமலை என்பவர் நையப்புடைக்கப்பட்டார். இதனால் அவரது தலையில் காயமேற்பட்டு ரத்தம் கொட்டியது. சட்டை கிழிந்து, மண்டை உடைந்து அவர் மோசமான நிலையில் காணப்பட்டார்.

இந்தச் சண்டையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த தங்கபாலு, அடிதடி வேண்டாம் என்று கோரியும் சண்டை நின்றபாடில்லை. இதனால் தடுக்க முடியாமல் வேடிக்கை பார்த்தார் தங்கபாலு.

இதையடுத்து பொலிஸாரை வரவழைத்து அமைதிப்படுத்தக் கோரினார் தங்கபாலு. பொலிஸார் விரைந்து வந்து வீரமலையை அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். சண்டை போட்டவர்களையும் வெளியே அனுப்பினர்.

வெளியே வந்தவர்களில் ஒரு பிரிவினர் உழவர் சந்தை முன்பு வீதிமறியலில் குதித்தனர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்தச் சண்டை குறித்து தங்கபாலு கூறுகையில், தற்போது தேவையற்ற செயல் நடந்து உள்ளது. இது வருத்தம் அளிக்கிறது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

கரூர் மாவட்டத்தில் இனி மேல் இது போன்று நடக்காமல் பார்த்துக் கொள்ளப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

இலங்கைக் கடற்படை விரட்டியதென இராமேஸ்வரம் மீனவர்கள் முறைப்பாடு

இலங்கைக் கடற்படையினர் தங்களை மீன்பிடிக்க விடாமல் விரட்டினர் என இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு தெரிவித்தனர்.

இராமேஸ்வரத்தில் சுமார் 900 விசைப்படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த 3 மாதங்களாக இலங்கைக் கடற்படையினர் தொடர் தாக்குதலில்ஈடுபட்டு,தங்களைமீன் பிடிக்க விடாமல் விரட்டியடித்து வருகின்றனர் என மீனவர்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சுமார் 100 முதல் 150 விசைப்படகுகள் மட்டுமே மீன்பிடிக்கச் செல்கின்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 150 படகுகள் மீன் பிடிக்கச் சென்றன. அப்போது 6 போர்க் கப்பல்களில் ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், துப்பாக்கி, கம்புகளைக் காட்டி மிரட்டி தங்களை விரட்டியடித்தனர் என அவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

மத மாற்றத்திற்கு தடை விதிக்க வேண்டும்-ஜெயேந்திரர்

இந்தியாவில் மத மாற்றத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கூறியுள்ளார்.

திருப்பதியில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரின் 75வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டபோது தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் கிறிஸ்தவர்கள் சேவை செய்வதாகக் கூறிக் கொண்டு மத மாற்றத்தில் ஈடுபடுகிறார்கள். இதனை ஆட்சியில் இருப்ப வர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது.

இந்து மத தர்மத்தை காக்க பாபா ராம்தேவ் கட்சி தொடங்குகிறார். இந்துத் துறவிகள் அனைவரும் அவரை ஆதரிக்க வேண்டும். தற்போது ஏராளமான தூறவிகள் அவரை ஆதரிப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

நம் மக்களிடம் தற்போது கடவுள்பக்தி அதிகித்துள்ளது. ஆனால், மனிதாபமானம் குறைந்து விட்டது என்றார்.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDYING UK

நொவம்பர் மாதம் 28ஆம் திகதி கல்லூரி ஆரம்பம்

லண்டனில் கல்விகற்க விசாக்கள்

ENGLAND

மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

மூன்று நாட்களில் CAS (College Admission) வழங்கப்படும்.
IELTS தேவையில்லை, ஆங்கிலத்தோடு இணைந்த கற்கை வீசா.

Vitoria College of London.
London Richmond College.
Thames College of London.

100% வீசா உத்தரவாதம்

15 வருட அனுபவமிக்க ஆலோசகர்களால் சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் மிகச்சிறந்தமுறையில் ஆவணமுறைப்படுத்தப்பட்டு விண்ணப்பிக்கப்படும்.

WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
Call: 0213207778 - 0771919192 - 0772229286

கொக்குளாயிலும் நேற்று மக்கள் மீளக் குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கிராம அலுவலர் பிரிவில் நேற்று திங்கட்கிழமை 33 குடும்பங்களைச் சேர்ந்த 106 அங்கத்தவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த இக் குடும்ப அங்கத்தவர்கள் நேற்றுக் காலை முல்லைத்தீவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

அலம்பில் மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுப் பின்னர் தமது வாழ்விடங்களுக்கு அவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஒ-14)

மகாஜனன் கவிதைகள் நூல்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'மகாஜனன் கவிதைகள்' எனும் நூல் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

கல்லூ அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்து கொள்வார்.

வெளியீட்டுரையை ஆசிரியர் என்.விஜயசுந்தரமும் மதிப்பீட்டுரையை ஊவா வெல்லஸ பல்கலைக்கழக விரிவுரையாளர் மா.ரூபவதனனும் நிகழ்த்துவர். (ஒ-16)

தரம் 6 அனுமதி - 2011

2010ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 142உம் அதற்கு மேலும் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் பாடசாலை நேரத்தில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 20.10.2010 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

GENRAL ENGLISH LEADING TO SPOKEN & BUSINESS ENGLISH COMMUNICATION & PRESENTATION

ஆரம்ப நாள் தெளிவுரைகள்

கணிப்பீடு பூரண விளக்கங்களுடன் கூடிய கலந்துரை யாடல், மாணவ மாணவிகளுக் கான தகுதிகான் பரீட்சைகள் (PLACEMENT TEST)

மாணவ, மாணவியரின் ஆங்கில அறிவு தனிப்பட்டமுறையில் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான பிரிவுக்குள் உள்வாங்கப்படுவர்

தெளிவுரைகள் பின்வரும் இடங்களில் குறிக்கப் பட்டுள்ள நேரத்தில் இடம்பெறும்.

UNI ICT CAMPUS MANIPAY

1) வெள்ளி (01.10.2010) → 9 AM --- 12 PM வரை
2) சனி (02.10.2010) → 3 PM --- 6 PM வரை
3) ஞாயிறு (03.10.2010) → 3 PM --- 6 PM வரை

UNI ICT CAMPUS KANTHARMADAM, JAFFNA.

1) வெள்ளி (01.10.2010) → 2 PM --- 5.30 PM
2) சனி (02.10.2010) → 9 AM --- 12 PM
3) ஞாயிறு (03.10.2010) → 10 AM --- 1 PM

→ பதிவுகளை மேற்கொண்டவர்கள் தங்களின் வசதியான நேரத்திற்கு பதிவினை மேற்கொண்ட இடத்திற்கு வருகை தரவும்.
→ இதுவரை பதிவு மேற்கொள்ளாதவர்கள் இந்த இறுதி வாரத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.
→ தூரப் பிரதேசங்களிற்குச் செல்லும் யாழ்.பல்கலைக்கழக, ஆசிரிய கலாசாலை, உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியரை கந்தர்மடவளாகத்தில் சந்திக்கலாம்.

(சி-571391) மேலதிக விவரங்களுக்கு: 0776110802

சீட்டிழுப்பு இல. 2297 திகதி 26.09.2010

மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள் F 977453

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

கப்பர் பரிசு	F	9	7	7	4	5	3	ரூபா.	14,223,703/=	பரிசு -
1ம் பரிசுகள்		9	7	7	4	5	3	ரூபா.	20,00,000/=	பரிசுகள் 01
2ம் பரிசுகள்			7	7	4	5	3	ரூபா.	100,000/=	பரிசுகள் 08
3ம் பரிசுகள்				7	4	5	3	ரூபா.	10,000/=	பரிசுகள் 74
4ம் பரிசுகள்					4	5	3	ரூபா.	1,000/=	பரிசுகள் 685
5ம் பரிசுகள்						5	3	ரூபா.	100/=	பரிசுகள் 7079
6ம் பரிசுகள்							3	ரூபா.	20/=	பரிசுகள் 69522

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

7ம் பரிசுகள்		9	7	7	4	5	ரூபா.	10,000/=	பரிசுகள் 09
8ம் பரிசுகள்		9	7	7	4		ரூபா.	1,000/=	பரிசுகள் 73
9ம் பரிசுகள்		9	7	7			ரூபா.	100/=	பரிசுகள் 704
10ம் பரிசுகள்	-	9	7				ரூபா.	50/=	பரிசுகள் 6985
11ம் பரிசுகள்	F						ரூபா.	20/=	பரிசுகள் 27748

அடுத்த வார சீட்டிழுப்பின் கப்பர் பரிசு ரூபா. 14,318,952.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,460,950.00

தேசிய லொத்தர் சபை

முடிவுகளை அறிய www.nlb.lk

பாஷையூர் சென். அன்ரனீஸ் வித்தியாலய 160ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்

யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம் தன் கல்விச் சேவையில் 160 ஆண்டுகளை பூர்த்திசெய்து பெருமையடையும் வேளை நானும் இவ் மகிழ்வில் இணைந்து பாடசாலை சமூகத்துக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கிணங்க பாசையூர் மாணவர்களின் நன்மை கருதி தொடங்கப்பட்ட இப் பாடசாலை தனது சேவையில் பல புத்திஜீவிகளை உருவாக்கி பல பெரியவர்களை, இறை அழைத்தலுக்கும் பலரை உருவாக்கி இன்றும் தன் மகத்தான சேவையை தொடர்ந்து தனது 160 ஆண்டுகள் பூர்த்தி செய்யும் விடயமானது பாராட்டத்தக்கது.

அன்று தொடக்கம் இன்றுவரை இப்பாடசாலை வரலாற்றில் கால் பதித்து அதன் உயர்வுக்கும், கல்விச் சேவைக்கும் தம்மை அர்ப்பணித்த, அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்களை இந் நன்நாளில் நானும் வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இப் பாடசாலையின் சேவை தொடர இறை ஆசீர்களும் உரித்தாகுக.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி

இன்று 160ஆவது அகவையை நிறைவு செய்யும் யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் அளவிலா மகிழ்வடைகின்றேன்.

நான் 8 வயதில் அன்னையை இழந்து தடுமாறியபோது அன்னையாக என்னை அரவணைத்து ஆறுதலளித்து கல்வியூட்டி பராமரித்த அருட்சகோதரிகளின் அளவிலாக் கருணையும், அன்பும் ஒருங்கிணைந்த தலைமைத்துவத்திலும், நிர்வாகத்திலும் தொடங்கி, எல்லோரையும் அரவணைத்து கல்விப் பணி செய்த யா/பாஷையூர் றோ.க.மகளிர் வித்தியாலயம் இன்று மெல்லென வளர்ந்து க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைத் தந்து உயர் கல்விக்காய் மாணவரை அனுப்பும் உன்னத பணியில் வெற்றிகண்டுள்ளது.

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங் அதிபர் / மாவட்டச் செயலர், யாழ். மாவட்டம்.

கலங்கரை விளக்காய்த் திகழும் 'கலைக்கூடம்

ஈழத் திருநாட்டிலே கடலலை தழுவிக்கொண்டிருக்கும் வடபுலத்தின்பாலுள்ள யாழ்.நகரில் நீலத் திரைக் கடலோரத்தில், பாஷையூர் பதியில் புனிதராம் அந்தோனியார் ஆலயத்தின் முன்பாக அறிவுச் சுடரை ஏற்றி வைக்கும் கலங்கரை விளக்காக அழகே உருவாக கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்பதுதான் எமது பாடசாலை என்னும் கலைக்கோயில்

இக்கலைக்கூடம் கத்தோலிக்க குருமார்களினால் 1850ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஓலைக் கொட்டிலாக இருந்த இப் பாடசாலை1906இல் செங்கற்களால் அமைந்து 1918இல் நிரந்தரக் கட்டடமாக அமைக்கப்பட்டது.

2003இல் இருந்து திருமதி கலிஸ்ரா செல்வநாயகம் அதிபரின் அயராத உழைப்பினால் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. குறிப்பாக க.பொ.த. சா/த பரீட்சைப் பெறுபேறுகள் உயர் நிலையைப் பெற்றிருந்ததுடன், 2008இல் யாழ்.வலயப் பிரபல பாடசாலைகளுடன் எமது பாடசாலை 7ஆவது நிலையைப் பெற்றிருந்ததை சிறப்புக்குரியது. அத்துடன் இக் காலப்பகுதியில் இணைப்பாட செயற்பாடானது உயர்நிலை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலைக்கு யாழ்.மறைமாவட்ட ஆயரால் கிடைக்கும் நிறை ஆசீருடன், எமது பங்கில் பணியாற்றிய, ஆற்றுகின்ற அருட்பணியாளர்களின் நல்லாதரவும், பங்களிப்பும் ஆன்மீக வழிகாட்டலும் எமது மாணவச் செல்வங்களின் சமய உருவாக்கத்தில் முக்கிய பங்கை வகிக்கிறது. பாடசாலையின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக நின்று உழைத்த அதிபர், ஆசிரியர்களை இந்நேரத்தில் அன்போடு நினைவு கூர்வதோடு, தொடர்ந்தும் இங்கு பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களின் சேவையை பாராட்டி வாழ்த்துவதோடு இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் காண வாழ்த்துகின்றேன்.

திருமதி E.தியானமுத்து
உப அதிபர்.

அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
செல்வம் நகைத் தொழிலகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகளை நவீன டிசைன்களில் 22 கரட் தங்கத்தில்
குறித்த தவணையில் செய்து பெற்றிட நாடுங்கள்
12. சென்.அன்ரனீஸ் றோட், பாசையூர், யாழ்ப்பாணம்.
T.P.: 0776619669

பாடசாலையின் 160ஆவது ஆண்டு சேவையினை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.
தரமான பாண், பனிஸ், கேக், பீஸ்கற் மற்றும் அனைத்து குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகளை வெற்றிக்கொள்ளுவதற்கு
குமார் வெதுப்பகம் பாசையூர், யாழ்ப்பாணம். T.P.: 021 320 6392

வலய கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

160 ஆவது ஆண்டில் கால் பதித்து நிற்கும் இவ் வேளையில் இவ்வித்தியாலயத்தின் கடந்த கால சாதனைகளுக்காகவும், இலக்கு நோக்கிய எதிர்காலப் பயணத்தில் வீறுநடை போடவும் வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட கல்விப் பராம்பரியம் கொண்ட இவ்வித்தியாலயம் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை பல சாதனைகளைத் தடம்பதித்து வருகின்றமை பாராட்டத்தக்கது.

அர்ப்பணிப்பான புனித சேவையால், தேவனின் மகிமை பெற்ற இப்பாடசாலை எதிர்காலத்தில் மேலும் பல வளங்கள் பெற்றுப் புதுப்பொலிவோடு விளங்க எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன், இவ்வித்தியாலயம் தனது தரமான கல்விப் பணியால் உயர்ந்து, தரமான சமுதாய உருவாக்கத்துக்கு சீரிய வழியினைக்காட்டும் கலைக்கூடமாகத் திகழவேண்டுமென இதயயூர்வமாக வாழ்த்துகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

கலங்கரை விளக்காய் திகழும் கலைக்கூடம்

யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம் தனது நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தின் கல்விப் பயணத்திலே நூற்று அறுபது அகவையில் கால் பதிக்கும் இவ்வேளையில் உளமார வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். இக் கலைக்கூடத்தின் ஆரம்ப கர்த்தாக்களான கத்தோலிக்க குருமார்கள் இந் நேரத்தில் நினைவு கூர்ந்து போற்றப்பட வேண்டியவர்கள்.

அண்மைக் காலங்களில் இப்பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி இணைப் பாட விதான செயற்பாடுகளிலும் கரையோரப் பாடசாலைகளுள் முன்னணியில் திகழ்கின்றது என்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்னும் இவ் வித்தியாலய மாணவர்கள் கல்வியிலே தூர நோக்குடன் சிந்தனையுடையவர்களாக வாழ வாழ்த்துவதோடு இறையாசீரும் உங் களுடன் இருக்க பிரார்த்திக்கின்றேன்.

திருமதி M.C. செல்வநாயகம் (அதிபர்)
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ்
றோ.க.மகளிர் வித்தி.

- பாடசாலைச் சமூகம்

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சதீசன், கவிதா, சுஜிதா, மஜிதா ஆகியோரின் அன்புத் தாயும் வேல்முருகன், சிவசுப்பிரமணியம், தங்கராசா, தயாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காயத்திரி, விமலரூபன், பிரதீபன், தவபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியும் சலோபன், திவ்வியன், சாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.கணபதிப்பிள்ளை (கணவர்),
ந.சிவசுப்பிரமணியம் (சகோதரன்).

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (103903)

சரவணமுத்து இராசரத்தினம் (ராசா)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராசா என்று அழைக்கப்படும் சரவணமுத்து இராச ரத்தினம் நேற்று (27.09.2010) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவ ணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - இராணிமலர் தம்பதியரின் அன்பு மரு மகனும் மாலினிதேவியின் அன்புக் கணவரும் ரஜித்தா, சுபோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலதா ஸின் அன்பு மாமனும் கனகசபை (அவுஸ்திரேலியா), சண்முகநாதன் (கொழும்பு), ராஜலட்சுமி (கொழும்பு), நகுலேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவசாமி மற்றும் சிவபாக் கியம், தனபாலசிங்கம், நவோதயம், தயாபரன், சறோ ஜினிதேவி, அருள்பரன் (கனடா), மனோகரன் (கனடா), றஞ்சினிதேவி, கௌரி, சசிகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசுவாமி கோயிலடி, நீர்வேலி தெற்கு. (103913)

தகவல்:
குடும்பத்தினர்.

சரவணமுத்து குமாரசாமி

(ஓய்வுபெற்ற காவலாளி, உப்புக்கூட்டுத்தாபனம், ஆனையிறவு)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிட மாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை நிரந்தர முகவரியாகவும் வட்டுக்கோட் டையை வசிப்பிடமாகக் கொண்ட சரவண முத்து குமாரசாமி நேற்று (27.09.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவண முத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகெங்கையின் அன்புக் கணவரும் நிரஞ்சன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசபை, சுன்னாகம்), நிதாகரன் (யாழ்.தினக்குரல் - இயந்திரப்பகுதி), நிஷாந்தன் (ஆசிரியர், கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவஞானம், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வயிரவநாதன் (ஓய்வுபெற்ற ப.நோ.கூ.ச. முகாமையாளர்), காலஞ்சென்ற அம்பலவாண பிள்ளை ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான சிவ லிங்கம், நமசிவாயம், இரத்தினவல்லி மற்றும் மனோன்மணி ஆகி யோரின் மைத்துனரும் நிமலன் (ஜேர்மனி), நிர்மலன் (பிரதேச சபை, சுழிபுரம்), நிமாலினி (ஆசிரியை, சென்.ஜோசப் வித்தியா சாலை), நிராஜினி (ஆசிரியை, ஊரெழு, கணேசா), வாகீசன் (ஆசிரியர், செட்டிகுளம் மகாவித்தியாலயம்), வனஜா (ஆசிரியை, யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை), வசந்தன் (டுபாய்) ஆகியோரின் சிறிய தந்தையும் பத்மநாயகி (ஆசிரியை, யா/வட்டு.மத்திய கல் லூரி), வத்சலா (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை) ஆகி யோரின் அன்பு மாமனாரும் நிரூபன், நிலவினி, நிவேதன், நிலோஜன் (ஜேர்மனி), நிலானி (ஜேர்மனி), மயூரா, அஜந்தனா, தரண்யா, பிரவீனா, நிவேதிகா, தீபிகா, தேனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2010) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனா வோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
T.P-0777066334, 0779179407 (103915)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாவாந்துறையைச் சேர்ந்த
ஜோண்சன் லொயலா தம்பதியரின் புதல்வன்

செல்வன் மல்கம்

(யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2010இல் 170 புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 60ஆவது இடத்தையும் பெற்ற இவரை வாழ்த்திப் பாராட்டுவதோடு இவர் கல்விகற்ற பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் மற்றும் தனிப் பட்ட முறையில் கல்வி கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

நாவாந்துறை. (103887) பெற்றோர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி சிவபாக்கியம் வேலாயுதபிள்ளை

எங்கள் அன்பு அம்மாவே ஏங்கித் தவிக்கின்றோம்
காலன் உனைக் கவர்ந்ததனால் கலங்குகின்றோம்
நம்ப முடியவில்லை நாங்கள் உங்களை இழந்தோம்
உம் துணைபோல் யார் எமக்கு உண்டோ?
தனற் புழுவாய் துடிக்கின்றோம் துயர் தீர்க்க வாரீரோ!

தேவி வாசா,
இணுவில் தெற்கு,
இணுவில். குடும்பத்தினர்.

அகில இலங்கை சாதனையாளனுக்கு எமது உளங்கனிந்த பாராட்டுக்கள்

பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னாட்டுக்கும் பெருமை தேடித்தந்த பெருமகன்

தம்பையா புவனேந்திரன்

(முகாமையாளர், அச்சுவேலிக்கிளை, இலங்கை வங்கி)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை கொள் கிறோம்.

இருநூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை வங்கிக் கிளை களில் முதலிடத்தைப் பிடித்து இமாலய சாதனை படைத்த வீரனே!

கடந்தகால நிகழ்வால் நொந்து, நொடிந்து நிற்கதியான மக்களுக்கு வாரிவழங்கி விவசாயத் தொழிலுக்கு வழிகாட் டியது உங்கள் வள்ளல் குணமல்லவா!

கொடுத்த கடனை இராப்பகலாய் செயல்பட்டு அறவிட்டது உங்கள் கடமையின் உச்ச ஏணிப்படிகளல்லவா?

உங்கள் சேவை மேன்மேலும் வளர்ந்து மக்களினதும் வங்கியினதும் நெஞ்சங் களில் இடம்பெற வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்.....

கி.விஜயராஜா (பாபு),
சி.சிவராசா (பூலோகசிங்கம்)

(சி/571502)

மரண அறிவித்தல்

அ.ச.வி. மரியநாயகம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் - 8520)

கட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் யாழ். நகரை வசிப்பிடமாகவும் கொண்ட அ.ச.வி. மரியநாயகம் நேற்று (27.09.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வை.அந்தோனி - மற்றும் பாவிலாள் தம்பதியரின் அன்பு மகனும் றீற்றாவின் அன்புக் கணவரும் காமலீற்றாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பிளேவியன் - மேரி மக்டலின், மேரி கிறேசின் மருமகனும் கருணா, புளோரா, காலஞ்சென்ற பேடினன் விமலா மற்றும் கிறேஷியன் (MMC - யாழ்.நகர்), மணி, இராஜநாயகம் பிறீடா (கொழும்பு), அன்ரன் கிளாரிஸ் (நோர்வே), றெஜிசரஸ், ராஜா அஜென்டா (நோர்வே), றிச்மென்ட் குட்டி (நோர்வே), செல்லம் சறோ (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் அருட்சகோதரி றோஸ் மேரியின் (திருக்குடும்ப கன்னி யர்மடம்) உடன் பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - றீற்றா
புளோரன்ஸ், மகள் - காமலீற்றா.

70, 8ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி/571413)

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் செப்.28

வலிகாமம் கல்வி வலயத்துக்குட் பட்ட ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாட சாலை அதிபர் பதவிக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம் என்று வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-II, இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்தவர்களே இப்பதவிக்கு தகுதியான வர்கள். (ஒ-16)

செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணம் செப்.28

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவு வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், நெடுந்தீவு பகுதிகளில் உள்ள செஞ்சிலு வைச் சங்கக் கிளைகளுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். பிரிவின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேச லிங்கம் தெரிவித்துள்ளார். (204-7)

மீன் சந்தை புனரமைப்பு

யாழ்ப்பாணம் செப்.28

பாஷையூர் மீன் சந்தையின் புனர மைப்புப்பணிகள் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீன் சந்தைக் கட் டடத்தினுள் வியாபாரிகள் மீன்களை வைத்து விற்பனை செய்யக் கூடியவாறு சிமெந்தி னாலான மேடைகளும் புதிதாக அமைக் கப்பட்டுள்ளன. (204-26)

கெருடாவில் திறந்த பாடசாலைக்கு அதிகாரிகள் குழு விஜயம்

வடமராட்சி,செப்-27

வடமராட்சி கல்வி வலய முறை சாராக் கல்விப் பிரிவின் அனுசரனையுடன் இயங்கிவரும் கெருடாவில் பரந்தாமன் திறந்த பாடசாலையை மகரகம தேசிய கல்வி நிறுவக திறந்த பாடசாலைகள் துறைத் தலைவர் கலாநிதி திருமதி நந்தா வன்னி யாராய்ச்சி தலைமையிலான குழு அண்மை யில் பார்வையிட்டுச் சென்றுள்ளது. மேற்படி திறந்த பாடசாலை வார இறுதி நாள்களான சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இயங்கி வருகின் றமை குறிப்பிடத் தக்கது. (201-236)

கணி விற்பனைக்கு

நல்ல தண்ணீர்க் கிணறு, சுற்று மதில் என்பவற்றுடன் யாழ். கல்வி வலயத்துக்கு அருகில் இல.151, செம்மணிவீதி, ஆடிய பாதம் வீதி ஆகிய இருவழிப் பாதை கொண்ட 12 பரப் புக் காணி விற்ப னைக்குண்டு. விலை பேசித்தீர் மானிக்கலாம். பகுதி யாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: 0779051432

வீடு தேவை

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு: கிரான் பீற்றர் 0773427843

வீடு விற்பனைக்கு

யாழ். நகரினை அண்மித்த பகுதியில் 5 அறையுடன் கூடிய விசாலமான வீடு விற்பனைக்குண்டு மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்-0774746218

வீடு வளவு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் வைரவர் கோயிலடி ஒழுங்கை ஒன்றில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0774683485 திருமதி லோகேஸ்வரி நித்தியானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியம், ஆவரங்கால் மத்தி, யாழ்.பல்கலை.

அணிகள் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும், ஆண்களின் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியும், 'பி' பிரிவில் யாழ்.பல்கலைக்கழக அணியும் சம்பியன்களாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை இந்த ஆட்டங்கள் றக்கா வீதியில் அமைந்துள்ள கரப்பந்தாட்ட மைதானத்தில் இரவு மின்னொளியில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற செற் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இதில் சிறந்த வீராங்கனையாக காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த புகழரசி தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆண்கள் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதி ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து சங்கானை யூத் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய சங்கானை யூத் விளையாட்டுக்கழக அணியை 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

சிறந்த வீரனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் சிவதர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆண்கள் 'ஏ' பிரிவுக்கான இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்கினேஸ்வர விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய அச்சுவேலி விக்கினேஸ்வர கழக அணியை 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இதில் சிறந்த வீரனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வீரன் சொரூபன் தெரிவு செய்யப்பட்டார். (த-23)

சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டிய மெய்வன்மைப் போட்டிகளில் வென்றோர்

தென்மராட்சி கிழக்கு ,செப்.28

சர்வதேச அஞ்சல் தினத்தை ஒட்டி வடமாகாண அஞ்சல் திணைக்களம் தனது பிரிவில் இயங்கும் அஞ்சலக சமூகத்தினரிடையே நடத்திய மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

4×400மீற்றர் அஞ்சல் ஓட்டம் (ஆண்)

முதலாமிடம் -மன்னார், 2 ஆம் இடம் -யாழ்ப்பாணம், 3 ஆம் இடம் - வவுனியா.

சைக்கிள் ஓட்டம்

ஏ.சகாயானந் (மன்னார் அஞ்சலகம்), ரி.சிறீரஞ்சன் (அளவெட்டி அஞ்சலகம்), எம்.எம்.றிஸ்ஹன் (வவுனியா அஞ்சலகம்).

மரதன் ஓட்டம்

ஏ.அமிர்தரட்ணம் (மன்னார் அஞ்சலகம்), பி.கண்ணதாஸ் (வேலணை அஞ்சலகம்).

வலைபயம் எறிதல் (ஆண்)

என்.விக்கிரமசிறீ (வவுனியா அஞ்சலகம்), என்.பரமேஸ்வரன் (யாழ்ப்பாணம் அஞ்சலகம்), எஸ்.பிராங்ளின் (மன்னார் அஞ்சலகம்).

குண்டெறிதல் (ஆண்)

என்.பரமேஸ்வரன் (யாழ். அஞ்சலகம்), ரி.சூசைப்பிள்ளை (மன்னார் அஞ்சலகம்), என்.விக்ரமசிறி (வவுனியா அஞ்சலகம்).

ஈட்டி ஏறிதல் (ஆண்)

யு.பிரகலாதன் (யாழ். அஞ்சலகம்), எஸ்.பிராங்ளின் (மன்னார் அஞ்சலகம்), ஏ.அன்ரனி (மன்னார் அஞ்சலகம்).

நீளம் பாய்தல் (ஆண்)

பி.பிராங்ளின் (மன்னார் அஞ்சலகம்), ஐ.சியாம்சன் (மன்னார் அஞ்சலகம்), எச்.ஆர்.ரி.குறூஸ் (சிலாவத்துறை அஞ்சலகம்).

உயரம் பாய்தல் (ஆண்)

ஜே.ஜியாம்சன் (மன்னார் அஞ்சலகம்), ரி.கஜேந்திரன் (யாழ். அஞ்சலகம்), என்.பரமேஸ்வரன் (யாழ்.அஞ்சலகம்).

100 மீற்றர் ஓட்டம் (பெண்)

செல்வி.கே.கௌரி (சுன்னாகம் அஞ்சலகம்), கே.தனரூபினி (வவுனியா அஞ்சலகம்), ஏ.செல்வகுமாரி (பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம் யாழ்ப்பாணம்).

200 மீற்றர் ஓட்டம் (பெண்)

கே.கௌரி (சுன்னாகம் அஞ்சலகம்), ஏ.செல்வகுமாரி (அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம் யாழ்ப்பாணம்).

400 மீற்றர் ஓட்டம் (பெண்)

கே.கௌரி (சுன்னாகம் அஞ்சலகம்), ஏ.செல்வகுமாரி (அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம் யாழ்ப்பாணம்).

நீந்துதல் (ஆண்)

பி.தபோதரன் (சாவகச்சேரி அஞ்சல் அஞ்சலகம்), ஏ.அன்ரனி (மன்னார் அஞ்சலகம்), ஜி.கிளேறன்ஸ் (ஊர்காவற்துறை அஞ்சலகம்).

நடை ஓட்டம்

ஜி.கிளேறன்ஸ் (ஊர்காவத்துறை அஞ்சலகம்), ஏ.எமில் ராஜேஸ்வரன் (மன்னார் அஞ்சலகம்), ஆர். வசீகரன் (வல்வெட்டித்துறை அஞ்சலகம்).(த-122)

நாவாந்துறை றோ.கவை வீழ்த்தி சம்பியன் வென்றது யாழ்.சென்றல்

யாழ்ப்பாணம், செப்.28

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியுடனான ஆட்டத்தில் யாழ்.சென்றல் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்.சென்றல் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் யாழ்.சென்றல் அணி தன்னை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது. (த-23)

சூபசிங்கவின் 400 மீற்றர் சாதனை பதிவாகின்றது

வலி.வடக்கு,செப்.28

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 400 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வி.பி.சூபசிங்கவின் 49:2 செக்கன் பெறுபேறு புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய சாதனைகளைப் பதிவு செய்து வருகின்றது.

2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.சுபாஸ்கரன் 52 செக்கனிலும் 2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.சுபாஷ்கரன் 52 செக்கனிலும் 2010ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.வி.பி.சூபசிங்க 49:2 செக்கனிலும் 400 மீற்றரை ஓடிப் பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர்.

இதனடிப்படையில் எம்.வி.பி.சூபசிங்கவின் 49:2 செக்கன் என்ற பெறுபேறு புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.(த-86)

வயாவிளான் ம.வி. மூன்றாம் இடம்

வலி.வடக்கு,செப்.28

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயமும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 02 கோல்களைப் பெற்றுக் கொண்டது. கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் கோல் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 2:0 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (த-86)

குணபாலன் வித்தியாலய ஆண்டு விழா போட்டிகளில் வென்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், செப்.28

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு:

மென்பந்து கிரிக்கெட் போட்டி

முதலாமிடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாமிடம்- சில்லாலை றோ.க.வித்தியாலயம்.

உதை பந்தாட்டம்

முதலாமிடம்-புனித ஹென்றியரசர் கல்லூரி, இரண்டாமிடம்- சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரி, மூன்றாமிடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி.

கயிறு இழுத்தல்- ஆண்

முதலாமிடம்- புனித ஹென்றியரசர் கல்லூரி, இரண்டாமிடம்- சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மூன்றாமிடம்- ஆனைக்கோட்டை றோ.க.த.க.வித்தியாலயம்.

கயிறு இழுத்தல்- பெண்

முதலாமிடம்-சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், இரண்டாமிடம்- பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம், மூன்றாமிடம்- ஆனைக்கோட்டை றோ.க.த.க.வித்தியாலயம். (த-23)

பாடசாலை மாணவரிடையே வலைப்பந்தாட்டப் போட்டி

அச்சுவேலி, செப்.28

வவுனியா கல்வியியல் கல்லூரியின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்தில் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படுகின்றது.

கடந்த 25 ஆம் திகதி சனிக் கிழமை ஆரம்பித்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 40 பாடசாலை அணிகள் கலந்து கொண்டன.

15 வயதுப்பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப்பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டி நடைபெறும்.

வவுனியா வலைப்பந்தாட்டச் சங்கமும் தேசியகல்வியியல் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர் அணியும் இணைத்த நிலையில் நடத்திவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது. (த-11)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனான தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை முதற் படத்திலும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியை இரண்டாவது படத்திலும் மூன்றாம் இடத்தைப் பெற்ற வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பியன்ஸ் லீக் தொடரில் காலிறுதிச் சுற்று வேண்டும்

டேவிட் ஹசி கூறுகிறார்

சிட்னி, செப். 28

''சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடரில் காலிறுதிச் சுற்று வேண்டும்.''

- இவ்வாறு விக்டோரியா அணியின் தலைவரான டேவிட் ஹசி தெரிவித்துள்ளார்.

10 அணிகள் பங்கேற்ற சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடர், 'ஏ', 'பி' என 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதலில் லீக் சுற்று நடந்தது. லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இம்முறை, லீக் சுற்றின் முடிவில் 'ஏ' பிரிவில் தலா 6 புள்ளிகளுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் (இந்தியா), வாரியர்ஸ் (தென்னாபிரிக்கா), விக்டோரியா (ஆஸ்திரேலியா) ஆகிய அணிகள் முதலிடத்தில் இருந்தன. இறுதியில் ஓட்ட விகித அடிப்படையில் சென்னை, வாரியர்ஸ் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற்றன. இதனால், 4 லீக் போட்டிகளில் விளையாடி 3 வெற்றிகளைப் பெற்ற விக்ரோரியா அணி பெரும் ஏமாற்றத்துடன் வெளியேறியது.

இதேபோல 'பி' பிரிவில் தலா 4 புள்ளிகளுடன் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் (இந்தியா), லயன்ஸ் (தென்னாபிரிக்கா), மும்பை இந்தியன்ஸ் (இந்தியா) அணிகள் 2ஆவது இடத்தில் இருந்தன. இதில் ஓட்ட விகித அடிப்படையில் பெங்களூர் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது. இதனால் லயன்ஸ், மும்பை அணிகள் ஏமாற்றத்துடன் வெளியேறின.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே டேவிட் ஹசி மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்கு முன்னேற முடியாமல் போனமை பெரும் ஏமாற்றமளிக்கிறது. இத்தொடரில் எங்கள் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் ஓட்ட விகித அடிப்படையில் அரையிறுதி வாய்ப்புக் கிடைக்கவில்லை.

எனவே, அடுத்து நடக்கும் சம்பியன்ஸ் லீக் தொடரில், லீக் சுற்றுக்குப் பின்னர் காலிறுதிப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் எந்த ஒரு அணியும் ஏமாற்றத்துடன் வெளியேறும் நிலை ஏற்படாது.

இதுதவிர இம்முறை 10 அணிகள் மட்டுமே பங்கேற்றமையும் பின்னடைவாக அமைந்தது. இங்கிலாந்து அணிகள், உள்ளூர் போட்டிகள் காரணமாக பங்கேற்கவில்லை. இதனால் அடுத்துவரும் தொடரில் இங்கிலாந்து உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கும் வகையில் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். இதன் மூலம் லீக், காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டி என அட்டவணையைத் தயாரிக்க முடியும். - என்றார்.

பிரக்யான் ஓஜா எமக்கு நெருக்கடி கொடுப்பார்!

ஷேன் வோட்சன்

சண்டிகர், செப். 28

''இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய சுழற்பந்துவீச்சாளர் பிரக்யான் ஓஜா நெருக்கடி கொடுப்பார்.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரரான ஷேன் வோட்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக நடக்கவுள்ள டெஸ்ட் தொடர் குறித்துக் கருத்துக் கூறும் போதே வோட்சன் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்.

பயிற்சிப் போட்டியில் எமது துடுப்பாட்டம், பந்துவீச்சு என்பன சிறப்பாக இருந்தன. இருப்பினும் டெஸ்ட் தொடரில் இந்தியச் சுழற் பந்துவீச்சாளரான பிரக்யான் ஓஜா, எங்களுக்கு அதிக நெருக்கடி கொடுப்பார்.

ஏனெனில், பயிற்சிப் போட்டியில் அவரது பந்துவீச்சைச் சமாளிப்பது எமக்குச் சற்றுக் கடினமாக இருந்தது. அவர் பந்துவீசிய போது ஓட்டங்களைச் சேர்ப்பதும் மந்தமாக இருந்தது.

எனவே, அவரது பந்துவீச்சைக் கவனமுடன் எதிர்கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது விக்கெட்டுகளைப் பாதுகாப்பதுடன் ஓட்டங்களையும் சேர்க்க முடியும்.

பயிற்சிப்போட்டியில் எமது அணி செயற்பட்ட விதம் திருப்தியளிக்கிறது. இதனால், டெஸ்ட் தொடரில் சாதிப்போம் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

இத்தொடரில் முழுத் திறமையை வெளிப்படுத்தி கிண்ணத்தை வெல்வதற்காக கடுமையாகப் போராடுவோம். - இவ்வாறு ஷேன் வோட்சன் கூறினார்.

ஜிம்பாப்வேக்கு 'திரில்' வெற்றி

ஹராரே, செப்.28

அயர்லாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில், ஜிம்பாப்வே அணி கடைசிப் பந்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

ஜிம்பாப்வே சென்றுள்ள அயர்லாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி ஹராரேவில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற ஜிம்பாப்வே அணித் தலைவர் சிகும்புரா, களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதலில் பேட் செய்த அயர்லாந்து அணிக்கு தலைவர் போர்டர்பீல்டு (3), ஸ்டிர்லிங் (17), நியால் ஓபரையன் (0), கெவின் ஓபரையன் (2) உள்ளிட்ட 'டாப்-ஆர்டர்' பேட்ஸ்மேன்கள் ஏமாற்றம் அளித்தனர். அடுத்து வந்த ஒயிட் (47), வில்சன் (69), மூனே (22), ஜான்ஸ்டன் (23*) கைகொடுத்தனர். அயர்லாந்து அணி 47.3 ஓவரில் 200 ரன்களுக்கு 'ஆல்-அவுட்' ஆனது. ஜிம்பாப்வே அணி சார்பல் ரெயின்ஸ்போர்டு 4 விக்கெட் வீழ்த்தினார்.

சுலப இலக்கை விரட்டிய ஜிம்பாப்வே அணிக்கு மசகட்சா (0) மோசமான துவக்கம் கொடுத்தார். அடுத்து வந்த பரண்டன் டெய்லர் (27) ஆறுதல் அளித்தார். பின்னர் அபாரமாக ஆடிய' வந்த எர்வின் (23), கோவன்ட்ரி (27), கேப்டன் சிகும்புரா (41) கைகொடுத்தனர்.

ஜிம்பாப்வே அணியின் வெற்றிக்கு கடைசி பந்தில் ஒரு ரன் தேவைப்பட்டது. இந்நிலையில் ரெயின்ஸ் போர்டு, ஒரு இமாலய சிக்சர் அடிக்க, 2 விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. இதன்மூலம் ஜிம்பாப்வே அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டி ஹராரேவில் நாளை நடக்கிறது.

இந்திய அணியின் பயிற்சியாளராக கங்குலி விருப்பம்

புதுடில்லி, செப். 28

''இந்திய அணியின் பயிற்சியாளராகப் பணியாற்ற விரும்புகிறேன்.''

- இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரான சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வெற்றித் தலைவராக விளங்கியவர் சௌரவ் கங்குலி. 2008இல் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற இவர், ஐ.பி.எல். தொடரில், கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக உள்ளார்.

தற்போது இந்தியா சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இத்தொடர் குறித்துக் கருத்துக் கூறும்போதே கங்குலி மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்ற, துடுப்பாட்டத்தில் சாதிக்க வேண்டும். சஹீர்கான், ஹர்பஜன் உள்ளிட்டோர் அணிக்குத் திரும்பியிருப்பது பந்துவீச்சுப் பலத்தை அதிகரித்துள்ளது.

அதேவேளையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக துடுப்பாட்டத்தில் முழுத்திறமையையும் வெளிப்படுத்தும் பட்சத்தில் எளிதில் வெற்றிபெறலாம்.

பொதுவாக இந்திய மைதானங்கள் சுழற் பந்து வீச்சுக்குக் கைகொடுக்கும். இருப்பினும் பெங்களூரில் நடக்கவுள்ள 2ஆவது டெஸ்டின் ஆரம்பத்தில் சுழற்பந்துவீச்சுக் கைகொடுக்காது. ஆனால், மொகாலி டெஸ்டில் சுழற்பந்துவீச்சு அதிகம் ஒத்துழைக்கும். எனவே ஹர்பஜன் இத்தொடரில் சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

இந்திய அணியில் சுரேஷ் ரெய்னா, புஜாரா, முரளி விஜய் உள்ளிட்ட இளம் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர்கள் இதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் இந்திய அணியில் நீடிக்கலாம். உள்ளூர் போட்டிகளில் விளையாடிய அனுபவம் புஜாராவுக்குக் கைகொடுக்கும்.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள 4ஆவது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் குறித்த விதிமுறை, சச்சின் கூறியதுபோல சிக்கலாக உள்ளது. சிறந்த அணியை உருவாக்கக் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு அணியினரும் கடுமையாக உழைத்துள்ளனர். இருப்பினும் இது அணி நிர்வாகத்தின் பொறுப்பு என்பதால் முடிவு அவர்கள் கையில்தான் உள்ளது.

சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பாகிஸ்தான் வீரர்கள் மட்டும் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை. உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள வீரர்களும் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்குத் துணை புரியும் சூதாட்டத் தரகர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்திய அணியின் பயிற்சியாளராகச் செயற்படுவதற்கு அதிக விருப்பம் உள்ளது. வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் முழு மனதுடன் இதனை ஏற்றுக்கொண்டு சிறப்பாகச் செயற்படுவேன் என நம்புகிறேன். ஏனெனில், இந்திய அணியுடன் இது போன்று ஏதாவது தொடர்பு வைத்துக் கொள்ளவதை மிகப் பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். - இவ்வாறு கங்குலி கூறினார்.

அலோன்சா முதலிடம்

சிங்கப்பூர் கிராண்ட் பிரிக்ஸ் 'பார்முலா-1' கார் பந்தயத்தில், பெராரி அணியின் ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ அலோன்சா சம்பியன் பட்டம் வென்றார்.

சிங்கப்பூரில் 15ஆவது கிராண்ட் பிரிக்ஸ் 'பார்முலா-1' கார் பந்தயம் நடந்தது. இதில் பெராரி அணியின் ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ அலோன்சா முதலிடம் பிடித்தார். இவர் பந்தயத் தூரத்தை ஒரு மணி நேரம், 57 நிமிடங்கள், 53.579 வினாடிகளில் கடந்தார். இவரை அடுத்து 0.2 வினாடிகள் தாமதமாக வந்த ஆர்.பி.ஆர். ரெனால்ட் அணியின் செபஸ்டியன் வெட்டேல் 2ஆவது இடத்தைப் பிடித்தார்.

கொமன்வெல்த் கிராமத்தில் வீரர்களுக்கு பாம்பு பிரட்டல்

புதுடில்லி, செப். 28

கொமன்வெல்த் போட்டி தொடர்பான சர்ச்சைகளில் இன்னொரு அதிர்ச்சி. இம்முறை வீரர்கள் தங்கும் அறையில் பாம்பு ஒடுவதைப் பார்த்து, தென்னாபிரிக்கக் குழுவினர் மிரண்டு போயுள்ளனர்.

வீரர்களின் உயிரைப் பணயம் வைத்து, விளையாட்டுக் கிராமத்தில் தங்க முடியாது என அதிரடியாக தெரிவித்துள்ளனர்.

பல்வேறு சீர்கேடுகளுக்கு மத்தியிலும் ஆபிரிக்கக் குழுவினர் மட்டும் விளையாட்டுக் கிராமத்தில் தங்க சம்மதம் தெரிவித்தனர். ஆனால், இவர்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது.

அந்த நாட்டு வீரர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்ட அறையில் பாம்பு ஒன்று ஒடுவதை அவர்கள் பார்த்துள்ளனர். இதனால், அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

இது குறித்து தென்னாபிரிக்கத் தூதர் ஹரிஸ் மபுலேலா டீஜேக் கூறியவை வருமாறு:-

எமது அறையில் பாம்பு ஒன்றைப் பார்த்தோம். இது இந்திய வகையைச் சேர்ந்ததா என்பது பற்றி எமக்குத் தெரியாது. பாம்பு இருக்கும் அறையில், எங்கள் வீரர்களைத் தங்க வைக்க முடியாது. அவர்களது உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது மிகுந்த கவலை அளிக்கிறது.

இதுதவிர, தரைப்பகுதி முழுவதும் நீர் நிரம்பியுள்ளது. மேற்கூரையும் சரிபதமாக உள்ளது. ஒட்டுமொத்தமாக, அறைகளின் நிலைமை மோசமாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் வரை, விளையாட்டுக் கிராமத்தில் தங்க முடியாது.

தற்போதைக்கு போட்டியிலிருந்து விலகும் உத்தேசம் இல்லை. அனைத்து வசதிகளும் செய்து முடிக்கப்பட்ட பின்னர், எங்களது வீரர்கள் போட்டியில் பங்கேற்பர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டம்

கொமல்வெலத் போட்டி நடக்கும் மைதானங்களில் வெளிநாட்டு வீரர்களைக் குறி வைத்து பாகிஸ்தானின் லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத இயக்கம் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தக்கூடும் என்று இந்திய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

கடந்த வாரம் டில்லி ஜூம்மா மசூதியில் தைவான் நாட்டு பயணிகள் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், அடுத்த கட்டமாக கொமன்வெல்த் போட்டியின்போது தாக்குதல் நடத்தப்போவதாக இ-மெயில் மூலம் மிரட்டல் விடுத்திருந்தனர். இதை உறுதிப்படுத்துவது போல லண்டனிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையில், இங்கிலாந்து வீரர்களைக் குறி வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் எனவும், முடியாத பட்சத்தில் ரசிகர்களை கடத்த முயற்சி செய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியை முப்படையினருக்கும் கற்பிக்க பாதுகாப்பு செயலர் உத்தரவு

கொழும்பு, செப். 28

முப்படைகள் மற்றும் பொலி ஸில் பணி யாற்றும் அனைவருக்கும் தமிழ்மொழியைக் கற்பிப்ப தற்கு நடவடிக்கை எடுக் குமாறு சிறிலங்கா பாதுகாப்பு செயலர் கோத்த பாய ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் பாது காப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு உரிய வழிகாட் டல்களை வழங்கி உள்ளார். வடக்கு, கிழக்கில் பணி யாற்றும் படை அதிகாரி கள் அங் குள்ள மக்களுடன் தமிழில் தொடர் புகளை பேணும் வகையில் தமிழ் மொழி அறிவைப்பெற்றிருக்கவேண்டும் என்று அவ ரது பணிப்புரையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

படிவங்கள் விற்பனையாகின்றன

பரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

1) நிர்வாகப் பணிப்பாளர் : தரம் - I
2) பணிப்பாளர் தொழில்நுட்பம் : தரம் - I
3) பணிப்பாளர் அபிவிருத்தி ஆலோசகர் : தரம் - I
4) சபையின் செயலாளர் : தரம் - IV
5) உதவி ஆளணி முகாமையாளர் : தரம் - IV
6) நிர்வாக அலுவலர் : தரம் - V

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம் — வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம்

வீடு வாடகைக்குத் தேவை
யாழ். நகரின் பிரதான வீதிகளில், யாழ். நகரினை அண்டியதாக வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : ஒரியான் பீற்றர்
0773427843

விசேட கருத்தரங்கு
அழகியல் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல்
புதன், சனி, ஞாயிறு 1 மணி தொடக்கம் 5 மணி வரை
★ 9ஆம் திகதி நடை பெறவுள்ளது. இப்பரீட்சைக்கான தகவேகள் ஆசிரியரின் வழிகாட்டி நூல்கள் பிரபல புத்தக நிலையங்களிலும் வருப்பிரிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
★ யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்பிரப்புகள் பிரிவு,
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

விற்பனையாகின்றது
புதிய பொது அறிவு - 2011
போட்டிப் பரீட்சைக்கானது
இத்துடன் இலவச 400 ரூபா நுண்ணறிவு வழிகாட்டி
5-10-2010 வரை
By : P.காலிதாசன்
பூபாலசிங்கம் அன்னை புத்தகசாலை

மானிப்பாயில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(பாத பீடம் தரிசை தெரியை கற்றுதல் ரீதம் 100% நீங்கல் Mobile Phone களை முத்தி கொடுக்க முடியும்)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் : 30/09/2010 நேரம் மாலை 4 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- UNI - TECHNOLOGY
ICT Education Trainers,
Jaffna Road. Manipay
T.P No : - 021 - 7429325 / 0777 110862

ELECTRONIC REPAIRS
HOT LINE 0777425974
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems
And all electronic Equipments
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொழகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் மனுவின் விசார ணையை உயர்நீதிமன்றம் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பாது காப்புச் செயலாளர், இராணுவத் தளபதி உட்பட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கண்ணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மீள் குடியமர்வுக்கான ஆரம்ப பணிகள் இன்று இடம்பெறும் என்றும் மீள்குடிய மர்வு படிப்படியாக நடைபெறும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெவயா விளான் மகாவித்தியாலயத்தில் இன்று இடம்பெறும் உயர்மட்டக் கலந்துரை யாடலில் மீள் குடியமர்வு தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரி விக்கப்பட்டது.

வலி.வடக்கில் கண்ணிவெடிகள் அகற் றப்பட்ட பிரதேசங்களின் விவரங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அந்த இடங்களில் சில வேளைகளில் இன்று மீள்குடியேற்றம் இடம் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை வலி.வடக்கில் கண்ணி வெடி அகற்றப்பட்ட உறுதிச் சான்றிதழ் கிடைத்தால் மட்டுமே தேசிய பாதுகாப்புச் சபை மீள் குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கும். எனவே யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இருவரும் விரைவாக அப் பிரதேசத்தில் முழுமை யாக கண்ணிவெடி அகற்றி மக்களின் மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுதும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என் றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-ஐ-15)

10 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளுக்கு நாள் மக்கள் செல்வாக்கு அதி கரித்து வருகின்றது என்றும் அவர் சொன்னார்.

ஐ.தே.கட்சிக்குள் குழப்பம் நிலவு கின்றது என வெளிவரும் செய்திகளால் மக்கள் குழப்பமடையக்கூடாது. ஒரு காலகட்டத்தில் பின்தங்கியிருந்த கட்சி ஜே.ஆர்.ஜயவர்தனவின் அயராத முயற் சியால் நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பெற்றது.

இன்றைய சூழ்நிலையிலிருந்து கட்சியை மீட்டு வெற்றிப் பாதையில் இட் டுச் செல்ல அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு அவர் சொன்னார். (இ-01)

இடம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர் என்று தெரிவித்த அடைக் கலநாதன் எம்.பி. இவர்களை வேறு இடங்களில் குடியேற்ற வேண்டும் என்று அரசுக்குப் படைத் தரப்பு ஆலோசனை கூறி வருகின்றது என்வும் குற்றம்சாட் டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சின்ன முறிகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்கள் சொந்த இடங்களில் குடியமர இராணுவத் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடி யாது. அந்த மக்கள் அவர்க எது சொந்த இடங்களிலேயே மீள்குடிய

மர்த்தப்படவேண்டும். இந்த விடயத் தில் தடைகள் ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சாத்வீக ரீதியாக உண்ணா விரதத்தை ஆரம்பிக்கும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரி வித்தார்.

(ஒ-சி)

வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்தர்ப்பத்தில் மதுபோதையிலிருந்த ஏனைய ஐவரும் போத்தல் ஒன்றை உடைத்து சக சிப்பாயைக் குத்திப் படு கொலை செய்தனர்.

இவ்வாறு இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு வொன்றும் நியமிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் கைய டக்கத் தொலைபேசி மூலம் குற்றப்பு லனாய்வுப் பிரிவினர் ஐவரையும் கைது செய்ய முடிந்தது.

கைதுசெய்யப்பட்டவர்கள் தற்போது அநுராதபுரத்திலுள்ள சிறைச்சாலை யொன் றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் கெப்பிற்றி கொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த திமுது பிரியங்கர (வயது - 23) என்ற இராணுவச் சிப்பாயே படுகொலை செய்யப்பட்டுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

வயாவிளான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை ஆளுநர் ஆகியோரிடம் கையளிக்கவுள்ளார். இன்னிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குபற் றுவார்.

இன்று காலை 9 மணி மணி முதல் இடம்பெறும் இந்நிகழ்வில் மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப் பட விருக்கின்றன.

1990ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை இடம் பெயர்ந்து உரும் பிராய் தனியார் வீடுகளில் வசதி கள் ஏதுமற்றநிலையில் இயங்கி வந்தது.

தற்போது வளாவிளான் மகா வித்தி யாலயத்தில் துப்பரவுப் பணிகள் யாவும் நிறைவு பெற்றி ருக்கம் நிலையில் கற்றல் செயற் பாடுகள் இன்றுமுதலி ஆரம்பிக் கப்படவுள்ளன.

(ஒ-ஐ-9-86)

முன்னாள் புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படும் தடுப்புக் காவலாக அமைந்துள்ளது.

சுதந்திரத்துக்கான உரிமை, நியாயமான விசாரணைக்கான மற்றும் நியாயமான சட்ட ரீதியான வழி முறைகளை அவர்க ளுக்கு வழங்குவது போன்றவைகளை இந்தத் தடுப்புக் காவல் தடுக்கிறது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பற்றது

போர் முடிந்த நிலையில் களத்தில் இருக்கும் நிலைமைகள் நாட்டின் இருப்புக்கு ஓர் அச்சுறுத்தலாகக் கருதமுடியாது. எனவே, அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்து வதனை நியாயப்படுத்த முடியாது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பி னர்கள் ஒரு சட்ட ரீதியான காருணியத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் புனர்வாழ்வு முயற்சிகளுக்கான சர்வதேச உதவி, இந்த நடவடிக்கையை சர்வதேச சட்டங்கள் மற்றும் தரவுகளின்படியே எடுக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே தரப்படுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வாறு எந்த நிபந்தனைகளும் இல்லாது சர்வதேச உதவி கள் தரப்பட்டால் அது நியாயமற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்குச் சர்வதேச சமூகம் ஒத்திசைவதாகச் செல்லும் ஆபத்து இருக்கிறது.

விசாரணை இல்லாது தண்டனையா?

இலங்கையில் இவ்வாறான தடுப்புக் காவல்கள் - கைது அவச ரகாலச் சட்ட விதிகளின் கீழும் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் தின் கீழும் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள், புனர்வாழ்வு நடவடிக்கை என்ற பெயரில் இரண்டு ஆண்டுகள் வரை எந்தவிதக் குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படாமல் தடுத்து வைக்கப்படுவதை அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ விதிக்கப்படும் விசாரணை அல்லாத தண்டனையாகும்.

எனவே, இலங்கை அரசு அவசரகாலச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அத்துடன், பயங்கரவாதத் தடைச்சட் டத்தில் உள்ள சர்வதேச சட்டத்துக்கு ஒவ்வாத பிரிவுகளை விலக் கிக் கொள்ளவேண்டும். அல்லது விலகிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, யுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும். அல்லது அவர்களுக் குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd
கணனிகள் (ASSEMBLE PC), BRANDED கணனிகள் (HP), LAPTOPS (HP, DELL) மற்றும் அதன் உதிரிப்பாகங்கள்,
PRINTER, SCANNER அனைத்தும் எமது நிறுவனத்தில் மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.
PROCESSOR - 2.70 GHz
MOTHER BOARD - ASUS G31
RAM - KING 1GB
H.D.D - 500 GB
DVD WRITER - SAMSUNG
KEY.B/MOUSE - POWERLOGIC
UPS - POWER iii
MONITOR - HP COMPAQ
3 year warrnty
51900/-
கணனியை பெற்றுக் கொள்பவர்களுக்கு COMPUTER TABLE, HEAD PHONE என்பன இலவசமாக வழங்கப்படும்
எம்மிடம் Net Work சம்மந்தமான அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்
D LINK Router - 4900/- (3 year W) Free Head Phone
TP LINK Router - 4500/- (1 year W) Free Head Phone
எம்மிடம் ADSL Router கொள்வனவு செய்பவர்களுக்குஇலவச இணைப்புக்கள் செய்து தரப்படும்
NALIN information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166,0777667974

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org